REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 9 சனிக்கிழமை


# தினகரன்

THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 85 | Saturday 09, April, 2022 | 12 பக்கங்கள் | 30/-

## டொலரின் விற்பனை பெறுமதி ரூ 321 ஆனது

### கொள்முதல் பெறுமதி ரூ. 310.88 சதம்



இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலரின் விற்பனை பெறுமதி 321 ரூபா 49 சதம் வரை அதிகரித்துள்ளது. அத்துடன், அமெரிக்க

06

## மக்கள் போராட்டங்களில் பின்னணியில் எதிர்க்கட்சி

### பதவிக்காலம் வரை பதவி வகிப்பேன் –ஜனாதிபதி



எனக்கு எதிரான போராட்டங்களை மக்கள் முன்னெடுக்கவில்லை. எதிரணியினரே மக்கள் பின்னால் நின்று போராட்டங்களை நடத்துகின்றனர் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், போராட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் எனது ஜனாதிபதி பதவிக்குரிய காலம் வரை நான் பதவியில் தொடர்ந்து நீடிப்பேன். அன்று எனக்கு எதிராகக் களமிறக்கப்பட்ட

06

## IMF உதவி பெற்றுக் கொள்வது காலத்தின் தேவை

### சபையில் அறிக்கையை சமர்ப்பித்து ரஞ்சித் பண்டார எம்.பி உரை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்று நாடு எதிர்கொண்டுள்ள பாரிய நெருக்கடி நிலைக்கு தீர்வு காண வேண்டியது அவசியமென பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையை சமர்ப்பித்து அது தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

06

## அடுத்த வாரம் புதிய அமைச்சரவை அமைச்சுப் பணிகள் யாவும் சுமுகம்

### சபையில் கஞ்சன விஜேசேக்கர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



புதிய அமைச்சரவை அடுத்த வாரம் நியமிக்கப்படுமெனவும் இராஜாங்க அமைச்சர்கள் அதுவரை அமைச்சுக்களில் பணியாற்றி வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஜனாதிபதிக்கு முகம் கொடுக்க முடியாததாலேயே எதிரணி பாராளுமன்றத்துக்கு தாமதமாக வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டு நிலைமை தொடர்பில் நேற்றும் பாராளுமன்றத்தில் சர்ச்சை ஏற்பட்டது. நாட்டு நிலைமை தொடர்பாக எதிரணி எம்.பிக்கள் நேற்றும்

06

### நாடு எவ்விதத்திலும் வங்குரோத்து அடையவில்லை

# ஒரு சிலரது தவறான தீர்மானங்களால் நாட்டில் நெருக்கடி நிலை உருவானது



### ஜனாதிபதிக்கு முழுமையான ஆதரவு வழங்குவோம்

- நாட்டுக்குள் டொலர் வரும் வழிகளை உருவாக்க வேண்டும்
- IMF இடம் 03 பில்லியன் டொலரை 03 வருடத்தில் பெற நடவடிக்கை
- நிதி அமைச்சராக அறிவித்து அமைச்சர் அலி சப்ரி உரை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். இந்நிலையில் ஸ்திரத்தன்மையை பேணினால் மாத்திரமே தற்போதைய நெருக்கடி நிலைமையிலிருந்து மீள முடியும். அரச முறை கடன் செலுத்தல் மீள்பரிசீலனை செய்யப்பட்டு கடன் செலுத்தலுக்காக கால அவகாசம் பெற்றுக் கொள்வது அவசியமாகுமென நிதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நேற்று (08) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதிய அறிக்கை மீதான விவாதத்தில் நேற்று உரையாற்றுகையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்தை பொறுப்பேற்கவும், பிரச்சினைக்கு தீர்வு காணவும் எதிர் தரப்பினர்

06



இலங்கை மத்திய வங்கியின் தலைவராக கலாநிதி நந்தலால் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்டபோது பிடிக்கப்பட்ட படம். அருகில் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தையும் காணலாம்

### சரியாக நடவுங்கள் அல்லது வழிவிட்டு விலகுங்கள்



## நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர வேண்டிய நிலை

பாராளுமன்றில் சஜித் பிரேமதாச எச்சரிக்கை

03

## IMF உடன் அரசு கட்டாயமாக கலந்தாலோசிக்க வேண்டும்

### தாமதித்தால் நாடு பேரழிவை சந்திக்கும்

38 துறை சார்ந்த ஏற்றுமதியாளர் சங்கங்கள் கூட்டாக அரசிடம் வேண்டுகோள்

**அருள் சத்தியநாதன்**

இந்த நீண்ட விடுமுறையின் பின்னர் இலங்கை பொருளாதார நிலை மேலும் சிக்கலடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

06




## சதொசவிடமிருந்து புத்தாண்டு நிவாரணப் பொதிகள்

### சலுகை விலையில் வழங்குகிறது வர்த்தக அமைச்சு




சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு லங்கா சதொச விற்பனை நிலையங்களூடாக 05 அத்தியாவசிய பொருட்களடங்கிய நிவாரணப் பொதியை சலுகை விலையில் வழங்கவுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி, 05 கிலோ நாட்டரிசி, 05 கிலோ சம்பா அரிசி, 400 கிராம் பால் மா,

06

## புத்தாண்டு தினங்களில் மின்வெட்டு இல்லை

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

சித்திரை புத்தாண்டு தினங்களான 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் மின் வெட்டு மேற்கொள்ளப்படமாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருள் தற்போது பெற்றுக்

06




## ஏப்ரல் 19ஆம் திகதியே பாராளுமன்றம் மீண்டும் கூடும்

### எதிர்க்கட்சியின் வேண்டுகோள் நிராகரிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் திங்கட் கிழமையும் பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு எதிர்க்கட்சி முன்வைத்த வேண்டுகோளை சபை முதல்வர் தினேஷ் குணவர்தன நிராகரித்தார். அவ்வாறான தேவை இருந்தால் கட்சித் தலைவர்கள்

06

### நாட்டு நிலைமை சீராகும் வரை

## மூன்று மாதங்களுக்கு சபைக்கு வரமாட்டேன்

சாமர சம்பத் எம்.பி நேற்று தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

நாட்டு நிலைமை சீராகும் வரை பாராளுமன்றத்துக்கு வருகை தராமல் இருக்க முடிவு செய்துள்ளதாக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை முன்வைத்த அவர் இன்றுள்ள பிரச்சினைகள் தீரும் வரை பாராளுமன்றத்துக்கு

06

## ஏப்ரல் இறுதி வரை மாத்திரமே பிரதி சபாநாயகர் பதவியில் நீடிக்க ரஞ்சித் தீர்மானம்

பாராளுமன்றில் நேற்று அறிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று ஏப்ரல் இறுதி வரை மாத்திரம் பிரதி சபாநாயகர் பதவியில் நீடிப்பதாக பிரதி சபாநாயகர்

06

## மிக வேகமாக பரவி வரும் புதிய வகை XE ஒமிக்ரோன்

### அச்சமடையாவிடினும் அவதானம் தேவை
### பிரபல மருத்துவ நிபுணர்



புதிய வகை XE என்ற ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் இங்கிலாந்தில் மிக வேகமாக பரவி வருகிறது. இது இந்தியாவில் பரவி 04ஆவது அலையை உருவாக்கி விடுமோ என்ற அச்சம் சிலரது மனதில் எழுந்துள்ளது. ஆனால் XE வைரஸ் பற்றி பயப்படத்தேவை இல்லையென்று பிரபல மருத்துவ நிபுணர் ககன் தீப் கூறியுள்ளார்.

06

## IMF உடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு EU வலியுறுத்து

இலங்கை குறித்து கூட்டறிக்கை ஒன்றும் வெளியீடு

03

## நாட்டுக்கு அவசியமான நேரத்தில் இராஜதந்திர ரீதியில் செயற்படவும்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

03

## மேலும் 04 இலங்கையர் தமிழகத்தில் தஞ்சம்

### புகலிடம் கோரி வந்ததாக தெரிவிப்பு



மன்னாரிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் புகலிடம் கோரி தமிழ் நாட்டின் தனுஷ்கோடி பகுதியை சென்றடைந்துள்ளனர்.

மன்னார் முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த தம்பதியினர் தமது 10 வயதான மகள் மற்றும்

06

## IMF அறிக்கையை அரசு நிராகரிக்கவில்லை

### முன்னெடுப்புகள் இடம்பெறுகின்றன

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை அரசாங்கம் நிராகரிக்கவில்லை. உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர்

06

### ஒழுங்கீனமாக நடந்த

## இரு எம்.பிக்களை வெளியேற்றிய சபாநாயகர்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

சபையில் அநாகரீகமாக நடந்து கொண்ட இரு எம்.பிக்கள் நேற்று சபையிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன் சபை நடவடிக்கைகளும் இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டன.

சபையில் நேற்று நடைபெற்ற வாக்குவாதத்தின்போது பொருத்தமற்ற வார்த்தைகளை பயன்படுத்தி போத்தல் மூலம் தாக்குதலை மேற்கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.சமிந்த விஜேசிறி, பொதுஜன பெரமுன எம்.பி திஸ்ஸ குட்டியாராச்சி ஆகிய இருவரும் சபாநாயகர் மஹிந்த யாப்பா

06

## தமிழக முதல்வரின் நேசக்கரத்துக்கு முஷாரப் எம்.பி நன்றி




இலங்கை தமிழ் மக்கள் எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு வழங்கும் நோக்குடன் தமிழக முதல்வரின் இலங்கைக்கான நேசக்கரத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம். முஷாரப்

06

# சர்வதேச செய்திகள்

## இம்ரான் கான் மீது மீண்டும் நம்பிக்கையில்லா தீர்மானம்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தன் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தை தடுத்தது சட்டவிரோதம் என அந்நாட்டின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில் மீண்டும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொண்டுள்ளார்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தில் இம்ரான் கான் தோல்வியை சந்திப்பார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவரது ஆளும் கட்சி அந்த வாக்கெடுப்பை முடக்கியது.

தொடர்ந்து பாராளுமன்றத்தை கலைத்த அவரது அரசு திடீர் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தது.

கோபமடைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். இந்நிலையில் உச்ச நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை அளித்த தீர்ப்பில் நம்பிக்கையில்லா தீர்மானம் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த இம்ரான் கான், 'பாகிஸ்தானுக்காக நான் தொடர்ந்து போராடுகிறேன். கடைசிப் பந்து வரை நான் போராடுவேன்' என்று தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக வியாழக்கிழமை அரசு சட்டக்குழுவினரை சந்தித்த இம்ரான் கான் உச்சநீதிமன்றம் அறிவிக்கும் எந்த முடிவையும் ஏற்றுக் கொள்வோம் என்றும், எந்த வெளி நாட்டுச் சதியையும் வெற்றியடைய விடமாட்டோம் என்றும் கூறியிருந்தார்.

இந்தத் தீர்ப்பை அடுத்து நீதிமன்றத்துக்கு வெளியே காத்திருந்த பல டஜன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். நீதிமன்றம் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளது என்று தேசிய சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் ஷெஹ்பாஸ் ஷரீப் உள்ளூர் செய்தி நிறுவனங்களுக்கு தெரிவித்தார்.

எனினும் சீற்றமடைந்த இம்ரான் கான் ஆதரவாளர்கள் நீதிமன்றத்திற்கு வெளியில் அமெரிக்க எதிர்ப்பு கோசங்களை எழுப்பியதோடு, கலகமடக்கும் பொலிஸார் இரு தரப்பையும் பிரிக்கும் வகையில் நிலை கொண்டனர்.

இன்று சனிக்கிழமை பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டி வாக்கெடுப்புக்கான செயற்பாட்டை மேற்கொள்ளும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் மோசமான தோல்வி ஒன்றை தவிர்ப்பதற்கு இம்ரான் கான் தமது பதவியை இராஜினாமா செய்யும் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இம்ரான் கானை பதவி நீக்கிய பின் அடுத்த தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் 2023 ஒகஸ்ட் மாதம் வரை புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

ஊழல் மற்றும் பதவியில் இருப்பவர்களுக்கு நெருக்கமானவர்கள் ஆட்சியில் செலுத்தும் ஆதிக்கம் ஆகியவற்றை மாற்றுவதாக கூறி 2018ஆம் ஆண்டு பதவியேற்றார் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான். வருக்கு ஆதரவாளர்கள் உள்ளனர் என்றபோதும், விலையேற்றம் மற்றும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளால் பெரும்பான்மையான மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துள்ளார். கடந்த வாரம் தனது பாராளுமன்ற பெரும்பான்மையையும் இழந்தார்.

எந்தவொரு ஆட்சிக்கும் மிகப்பெரிய துணையாக இருக்கக்கூடிய இராணுவத்தின் ஆதரவையும் கூட இம்ரான்கான் இழந்துவிட்டதாக அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, பாகிஸ்தானில் நிலவும் அரசியல் கொந்தளிப்பின் மற்றொரு பகுதியையும் குறிப்பிடுகிறது.

இதுவரை, ஊழல் குற்றச்சாட்டுகள், இராணுவத்தின் அதிகார போட்டி என ஏதோ ஒரு காரணத்தால், எந்தவொரு பிரதமரும் முழுமையாக தனது பதவிக்காலத்தை முடித்ததில்லை. 75 ஆண்டுகால சுதந்திர பாகிஸ்தானில் 33 ஆண்டுகள் இராணுவ ஆட்சிதான் நடைபெற்றுள்ளது.

## தரையிறக்கும்போது விபத்து: இரண்டாகப் பிளந்த விமானம்

கோஸ்டா ரிக்கா விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறங்கிய போயிங் 757200 சரக்கு விமானம் விபத்துக்குள்ளானது. தரையிறங்கும்போது ஓடுபாதையிலிருந்து விலகிய அந்த டி.எச்.எல் விமானம், இரண்டாகப் பிளந்தது.



விமானிகளுக்குக் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒருவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான விமானத்தின் வால் பகுதி துண்டிக்கப்பட்டது. அதன் ஓர் இறக்கை உடைந்தது

குவான்தமலாவுக்குப் புறப்பட்ட அந்த விமானத்தின் ஹைட்ரோலிக் அமைப்பில் கோளாறு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் விமானம் புறப்பட்ட சற்றுநேரத்திலேயே அவசரமாகத் தரையிறங்க நேர்ந்தது.

விபத்து குறித்து விசாரணை நடத்தப்படும் என்று டி.எச்.எல் கூறியது.

## மனித உரிமைகள் பேரவையில் இருந்து ரஷ்யா இடைநிறுத்தம்

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அதன் மனித உரிமைகள் பேரவையில் இருந்து ரஷ்யாவைத் இடைநிறுத்துவதற்கு வாக்களித்துள்ளது. அதன் விளைவாக ரஷ்யா அந்த அமைப்பிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளது.



பொதுச் சபையின் வாக்கு சட்டவிரோதமானது என்றும் அரசியல் நோக்கத்துடன் செய்யப்பட்டது என்றும் ரஷ்யா சாடியது. மனித உரிமை பேரவையில் இருந்து ரஷ்யாவை நீக்கும் தீர்மானத்தை அமெரிக்கா வழிநடத்தியது.

உக்ரைன் மீது படையெடுத்ததற்கு ரஷ்யாவுக்குக் கிடைத்த பதிலடி அது என்று அமெரிக்கா கூறியது. ரஷ்யாவுக்கு எதிராக 93 உறுப்பினர்களும் அதற்கு ஆதரவாக 24 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

உக்ரைனில் ரஷ்யாவின் பிடியில் இருந்த தலைநகர் கியேவுக்கு அருகில் உள்ள புச்சா நகரில் பொது மக்களின் சடலங்கள் வீதிகளில் சிதறிக் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த வாக்கெடுப்புக்கு முன்னர் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தரும்படி உக்ரைன் தூதுவர் செர்கி கிஸ்லிட்சியா உறுப்பு நாடுகளை வலியுறுத்தினார்.

இதில் இந்தியா, இலங்கை 54 நாடுகள் வாக்களிப்பை தவிர்த்துக் கொண்டன.

58 உறுப்பினர்கள் வாக்களிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இருந்து நீக்கப்படும் இரண்டாவது நாடு ரஷ்யா. 2011இல் லிபியா அதிலிருந்து நீக்கப்பட்டது.

## டெல் அவிவில் இருவரை கொன்ற பலஸ்தீன ஆடவர் சுட்டுக்கொலை

இஸ்ரேலின் டெல் அவிவில் மதுபான விடுதி ஒன்றில் துப்பாக்கிச் சூடு நடத்தி இருவர் கொல்லப்பட்டு மேலும் 12 பேருக்கு காயம் ஏற்படுத்திய பலஸ்தீனர் ஒருவரை இஸ்ரேலிய பாதுகாப்பு படை சுட்டுக் கொன்றதாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரைச் சேர்ந்த அந்த ஆடவர் ஜப்பாவுக்கு அருகில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பரபரப்பான டெசன்ஹோப் வீதியில் இருக்கும் மதுபான விடுதியில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்திய பின் தாக்குதல் நடத்தியவரை தேடும் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது.

முன்னதாக 13 பேர் கொல்லப்பட்ட இஸ்ரேலில் இடம்பெற்று வரும் தாக்குதல்களின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

29 வயதான ராத் ஹசம் என்ற துப்பாக்கிதாரி நான்கு மைல்களுக்கு அப்பால் பள்ளிவாசல் ஒன்றுக்கு அருகில் மறைந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். இஸ்ரேலிய பயங்கரவாத தடுப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவுடன் சிறிது நேரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் அவர் கொல்லப்பட்டுள்ளார்.

அண்மைய தினங்களாக தொடர்ந்து இடம்பெற்று வரும் இவ்வாறான தாக்குதல்களால் இஸ்ரேலில் ஏற்கனவே உஷார் நிலை அதிகரிக்கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னரான பல உயிரிழப்புகளைக் கொண்ட காலமாக இது மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் ரயில் நிலையத்தில் ரொக்கெட் வீச்சு: 30 பேர் பலி

உக்ரைனின் கிராமடோர்ஸ்க் நகரிலுள்ள ரயில் நிலையத்தில் ரஷ்யா நடத்திய ரொக்கெட் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டு 100க்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாக அரச ரயில் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



உக்ரைனின் கிழக்கு பகுதியில் தொடர்ந்து இயங்கி வரும் ரயில் நிலையமாக இந்த ரயில் நிலையம் உள்ளது என டொனெட்ஸ்க் ஆளுநர் தெரிவித்துள்ளார். தாக்குதல் இடம்பெறும்போது அங்கிருந்து தப்பிச் செல்வதற்காக ஆயிரக்கணக்கானோர் அங்கு இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு ரொக்கெட் குண்டுகள் ரயில் நிலையத்தில் விழுந்ததாக உக்ரைனிய ரயில் நிறுவன தலைவர் குறிப்பிட்டுள்ளார். கிழக்கு உக்ரைனில் இருந்து வெளியேறுவதற்கான பிரதான பாதையாக கிராமடோர்ஸ்க் உள்ளது.

எனினும் இந்த தாக்குதலை மறுத்திருக்கும் ரஷ்யா, இது உக்ரைனின் ஆத்திரமூட்டும் செயல் என்று குறிப்பிட்டுள்ளது.

தலைநகர் கியெவில் இருந்து பின்வாங்கிய ரஷ்ய படை தற்போது கிழக்கு உக்ரைனில் தாக்குதலை தீவிரப்படுத்துவதற்கு படைகளை குவித்து வருவதாகக் கூறப்படுகிறது. இதனை ஒட்டி கிழக்கு உக்ரைனின் சில பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி உள்ளூர் நிர்வாகங்கள் வலியுறுத்தி வருகின்றன. ரஷ்யா தனது தாக்குதல்களை திசை திருப்பி இருக்கும் நிலையில் கிழக்கு உக்ரைனில் உள்ள பொது மக்கள் வெளியேறுவதில் நெருக்கடியை சந்தித்திருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## ஆப்கானியரின் பொருளாதார நிலை தொடர்பில் ஐ.நா கவலை

தலிபான்கள் அட்சிக்கு வந்த பின்னரான ஆப்கானிஸ்தான் மக்களின் மோசமான பொருளாதார நிலை குறித்து கவலை வெளியிட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், அந்த நாட்டில் மில்லியன் கணக்கான மக்கள் பொருளாதார சவால்களை எதிர்கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளது.



'மனிதாபிமான நடவடிக்கைகள் மிக முக்கியமானதாக இருந்தாலும் போதுமானதாக இல்லை. மக்களின் வாழ்வாதாரம் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், மனிதாபிமான சூழ்நிலை மற்றும் சவால்களால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட மில்லியன் கணக்கான மக்களைத் தவிர, பொருளாதார வீழ்ச்சியின் விளிம்பில் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் இன்று எம்மிடையே உள்ளனர். ஆப்கானில் மனிதாபிமான நெருக்கடியை குறைக்க வேண்டுமானால், வாழ்வாதாரங்கள் தொடர்பில் செயற்பட வேண்டும்' என்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஆப்கானுக்கான வதிவிடப் பிரதிநிதி அப்துல்லாஹ் அல் தர்தாரி, டோலோ நியுஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான உதவி பொதுமானது என்று தாம் கருதவில்லை என்றும் பொருளாதார வளர்ச்சி இல்லாமல், ஆப்கானிஸ்தான் நிலையானதாக இருக்காது என்றும் தர்தாரி வலியுறுத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் 23 மில்லியன் பேர் தற்போது பட்டினியில் வாடுவதாகவும் 95 வீதமான ஆப்கானியர்கள் 24 மணி நேரத்தில் மூன்று வேளை உண்பதற்கு போதுமான உணவு இன்றி இருப்பதாகவும் ஐ.நா தரவுகள் தெரிவிக்கின்றன.

## ஷங்காயில் கொவிட் தொற்று புதிய உச்சம்

சீனாவில் கொவிட்–19 வைரஸ் தொற்று சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.



ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபினால் பாதிக்கப்பட்டுள்ள ஷங்காய் நகரில் அன்றாட வைரஸ் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை புதிய உச்சத்தை எட்டியுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை புதிதாக 21,000க்கும் அதிகமான நோய்த்தொற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஈராண்டுகளுக்கு முன் வூஹானில் பதிவான தினசரி தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கையை விட இது அதிகம் என்று கூறப்படுகிறது.

1.4 பில்லியன் மக்கள் வாழும் சீனாவில் சுமார் 90 வீதத்தினர் முதல் இரண்டு தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டுள்ளதால், வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோருக்கு மிதமான அறிகுறிகள் மட்டுமே உள்ளன.

நேற்று ஷங்காயில் பதிவான நோய்த்தொற்றுச் சம்பவங்களில் பெரும்பாலானவை அறிகுறிகள் அற்றவை.

அந்நகரில் நடப்பில் இருக்கும் முடக்க நிலை எப்போது முடியும் என்பது தெரியவில்லை.

நகரத்திற்குள் நுழையும் சர்வதேச விமானங்களுக்குக் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்குவது குறித்து அதிகாரிகள் பரிசீலிப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அதிகரித்து வரும் பொதுமக்களின் விரக்தியைச் சமாளிக்க உணவு விநியோகத்தை மேம்படுத்துவதாகவும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

கொரோனா தொற்று சீனாவின் மத்திய நகரான வூஹானில் 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் முதல் முறை கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 9 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**
06 முதல் 11 வரை
சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் பங்குனி 26
ராகுகாலம் : காலை : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**
மேஷம் - பொறுமை
ரிஷபம் - நிறைவு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - பாராட்டு
தனுசு - வெற்றி
மகரம் - சுகம்
கும்பம் - மறதி
மீனம் - செலவு
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

## பிராங்பேர்ட்டிலுள்ள இலங்கையர் மருத்துவ உபகரணங்கள் நன்கொடை

ஜேர்மனியிலுள்ள பிராங்பேர்ட்டிலுள்ள இலங்கை சமூகம் அங்குள்ள இலங்கை துணைத் தூதரகத்தினூடாக மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

2022 மார்ச் 31ஆந் திகதி கொழும்பிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் (மார்ச் 31) நடைபெற்ற வைபவத்தில் வைத்து பிராங்பேர்ட்டிலுள்ள இலங்கை சமூகத்தின் நன்கொடை கையளிக்கப்பட்டது. இந்த நன்கொடையை வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மருந்துகள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவிடம் கையளித்தார்.

பிராங்பேர்ட்டிலுள்ள இலங்கையின் துணைத் தூதுவர் மதுரிகா வெனிங்கர் மற்றும் பிராங்பேர்ட்டிலுள்ள இலங்கை துணைத் தூதரகத்தின் ஊழியர்கள் இந்த நன்கொடையை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



## ரமழான் சிந்தனை

### பொறுமையின் மாதம்

இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு தடவை 'ரமழான் என்பது பொறுமையின் மாதம்' என்று குறிப்பிட்டார்கள்.

(ஆதாரம்: அபூதாவூத், இப்னு மாஜா)

இது முற்றிலும் உண்மையானதாகும். வருடத்தில் ஒரு மாதம் 29 அல்லது 30 நாட்கள் ஏனைய மாதங்களுக்கு மாற்றமாக பகல் வேளையில் உணவையும், பானத்தையும் தவிர்த்து இச்சைகளையும் கட்டுப்படுத்தி கொண்டு நோன்பிருப்பது என்பது இலகுவான காரியமல்ல. இதற்கு தியாகமும் அர்ப்பணிப்பும் இன்றியமையாததாகும்.

அவ்வாறான அர்ப்பணிப்பை மேற்கொண்டே இறைவிசுவாசிகளான முஸ்லிம்கள் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றும் நோக்கில் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப நோன்பு நோற்கின்றனர்.

இவ்வாறு அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு பொறுமையும் சகிப்புத்தன்மையும் மிகவும் அவசியமானது. நோன்பின் ஊடாக இப்பொறுமை பண்பை வளர்த்துக் கொள்ள முடியும். அத்தோடு பொறுமை சகிப்புத்தன்மையோடு வாழ்வை அமைத்துக் கொள்ளவும், மனிதனை புடம்போட்டு பக்குவப்படுத்திடக் கூடியதாகவும் நோன்பு விளங்குகிறது.

அதேநேரம் மனித வாழ்வுக்கு பொறுமை மிகவும் முக்கியமானது. அதனால் தான் அல்லாஹுதஆலா தன் அருள்மறையில் 'நிச்சயமாகப் பொறுமையாளர்களுக்கு அவர்களுடைய கூலி கணக்கின்றியே (அதிகமாக) கொடுக்கப்படும்' (39:10) என்று குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

இதன் ஊடாக பொறுமையின் சிறப்பும் முக்கியத்துவமும் தெளிவாகின்றது.

அத்தோடு நபி (ஸல்) அவர்கள், நோன்பு நோற்று இருப்பவருடன் எவராவது சண்டைக்கு வந்தால் அல்லது ஏசி சச்சரவில் ஈடுபட்டால் நான் நோன்பாளி (இரு தடவைகள்) எனக் கூறட்டும்' என்றுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி)

இந்த நபிமொழியின் ஊடாகவும் நோன்பு காலத்தில் தம்மோடு சண்டைக்கு அல்லது சச்சரவுக்கு வருபவருடன் கூட பொறுமையாக நடந்து கொள்ளும்படியே நபி (ஸல்) அவர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

ஆகவே இவ்வாறு சிறப்புற்று விளங்கும் பொறுமை பண்பை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சிக் களமாக இந்நோன்பு காலத்தை அமைத்துக் கொள்வோம். அது ஈருலகிலும் நன்மைகள் நிறைந்த வாழ்வுக்கு துணைபுரிவதோடு அல்லாஹ்விடம் கணக்கின்றி நற்கூலி கிடைக்கப்பெறவும் வழிவகுக்கும்

மர்லின் மரிக்கார் ...

## IMF உடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு EU வலியுறுத்து

### இலங்கை குறித்து கூட்டறிக்கை ஒன்றும் வெளியீடு

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் நிலையான பாதைக்கு கொண்டு வருவதற்கு தேவையான சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை தீர்க்கமான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் அண்மைய அபிவிருத்திகள் பற்றிய கூட்டுஅறிக்கையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளான (ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ருமேனியா) மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நோர்வே, சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சிய மையங்களுடன் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஒன்று கூடும் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் அமைதியாக நடைபெறும் சந்தர்ப்பத்தில்,அவை எந்த ஒரு ஜனநாயக சமூகத்தினதும் தூண்களாகும். எனவேஅனைத்து தரப்பினரும் நிதானத்துடன் தொடர்ந்து செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம். அத்துடன், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை ஒரு நேர்மறையான முன்னெடுப்பாக நாம் கருதுகிறோம்.

இலங்கை மக்களைப் பாதித்துள்ள தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான மற்றும் ஜனநாயக வழிமுறைகளை ஆராயுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் நிலையான பாதைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) அதிகாரிகள் தீர்க்கமான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டிய நிலைமையின் தீவிரத் தன்மையை நாம் வலியுறுத்துகிறோமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராஜினாமா செய்துள்ள அமைச்சர்கள் தொடர்பில் வர்த்தமானி வெளியீடு

### -அமைச்சர் ஜோன்ஸ்டன் சபையில் தெரிவிப்பு

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

அமைச்சரவை கலைக்கப்பட்டு அமைச்சர்கள் இராஜினாமா செய்தமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பு பிரதம கொரடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் அரசு தரப்பில் பொய்களை பரப்பி வருவதாக கூறும் எதிர்க்கட்சியினர் சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள அந்த வர்த்தமானியை பார்வையிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேனென்றும் அமைச்சர் நேற்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினமும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அது தொடர்பில் கருத்துக்களை முன்வைத்தனர். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர்கள் இராஜினாமா செய்யப்படவில்லை. அது தொடர்பில் ஆளும் கட்சியினர் பொய்களைக் கூறி வருகின்றனரென எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டி வருகின்றனர்.அது தொடர்பில் அரசாங்கம் வர்த்தமானி வெளியிட்டுள்ளது.

எனினும் அமைச்சர்கள் வழமை போன்று அமைச்சர்களுக்கான ஆசனத்தில் அமர்ந்திருப்பது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

06

**நாடு முழுவதும் மக்கள் போராட்டம்**

## கவனிக்கப்படாவிட்டால் நாட்டின் நிலைமை விபரீதமாகிவிடலாம்

### முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய எச்சரிக்கை

கடுமையான பொருளாதார நெருக்கடி தொடர்பாக நாடு தழுவிய மக்களின் போராட்டங்களுக்கு முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய, ஆதரவளிக்க முன்வந்துள்ளார்.

நாட்டின் நிலைமையை "துரதிர்ஷ்டவசமானது" என தெரிவித்துள்ள சனத் ஜயசூரிய, மக்கள் சில மாதங்களாக இந்த வேதனையை அனுபவித்து வருவதாகவும், அது ஒரு முடிவுக்கு வந்துவிட்டதென்றும் கூறினார்.

மக்கள் இப்படி வாழ முடியாது. இதனால்தான் எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு, சில சமயம் 10,12 மணி நேரம் மின்சாரம் இல்லையென மக்கள் போராட்டம் நடத்த ஆரம்பித்தனர். இந்த நாட்டு மக்களுக்கு இது மிகவும் கடினமாக உள்ளது. அதனால்தான் மக்கள் வெளியே வந்து எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கியுள்ளதாக ஜயசூரிய கூறினார்.

நிலைமை சரியாக கவனிக்கப்படாவிட்டால் "அது ஒரு பேரழிவாக இருக்கும் என்றும் சனத் ஜயசூரிய

06

**நெருக்கடி நிலைக்கு தீர்வு காண:**

## நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும்

### - முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை மே மாதத்தின் பின்னர் தீவிரமடைந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணம் இல்லாது போகலாம். அதனால் ஜூலை மாதமளவில் தனியார் துறைகளும் மூடப்படலாமென தெரிவித்த அவர், விரைவில் தீர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சபையில் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே முன்னாள் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின் போது நானும் சுமந்திரனும் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பான இந்த விவாதம் நடைபெறுகின்றது.

முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறுவதைப் போன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிதி முகாமைத்துவ வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு உள்ளிட்ட விடயங்களே மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக உள்ளது. அதேவேளை நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்திடமே உள்ளது. சபை அந்த அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டும். நிதி நிர்வாகம் தொடர்பான சட்டத்தை கொண்டு வர வேண்டும்.

நாட்டில் இவ்வாறான நிலைமை உருவாவதற்கான காரணம் என்ன என்று தேடிப்பார்த்து. அதனுடன் தொடர்புடைய நபர் யார் என்று கண்டறிந்து அவருக்கு தண்டனை வழங்க பாராளுமன்றத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய வரவு செலவுத் திட்டத்தை திருத்தி நிவாரணம் வழங்கும் வகையிலான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அரச நிதி குழுவின் அதிகாரங்களை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**சரியாக நடவுங்கள் அல்லது வழிவிட்டு விலகுங்கள்**

## நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர வேண்டிய நிலை

### பாராளுமன்றில் சஜித் பிரேமதாச எச்சரிக்கை

நாட்டில் இன்று என்ன நடக்கிறது? இதற்கு யார் பொறுப்பு? யார் பதில் கூறுவது?நாம் எல்லாவற்றுக்கும் தயாராகவே உள்ளோம். நாட்டை நடத்தவும் தயார். மக்களின் பேச்சுக்கு மட்டுமே நான் தலை சாய்ப்பேன்.

இங்கே ஆளும் தரப்பு அதற்கு மாறாக நடந்துகொள்கிறது என பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நல்லது செய்யாவிடின் நான் ஓய்வு பெறவும் தயார். நல்லது செய்ய வேண்டும் இல்லையென்றால் விலக வேண்டும். இல்லையென்றால் நாம் நம்பிக்கை இல்லாப்பிரேரணையை கொண்டு வருவோம்.

225 பெரும் மேலே இருந்து குதிக்கவில்லை. மீண்டும் உங்கள் தொகுதிக்கு நீங்கள் செல்ல வேண்டும் என்பதை மறந்து விட வேண்டாம் என்றார்.

## நாட்டுக்கு அவசியமான நேரத்தில் இராஜதந்திர ரீதியில் செயற்படவும்

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

நாட்டுக்கு அவசியமான சந்தர்ப்பத்தில் இராஜதந்திர ரீதியில் செயற்படுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்திடமும், எதிர்க்கட்சியிடமும் கோரியுள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலைக்கு ஜனநாயக ரீதியில், அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு தேட வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தமது நாட்டு அரசாங்க நிதியின் பொறுப்பாளர்கள் என்றும், அந்தப் பொறுப்பிலிருந்து தாங்கள் விலக முடியாது என்பதை நினைவிற்கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுடன் மாற்று அரசாங்கம்

### சிந்தித்தும் பார்க்க முடியாது - எதிர்க்கட்சித் தலைவர் சபையில் உரை

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியில் இருக்கும் வரை மாற்று அரசாங்கம் தொடர்பில் சிந்தித்துக் கூட பார்க்க முடியாது என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவருடன் எந்தப் பயணத்தையும் மேற் கொள்வதற்கு நாம் தயாரில்லை என தெரிவித்த எதிர்கட்சித் தலைவர்,மக்கள் நிராகரித்துள்ள ஜனாதிபதியுடன் நாம் செயல்பட்டால் அது நாட்டுக்கு செய்யும் துரோகமாகும் என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை, மக்கள் கருத்தை மீறி எத்தகைய டீல்களை மேற்கொள்வதற்கும் நாம் தயாரில்லை என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தமதுரையில் தொடர்ந்தும் தெரிவிக்கையில்: மாற்று அரசாங்கம் தொடர்பில் பேசப்படுகிறது. ராஜபக்‌ஷ குடும்பத்துடன்

06

## நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் பொறுப்பு 225 பேருக்கும் உண்டு

### - வியாழேந்திரன் எம்.பி

*லோரன்ஸ்செல்வநாயகம்,ஷம்ஸ்பாஹிம்*

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களதும் பொறுப்பாகுமென சதாசிவம் வியாழேந்திரன் எம்.பி.பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்: மத்திய வங்கி கொள்ளை உள்ளிட்ட பல்வேறு மோசடி செயற்பாடுகளும் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு காரணமாகும். தற்போது எதிர்க்கட்சி குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் செயற்பாட்டையே மேற்கொள்கிறது.ஆட்சியைக்கைப்பற்றும் நோக்கில் அவர்கள் தற்போது செயற்பட்டு வருகின்றனர்.

எதிர்க்கட்சி என்றால் ஆளும் கட்சி முன்னெடுக்கும் அனைத்தையும் எதிர்ப்பதல்ல. சர்வதேச முதலீடுகளை கொண்டு வர முயற்சித்தாலும் ஏனைய

06

## நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக நீக்கினால் ஆட்சி அமைக்க தயார்

### - சபையில் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமாயின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க தான் தயாராக இருப்பதாகவும், அவ்வாறு ஆட்சி பொறுப்பை ஏற்க வேண்டுமெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை முழுமையாக நீக்கப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிருந்து நாட்டை மீட்பதற்கான ஐக்கிய மக்கள் முன்னணியின் சார்பில் யோசனைகளை முன்வைத்து, எதிர்க்கட்சி தலைவர் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

20 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக ஜனாதிபதிக்கு சாதாரண நிறைவேற்று அதிகாரம் அல்லாமல் சிறப்பு நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை நீக்க வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறானதொரு அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கீழ் தற்காலிக அரசாங்கமோ இடைக்கால அரசாங்கமோ கொண்டு செல்ல முடியாது. ராஜபக்‌ஷக்களின் தலைமைத்துவம் அல்லது

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 231.59 | 242.38 |
| கனடியன் டொலர் | 246.80 | 257.29 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5138 | 2.6172 |
| சிங்கப்பூர் டொலர் | 228.89 | 237.32 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 407.08 | 421.89 |
| சுவிஸ் பிராங்க் | 332.87 | 346.20 |
| அமெரிக்க டொலர் | 310.88 | 321.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 793.02 | கட்டார் ரியால் | 81.82 |
| குவைத் டினார் | 981.29 | சவூதி ரியால் | 79.71 |
| ஓமான் ரியால் | 776.61 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 81.40 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 26ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 07

### குறள் தரும் சிந்தனை



பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்

*மயில் இறகாக இருந்தாலும்கூட அதிகமாக ஏற்றப்பட்டால் வண்டியின் அச்சு முறிகின்ற அளவுக்கு அதற்குப் பலம் வந்து விடும்.*

## எரிபொருள் நெருக்கடியை துரும்பாக வைத்து எதிரணி நடத்தும் அரசியல்!

எரிபொருள் நெருக்கடியானது தற்போது இலங்கையை மாத்திரமன்றி உலகின் மேலும் பல நாடுகளையும் பாதித்துள்ளது. எமது அயல் நாடான இந்தியாவில் கடந்த வாரத்தில் ஆறு நாட்களுக்குள் ஐந்து தடவைகள் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் கடந்த ஒரு மாதகாலத்தில் எரிபொருட்களின் விலை மோசமாக அதிகரித்துள்ளது.

எரிபொருளை உற்பத்தி செய்யும் நாடுகள் மசகு எண்ணெய் உற்பத்தியை குறைத்துக் கொண்டுள்ளன. இதனால் எரிபொருள் வர்த்தகம் வீழ்ச்சி அடைந்துள்ளது. மற்றொருபுறத்தில் ரஷ்ய உக்ரைன் யுத்தம் தீவிரமடைந்துள்ளதனால் சர்வதேச எரிபொருள் வர்த்தகம் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இதன் காரணமாகவே இந்தியா உட்பட பல நாடுகளில் எரிபொருளுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

உலக நாடுகளுக்கு எரிபொருளை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ரஷ்யாவும் பிரதான ஒரு நாடாகத் திகழ்கின்றது. அங்கு தற்போது யுத்த நிலைமை காணப்படுவதனால், ரஷ்யாவில் எரிபொருள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி ரஷ்யா மீது மேற்குலகின் பல நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன.

இதன் காரணமாக ரஷ்யா தனது மசகு எண்ணெயை பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலைமை உருவாகி உள்ளது. இந்நிலையில் சர்வதேச எரிபொருள் வர்த்தகம் தற்போது மந்தமான நிலைமைக்குச் சென்று விட்டது.

இந்தியாவில் எரிபொருட்கள் முன்னொரு போதும் இல்லாதவாறு விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன. இந்திய மக்களின் வாழ்க்கையில் எரிபொருள் விலையேற்றம் தற்போது பெரும் சுமையை ஏற்படுத்தி உள்ளது. ஆனாலும் சர்வதேச சந்தை நிலைவரங்களின்படி எரிபொருட்களுக்கு விலைக்குறைப்பு செய்ய முடியாத நிலையில் இந்தியா தற்போது உள்ளது. அந்நாட்டின் போக்குவரத்துச் செலவுகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் கைத்தொழில் துறையிலும் பெரும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையின் எரிபொருள் நெருக்கடி நிலைமையும் இவ்வாறுதான் உள்ளது. சர்வதேச நெருக்கடிகள் ஒருபுறமும், டொலர் பற்றாக்குறை மறுபுறமுமாக எமது நாட்டு மக்களும் எரிபொருளுக்காக அன்றாடம் திண்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான செய்திகளை அரசுக்கு எதிராக செயற்படும் சில ஊடகங்கள் மிகைப்படுத்தியவாறு வெளியிட்டு வருவதை சமீப காலமாக நாம் காண்கிறோம்.

அதேசமயம், அரசுக்கு எதிரான சக்திகள் எரிபொருள் பற்றாக்குறையை துரும்பாகப் பயன்படுத்தியபடி தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டு வருவதையும் காண முடிகின்றது. நாட்டில் இருவருட காலத்துக்கு மேலாக நிலவிய கொவிட் முடக்க நிலைமையையும், அதனால் நாட்டில் உண்டான பொருளாதார வீழ்ச்சியையும் கவனத்தில் கொள்ளாமல் எதிரணிகள் இவ்வாறான விசமப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் எரிபொருளுக்கு மாற்றீடான புதுப்பிக்கத்தக்க சக்திவளம் மீது எமது நாடு கவனம் செலுத்த வேண்டிய காலம் உருவாகியுள்ளது. உலக நாடுகள் பலவற்றில் சூரியசக்தி, காற்றுவளம், கடல் அலை சக்தி போன்ற பலவித முறைகளால் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இலங்கையில் மின்சார விநியோகம் முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்ட காலம் தொடக்கம் நாம் நீர்மின்சாரத்தில் மாத்திரமே கவனம் செலுத்தி வந்துள்ளோம்.

நீர்த்தேக்கங்கள் மூலமான நீர்மின்சார உற்பத்தியானது எதிர்காலத்தில் மின்சாரப் பற்றாக்குறையை ஏற்படுத்தும் என்று எமது நாட்டின் கடந்த ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவில்லை. நாட்டின் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப நவீன வசதி வாய்ப்புகளும் கைத்தொழில் முயற்சிகளும் பெருகியதன் விளைவாக மின்சாரத்துக்கான தேவை பன்மடங்கு அதிகரித்து விட்டது.

ஆனாலும் நீர்மின்சார உற்பத்தியில் மாத்திரமே எமது நாடு கவனம் செலுத்தியது. அதில் பற்றாக்குறை ஏற்பட்டதும் எரிபொருள் மூலமான மின் உற்பத்தியில் இலங்கை இறங்கத் தொடங்கியது. புதுப்பிக்கத்தக்க மாற்று சக்திவளங்கள் மீது தற்போதுதான் இலங்கையின் கவனம் சென்றுள்ளது.

நாட்டின் இன்றைய மொத்த மின்சாரத் தொகையில் சுமார் நாற்பது சதவீதம் அளவிலேயே நீர்தேக்கங்களில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. மிகுதியான அறுபது சதவீத மின்சார உற்பத்திக்கான எரிபொருளிளேயே நாம் தங்கியிருக்க வேண்டியுள்ளது. உலகில் படிப்படியாக எரிபொருளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றது. இந்நிலையில் எமது நாடு தொடர்ந்தும் எரிபொருள் மூலமான மின்சாரத்தில் தங்கியிருப்பது நல்லதல்ல.

நாம் இப்போது புதுப்பிக்கத்தக்க சக்திவளங்கள் மீதே கவனம் செலுத்துவது அவசியம். எமக்கு இன்றுள்ள பிரதான இரு தெரிவுகள் சூரியசக்தி, காற்றாலை மூலமான மின்உற்பத்திகள் மட்டுமே ஆகும். இவ்விரு முறைகளிலும் இந்தியா நீண்ட காலத்திற்கு முன்னரே கால்பதித்து விட்டது. அந்த வழிகள் மீது அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் புதுப்பிக்கத்தக்க சக்திவளங்களைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்வது தொடர்பாக பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுவதும் அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# இன்று நிலவும் நெருக்கடிக்கு கட்சிசார்பற்ற தீர்வையே நாம் அனைவரும் தேட வேண்டும்



டலஸ் அழகப்பெரும, (முன்னாள் அமைச்சர், மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

உலக சமூகம் 13ஐ துரதிர்ஷ்டமான இலக்கமாகக் கருதுகிறது. அதேபோன்று இலங்கையில் இளைஞர் சமூகம் 225 ஐ மோசமான இலக்கமாகக் கருதும் பின்னணி இச்சந்தர்ப்பத்தில் உருவாகி வருகின்றது. அதற்கு முக்கிய காரணமாக நான் காண்பது பாராளுமன்ற சிறப்புரிமைகளுடன் பாதுகாப்பாக உள்ள நாங்கள் எமது சகோதர குடிமக்களின் பாதுகாப்பற்ற தன்மையை கருத்தில் கொள்ளாததாகும். அதனால் அவர்கள் அனுபவிக்கும் பாதுகாப்பற்ற தன்மை அல்லது பாதிப்பு எமக்குத் தெரிவதில்லை.

30 வருட கால யுத்தம், சுனாமி மற்றும் கொரோனா தொற்று போன்ற மூன்று சவால்களும் கொண்டுவந்த மோசமான பொருளாதார சவால்களுக்கு மத்தியில் போராட்டம் நடத்தும் பொதுமக்களுக்காக ஆஜராக வேண்டிய சந்தர்ப்பத்தில் எமது கடமையைப் பற்றியோ பிரதிநிதித்துவம் பற்றியோ நாம் திருப்தி அடைய முடியுமா?

பல வழிகளூடாக வீதி முழுவதும் மக்கள் பாய்வது அம்மக்கள் அனுபவிக்கும் அழுத்தத்தின்வெளிப்பாடேயாகும். இன்னும் அமைதியாகவே நடைபெறும் அந்த அழுத்தத்தின் வெளிப்பாடு வன்முறையாக மாறுவதற்கு இடமளிக்காமல், மக்கள் பிரதிநிதிகளான நாம் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். மக்கள் கட்சிசார்பற்றவர்களாகவே பாதையில் இறங்கியுள்ளார்கள். அவர்களின் பிரச்சினை கட்சி சார்பற்றது என்பதே அதற்குக் காரணம். அதனால் அதற்கு கட்சிசார்பற்ற தீர்வினையே தேட வேண்டும். ஆனால் இந்தத் தீர்மானம் மிக்க சந்தர்ப்பத்தில் உயர்வான பாராளுமன்றத்தினை அவமானப்படுத்தும் வகையில் வெறுப்புடன் பிரிந்து சொற்போர் நடத்துகிறார்கள்.

எமது நாடு மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு முகம் கொடுக்கும் ஆரம்ப அறிகுறிகளை பார்த்து, அதன் பலனாக மக்களின் அழுத்தம் வெடிக்கும் நிலை உருவாகக் கூடும் என எதிர்வுகூறி, நான் கடந்த வரவுசெலவுத் திட்ட த்தில் அதாவது நான்கரை மாதங்களுக்கு முன்னர் இந்த அவதானம் குறித்து சகோதர மக்கள் பிரதிநிதிகளிடம் தாழ்மையாக வேண்டுகோள் ஒன்றை விடுத்தேன்.

"நாம் ஏன் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டோம்? யார் இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள்? முன்னர் காணப்பட்ட பச்சை நிற அரசாங்கமா? நீலநிற அரசாங்கமா? நீலப்பச்சை அரசாங்கங்களா? தற்போதைய அரசாங்கமா?

இல்லை□ நாம் அனைவருமே சமமாக போது தேவதத்தர்களாகி விடுகிறார்கள். நாம் அனைவரும் அடுத்தவர் மீது விரலை நீட்டி பொறுப்பற்ற விதத்தில் கடந்த காலத்தைப் பற்றிக் கூறுகிறோமே தவிர, எதிர்காலத்தைப் பற்றியல்ல. ஆனால் கடந்த சரித்திரத்தை குறிப்பிட்டு மேலும் சிறப்புரிமைகளை பெற ஒருவராலும் முடியாது. குறைகளை சரிசெய்து தவறுகளை திருத்தி முன்னோக்கி செல்வதைத் தவிர, எமக்கு வேறு வழியில்லை. நாம் ஒன்றாக இணைந்து பயணிக்க விட்டால் நடப்பது நாம் தனித்தனியாக புதையுண்டு போவதாகும்.

இங்கு பிரதிவாதிகளாக மாறியுள்ளோம். மக்கள் முன்னிலையில் நாம் 225 பேருமே பிரதிவாதிகள், நாமே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாங்கள் இன்னும் தாமதம் இல்லை என்று நம்புகிறேன். குறைந்தபட்சம் எமது எதிர்காலத்தின் பேரில், தற்போதுள்ள பிள்ளைகளுக்காக எதிர்காலத்தில் பிறக்கவுள்ள பிள்ளைகளுக்காக 225 பேரும் நாட்டுக்காக ஒன்றாக இவ்விடத்தில் இணைவோம்.

எல்லாக் கட்சிகளும் எதிர்க்கட்சியில் இருக்கும் போது புத்தராகவே இருக்கிறார்கள். அரசாங்கத்துக்கு வரும்

இன்று இந்நாட்டு இளைஞர்கள் சமுதாயம், 225 பேரும் தேவையில்லை எனக் கூக்குரலிட்டு நிராகரிப்பது அந்தக் கூற்றை உண்மையாக்கியாகும். எமது குடிமக்கள், இலங்கையர்கள், அவர்கள் தங்களது நாட்டை மிகவும் நேசிக்கும் உன்னதமான மக்கள். அதனால் மக்கள் பிரதிநிதிகளாக நாம் இணைந்து மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான நடவடிக்கையை எடுத்தால் அவர்கள் எம்மைப் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றேன். மக்களின் குரலுக்கு செவிசாயுங்கள், மக்களுக்கு பதில் அளியுங்கள், மக்களுக்கு உதவி செய்யுங்கள், மக்களை நேசியுங்கள் ,மக்களை பிரதிவாதிகளாக பார்க்காமல் முறைப்பாட்டாளர்களாக பாருங்கள்.

அரசியல் துயரத்தின் பிரதிவாதிகள் யார் என்பது தொடர்பில் யாருக்காவது சந்தேகமான கருத்து இருக்குமானால் அவர்கள் தங்களை அறிந்து கொள்ள சரியான வழி உள்ளது. இந்நாட்டிலுள்ள அனைத்து நிறைவேற்று ஜனாதிபதிகள்,நிறைவேற்று ஜனாதிபதி முறையின் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை உள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கண்ணாடிக்கு முன்னால் போக வேண்டியது மாத்திரமே செய்ய வேண்டியதாகும்.

**'மக்கள் கட்சிசார்பற்றவர்களாகவே பாதையில் இறங்கியுள்ளார்கள். அவர்களின் பிரச்சினை கட்சிசார்பற்றது என்பதே அதற்குக் காரணம்'**

எனது பாடசாலை ஆசிரியையிடமிருந்து எனக்குக் கிடைத்த கொடையான புத்தரின் போதனையான கூற்றொண்டு உண்டு. அது "தாமதமின்றி நடவடிக்கை எடுப்போம்" என்பதாகும். ஆனால் முக்கியமான விடயம் 225 பேராகிய நாம் அதனைப் புரிந்து கொண்டு மேலும் தாமதிப்பதா என்ற கேள்வியாகும். கௌரவம், அன்பில்லாத அதிகாரத்தால் சரித்திரம் உலகிற்கு அளித்துள்ள கசப்பான, அருவருப்பான செய்திகளை அறிய நாம் மேலும் தாமதிக்க தேவையில்லை.

# வாழைச்சேனை பிரதேச மக்களுடன் நெருங்கிய நட்புறவு பேணி வாழ்ந்த முன்னாள் அதிபர் அமரர் மயில்வாகனம்



வாழைச்சேனை பிரதேசத்தில் புகழ் பெற்ற அதிபராகத் திகழ்ந்து, ஓய்வு பெற்ற செல்லப்பா மயில்வாகனம் அவர்கள் கடந்த 15.03.2022 அன்று காலமானார். முன்னாள் அதிபரான அமரர் மயில்வாகனம் வாழைச்சேனை மற்றும் அதனை அண்டிய கிராமங்கள் தோறும் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட மனிதநேயனாக விளங்கியவராவார். அது மாத்திரமன்றி, இப்பிரதேச மக்களின் இன்பதுன்பங்களில் பங்கேற்று அனைவருடனும் நெருக்கமான நட்புறவுடன் வாழ்ந்தவராவார்.

முருகப்பர் செல்லப்பா_ வேலாயுதன் சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனாக 30. 10. 1926 அன்று பிறந்தவர் மயில்வாகனம் அவர்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இவரது தந்தையார் பொலிஸ் அதிகாரி பதவியை வகித்தவராவார். வாழைச்சேனை இந்துக் கல்லூரி, சென் ஜோன்ஸ் பாடசாலை, அரசடி பாடசாலை, கல்லடி சிவானந்தா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்ற அவர், சிறிது காலம் சுவாமி விபுலானந்த அடிகளாரிடம் கல்வி கற்ற பெருமைக்கும் உரியவர்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்த பின்னர், குருநாகல் மாவட்டத்திலுள்ள இப்பாகமுவ பாடசாலையில் 1954 இல் அவருக்கு முதல் நியமனம் கிடைத்தது. 1959 இல் மகேஸ்வரி என்ற பெண்மணியைத் திருமணம் செய்தார். மீராவோடை, வாழைச்சேனை, வெம்பு பாடசாலைகளில் அவர் ஆசிரியராகப் பணியாற்றினார். பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம், கல்குடா நாமகள் வித்தியாலயம், கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றினார்.

1980_86 வரை கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அவர் அதிபராகப் பணியாற்றிய காலத்திலேயே அப்பாடசாலையில் க.பொ.த சாதாரணதர வகுப்பு முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அவர் பெரும் சேவை புரிந்துள்ளார். 1982 இல் கறுவாக்கேணி, கிண்ணையடி, மீராவோடை ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசத்தின் கிராமோதய சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு அரும்பணியாற்றினார்.

1986 இல் ஓய்வு பெற்ற பின்னர் மக்களுக்கு தொண்டு செய்வதில் தனது நேரத்தை அதிகளவில் செலவிட்டார் அமரர் மயில்வாகனம். வறியோருக்கு உதவுவதில் அவர் அதிக நாட்டம் கொண்டவர். பலருக்கும் நெருக்கடி வேளையில் அவர் ஓடோடிச் சென்று உதவிகள் புரிவார், ஆறுதல் கூறுவார். அதனால் மக்கள் மத்தியில் நன்கு போற்றப்பட்டார்.

அவர் காலமாவதற்கு சில நாட்களுக்கு முன்னர் புரிந்த காரியமொன்றை மிறாவோடை தமிழ் மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பர். அங்கு தனது முன்னோர்கள் வாழ்ந்த காணிகளை (சுமார் ஒரு ஏக்கர்) மிறாவோடை சித்திவிநாயகர் ஆலயத்துக்கு தனது வாரிசுகளைக் கொண்டு அவர் அன்பளிப்பாக வழங்கியிருந்தார். அன்னாரின் சமூகப்பணிகள் இப்பகுதி மக்கள் மத்தியில் என்றுமே நிலைத்திருக்கும். இங்குள்ள மக்கள் உள்ளத்தில் அமரர் மயில்வாகனம் என்றுமே வாழ்வார்.

எஸ்.பாண்டியன்...

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்குவதில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழகத்தில் கவனஈர்ப்பு



## கலை இலக்கியப் போட்டிகள் ஏற்பாடு; தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்கள் பங்கேற்பு

இலங்கையில் யுத்த சூழ்நிலையில் அகதிகளாக இடம்பெயர்ந்து சுமார் 32 வருடங்களாக தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் வசித்து வரும் மக்களின் குடியுரிமைக் கோரிக்கை பற்றிய விழிப்புணர்வையும், அதை மேற்கொள்வதற்கான உந்துதலையும் ஏற்படுத்த வேண்டிய ஒரு தேவையை உணர்ந்து இந்திய குடியரசு தின விழாவை முன்னிட்டு கலை இலக்கியப் போட்டிகளை முன்னெடுத்து குடியுரிமை கோரிக்கை கவனயீர்ப்பை முன்னெடுத்ததாக திருவண்ணாமலை மாவட்டம் கஸ்தம்பாடி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் டேவிட் அனோஜன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் டேவிட் அனோஜன் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"இலங்கையிலிருந்து தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்தவர்கள், தமிழகத்தில் பிறந்த அவர்களது குழந்தைகள் மற்றும் இந்திய பிரஜைகளை திருமணம் செய்துகொண்டவர்கள் என சுமார் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ள 103 மறுவாழ்வு முகாம்களில் கடந்த 32 ஆண்டுகளாக வசித்து வருகிறோம்.

எங்களுக்கு தமிழக அரசு பல்வேறு உதவிகளையும் நலத்திட்டங்களையும் தொடர்ந்து செய்து வருகிறது. எப்போதும் அரசு வழங்கும் நிவாரணத்தை மட்டுமே எதிர்பார்க்காமல், எங்களது சொந்த முயற்சியிலும் உழைப்பிலும் எங்கள் எதிர்காலத்தை வளமானதாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை நீண்ட காலமாக எங்கள் அனைவருக்குள்ளும் வேட்கையாய் இருந்து வருகிறது. அந்தக் கனவுகள் அனைத்தும் குடியுரிமை என்ற ஒற்றைப் புள்ளியில் கலைந்து போவதை அனைவரும் உணர்ந்து கொண்டோம்.

எனவே குடியுரிமை வேண்டும் என்ற கருத்தை பல்வேறு காலகட்டங்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக வெளிப்படுத்தி வந்தோம். ஆனால் அவை உரிய முறையில் அரசுகளின் கவனத்திற்கு சென்றடையவில்லை. எங்களது குடியுரிமைக் கோரிக்கையை ஒன்றுபட்டு வெளிப்படுத்துவது என்ற தேவை காலத்தினால் எம்மக்களிடம் ஏற்பட்டது.

எங்கள் கோரிக்கையை அரசுகளின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு காணும் நோக்குடன் விழிப்புணர்வுக் குழு எனும் தன்னார்வக் குழு அமைந்தது. இக்குழு நவீன தொழில்நுட்ப ஊடகம் மூலம் கருத்துகளை பகிர்ந்து கொண்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் மூலமாக மக்களின் குடியுரிமை கோரிக்கை, நாடு திரும்ப விரும்பும் மக்களின் பிரச்சினைகள் போன்றவற்றை அரசியல் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களிடம் நேரில் சந்தித்து வலியுறுத்தி வருகிறோம்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு கவன ஈர்ப்பு நிகழ்வுகளையும் நடத்தி வருகிறோம். அண்மையில் குடியுரிமைப் பொங்கல் என்ற நிகழ்வை அனைத்து மறுவாழ்வு முகாம்களிலும் நடத்தி மாபெரும் கவன ஈர்ப்பையும் நிகழ்த்தியுள்ளோம். இதன் ஒரு அங்கமாகத்தான் இந்திய ஜனநாயக பேரரசின் 73 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவை முன்னிட்டு மறுவாழ்வு முகாம்களுக்கு இடையேயான கலை இலக்கிய போட்டிகளை நடத்த திட்டமிடப்பட்டது. குடியுரிமை என்பதை மையக் கருத்தாக தலைப்புகள் கொடுத்து படைப்புகள் வரவேற்கப்பட்டன. .

கடந்த 32 ஆண்டுகளுக்கும் மேலாக தங்களுக்கென ஒரு அடையாளத்தை தேடும் ஒரு சமூகத்தின் அனுபவ மொழிகள் இந்த போட்டிகளின் மூலம் ஆக்கம் பெற்றிருந்தன. சிந்தனையின் ஆழமும், தர்க்கத்தின் வலிமையும், இலக்கிய மனமும் கொண்ட படைப்புகள் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் சிறுகதைகள் மற்றும் ஓவியங்களாகவும் வந்தன.

அகதிகள் சமூகத்தில் ஒரு புதிய தலைமுறை எப்படிப் பன்முகம் கொண்ட பரிமாணங்களோடு உருவாகி வருகிறது என்பதற்கு சான்றுகளாக அவர்களின் படைப்புகள் இருந்தன. தங்கள் ஆக்கங்களையும் திறமைகளையும் வெளிப்படுத்த கிடைத்த சரியான களமாக இந்த வாய்ப்பு அவர்களுக்கு அமைந்தது என்பதை தங்கள் படைப்புகள் மூலம் நிரூபித்து இருந்தார்கள். இதில் ஆச்சரியம் தரும் செய்தி என்னவென்றால், அகதி வாழ்வின் வலிசுமந்த வேதனைகளையும் குடியுரிமையின் அவசியத்தையும் அழுத்தமாக பதிவு செய்தவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் இந்தியாவில் பிறந்தவர்கள் என்பதுதான்.

இந்தப் படைப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் நமது வாழ்கையின் அனுபவங்களைக் காட்டும் விளக்குகள்தான். நோக்கம் நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. அதை நோக்கிய பயணமும் பாதையும் சரியானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது வெற்றியடையும். அதன்படி 'மாற்றம் சாத்தியமான ஒன்றுதான்' என்ற நம்பிக்கையோடு தொடங்கிய இந்தப் பயணம் இன்று மாபெரும் வெற்றி பெற்றுள்ளது".

இவ்வாறு தெரிவித்துள்ளார் திருவண்ணாமலை மாவட்டம் கஸ்தம்பாடி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் டேவிட் அனோஜன்.

வாஸ் கூஞ்ஞ...
(தலைமன்னார் விஷேட நிருபர்)

# மாணவர்களின் உடல்உள குறைபாடுகளை கண்டறியும் ஆற்றல் ஆசிரியருக்கு அவசியம்

**வகுப்பறையில் பல்வேறு வகைப்பட்ட மாணவர்கள் காணப்படுவர். தனியாள் வேறுபாடுகள் காணப்படுதல் இயல்பு. மீத்திறன் மிக்கவர்களும், மெல்லக் கற்போர்களும் காணப்படுவர். மீத்திறன் உள்ளோர்களையும் ஆசிரியர்கள் கவனித்தல் வேண்டும். இவர்கள் ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம். தொலைக்காட்சி, வானொலி, Mobile Phone போன்றவற்றினூடாக பல விடயங்களை உள்வாங்கியும் தர்க்கித்தும் வகுப்பறைகளில் மீத்திறன் மிக்கோர் திகழ்வர்.**

மெல்லக் கற்போர் குறைந்த அடைவு உடையோர் எனலாம் கே.லொவல் என்பவர் இதுபற்றி கூறி உள்ளார். வகுப்பறையில் சராசரியாக ஏனைய மாணவர்களை விட இவர்கள் மெதுவாக செயற்படுவோர்களாக காணப்படுவர். பிள்ளைகளை இருவகை பகுப்புக்குள் உள்ளடக்கலாம் அவையாவன

1. குறை வளர்ச்சியுடைய பிள்ளை
2. உளப் பிற்போக்குடைய பிள்ளை

ஓரளவு குறை வளர்ச்சியுடையோர் எழுத, வாசிக்க, எண்களை கணித்திட சிரமப்படுவர். மிக நேரமெடுத்து செய்வர். இவர்களை சாதாரண மாணவர்களுடன் ஒப்பிடல் இயலாது. இவர்கள் வேறாக அணுகப்படல் வேண்டும்.

உளப்பிற்போக்குடையோர் குறைந்த விவேகம், நடத்தை குறைபாடுகள் உடையோராய் இருப்பர். சராசரியான பிள்ளைகளின் வளர்ச்சியோடு இவர்கள் வித்தியாசமாய் காணப்படுவர். அடுத்து புலக்குறைபாடு பற்றி அவதானித்தல் வேண்டும். கட்புலன், செவிப்புலன், பேச்சு போன்றவற்றில் உள்ள குறைபாடுகள் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும். கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் குறிப்பாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இவைகளை அறிந்திருத்தல் வேண்டும். கட்புலன் குறைபாடு மாணவர்களில் பின்வரும் வகையில் தாக்கம் செலுத்தலாம்.

பார்வைக் குறைபாடுடையோரின் நடத்தையில் காணப்படும் சில நடத்தைக் கோலங்களின் அடிப்படையில் குறித்த பிள்ளைகள் கட்புல குறைபாடுடையோர் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் .

கதிரை, வாங்குகளில் பார்வை குறைபாடுகளின் விளைவாக மோதிக் கொள்ளலாம். கரும்பலகை பக்கம் செல்லலும் உற்றுப் பார்த்து எழுதுதலும். மற்றவர்களிடம் கேட்டு எழுதுதல். வெளிச்சம் தேடிச் சென்று எழுதுதல். கண்ணை சுருக்கிப் பார்த்தல். தலைவலி எனக் கூறி முகத்தை அடிக்கடி திருப்புதல். வாசிக்கும் பொழுது தூர அல்லது கிட்ட வைத்து வாசித்தல்.

இவைகளுக்கு பரிகாரம் காண ஆசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**கேள்விக் குறைபாடு:**

இவர்கள் அவதானமில்லாது இருப்பர். கதைக்க விருப்பமின்மை, காதுவலி மற்றும் காதுக்குள் சீழ் போன்ற நோய்கள் காணப்படல், பக்கத்தில் உள்ளோரை பார்த்து எழுதுதல், அடைவைப் பெறாமை, அவர்கள் சத்தமாக கதைப்பர்.

பேச்சுக் குறைபாடு மற்றொரு பிரச்சினை. ஆசிரியர்கள் மாணவர்களின் வாசிப்பின் பொழுதும், உரையாடல்களின் போதும் கேள்விக்கு விடை அளிக்கும் பொழுதும் இதனைக் காணலாம்.



## மாணவர்களின் நடத்தைக் கோலங்களை ஆசிரியர்கள் அவதானிப்பது பிரதானம். மாணவரின் வித்தியாசமான நடத்தைகளை அவதானித்து, அதற்கான தீர்வுகளைக் காண்பதற்கு ஆசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

திக்குதல் பிரச்சினையும் மற்றொரு குறைபாடாகும்.

கட்புல, செவிப்புல, பேச்சு குறைபாடு அனைத்துக்குமே வைத்தியரை நாடல் சிறப்பானதாகும். பாடசாலைகளில் (Medical Clinic Camp) வைத்திய முகாம்களின் ஊடாக பல விடயங்களை இனங்காணலாம். ஏனெனில் பெற்றோர் இவைகளில் கவனம் எடுத்து வைத்தியசாலைகளுக்கு செல்வர் என எதிர்ப்பார்த்தல் இயலாது.

உதாரணமாக, கட்புல குறைபாடுகளுக்கு மூக்குக் கண்ணாடிகளை வைத்தியர்கள் சிபாரிசு செய்வதனைக் காணலாம். இதேபோல செவிப்புல குறைபாடுகளுக்கும் வைத்தியம் உண்டு. காதுக்குள் சீழ் வடிதல் போன்ற பிரச்சினைகளுக்கும் பரிகாரம் செய்வர். மேலும் பிறப்பிலேயே கேட்டலில் ஏன் குறைபாடு என்பதனையும் வைத்தியர் கண்டறிந்து சிலவேளைகளில் கேட்டலுக்காக கருவியை சிபாரிசு செய்யலாம்.

பேச்சுக் குறைபாட்டுக்கும் உள்நாக்கில் பிறப்பிலேயே ஏதும் குறைபாடு உண்டா என வைத்தியர் கண்டறிய வாய்ப்புண்டு. மேலும் பேச்சுக் குறைபாடுடையோர் உள ரீதியாக பாதிப்புக்குள்ளாகி உள்ளார்களா என்பதனையும் கண்டறிதல் வேண்டும். திடீரென பேச்சு நின்று போதல் அல்லது ஒரு படபடப்புடன் அல்லது ஒரு பயத்துடன் பேசுதல் போன்றன சில வேளைகளில் உளரீதியான தாக்கங்களினாலும் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே ஆசிரியர்கள் கற்பிக்கும் வேளைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவைகளுக்கான பரிகாரங்களை தேடல் வேண்டும். குறிப்பாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மாணவர்களின் கட்புல, செவிப்புல, பேச்சுக்குறைப்பாடு போன்றவற்றால் பல சவால்களை எதிர்நோக்குவர் என்பதனை கல்வியாளர்களும், உளவியலாளர்களும் நன்கறிவர்.

ஆனால் பெற்றோர் இதனை அறியார். எனவே அதிபர், ஆசிரியர் பெற்றோர் போன்றவர்களுடன் குறைபாடுடைய மாணவனும் இணைந்தே இதற்கான மாற்று வழியைத் தேட வேண்டும். ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு இவை சவால்களே ஆகும். ஆனால் அதற்கான பரிகாரங்கள் மூலம் அவைகளைக் கடந்து கற்பித்தலைத் தொடர்ந்து வெற்றி அடையலாம்.

**மகாலிங்கம்...**
(மொழிவரதன்)
*முன்னாள் கோட்டக்கல்வி பணிப்பாளர்*

---

# அருகிப் போயுள்ள பொம்மலாட்ட கலைக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியில் கலைஞர் வெங்கட் சாமிநாதன்

**பொம்மலாட்டம் ஒரு சில இடங்களில் இன்னமும் வழக்கில் உள்ளது. ஆனால் பொம்மலாட்டக்காரர்கள் அதையே சார்ந்து இருக்க முடிவதில்லை. நாடகம் தோன்றிய போதே தெருக்கூத்து, பொம்மலாட்டம் போன்ற கிராமியக் கலைகள் ஆதரவிழக்கத் தொடங்கி விட்டன. சினிமாவும், தொலைக்காட்சியும் அநேகமாக எல்லாக் கிராமியக் கலைகளையும் அழித்து விட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.**

தோல் பொம்மலாட்டம் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியத்தில் 10 ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்படுகின்றன. ஆனால் தமிழ் நாட்டில் அது தன் கடைசி மூச்சில் விழுந்து கிடக்கிறது.

பொம்மலாட்டம் குறித்து கலைஞர் வெங்கட் சாமிநாதன் கருத்து இதுவாகும்.

பொம்மலாட்டக் கலையானது மிகப் பழைமையான மரபுவழிக் கலைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இது கலை தழுவிய கூத்து வகையைச் சேர்ந்தது. இது மரத்தில் செய்யப்பட்ட பொம்மைகளில் நூலைக் கட்டி திரைக்குப் பின்னால் இருந்து இயக்கியபடி கதை சொல்லும் ஒரு சுவையான கலை நிகழ்வு. மரப்பாவைக் கூத்து, பாவைக்கூத்து என்ற பெயர்களாலும் இக்கலை அழைக்கப்படுகிறது. தோல் பொம்மலாட்டம், மரப்பொம்மலாட்டம் என இரண்டு வகையில் இக்கலை நிகழ்த்தப்படுகிறது.

இவ்வாறான பொம்மலாட்டக் கலையினை தற்போது இலங்கையில் நிகழ்த்தி வருகின்ற சீலன் அவர்களுடனான சந்திப்பு.

**கே: உங்கபை பற்றி சிறிய அறிமுகத்தைத் தாருங்கள்.**

பதில்: என்னுடைய பெயர் சீலன. வயது 41. நான் கடந்த 10 வருடங்களாக சண்முகம் ஆற்றுகை குழு என்னும் நாடகக் குழு ஒன்றை நிறுவி அதை இயக்கிக் கொண்டு வருகின்றேன். அந்த நிறுவனத்தினுடைய இயக்குனராகவும் நிருபராகவும் இருக்கின்றேன். அதைவிட கடந்த 20 வருடமாக நாடகத்துறை சார்ந்த வேலைகளில் முழுமையாக ஈடுபட்டு கொண்டு வருகிறேன் நாடக செயற்பாட்டாளராக, ஒரு முழுநேர நாடகக் கலைஞராக தற்போது தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

**கே: இங்கு, பொம்மலாட்ட கலையின் முக்கியத்துவம் எவ்வாறு இருக்கிறது?**

பதில்: இலங்கையில் தமிழ் அரங்கில் பாரம்பரிய கலை வடிவமாக பொம்மலாட்டக் கலை இருந்ததாக ஆதாரங்கள் இல்லை. ஆனால் சிங்கள அரங்கில் ஏற்கனவே இருந்திருக்கிறது. அது பொம்மலாட்டம் மற்றும் முகமூடிகளை பயன்படுத்தி செய்கின்ற அரங்காக பாரம்பரியமாகவே இருந்து வருகின்றது. குறிப்பாக கோலம் சொக்கரி போன்ற அம்சங்கள் அவர்களுடைய கலை வடிவத்தில் இருக்கின்றன. இவ்வாறாக பொம்மைகள் முகமூடிகளை பயன்படுத்தி செய்கின்ற முறை சிங்கள அரங்கில் இருக்கின்றது. ஆனால் தமிழில் அப்படி ஒரு பாரம்பரியமாக பொம்மைகளை பயன்படுத்தி செய்கின்ற அரங்கம் இருக்கவில்லை.

நாங்கள் சிறுவர்களுக்கான அரங்குகளை செய்கின்ற பொழுது அவர்களுடைய மகிழ்ச்சியான கற்றல் மற்றும் உளவியல் ரீதியாக அவர்களை கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட செய்வதற்காக இந்த பொம்மலாட்டத்தை பயன்படுத்துகின்றோம்.

**கே: உங்களுக்கு தெரிந்து இதற்கு முன்னதாக இந்த பொம்மலாட்டக் கலையை எவரேனும் பயன்படுத்தி இருக்கின்றார்களா?**

பதில்: இல்லை. பாடசாலைகளில் ஆசிரியர் பயிற்சிக்காக ஓவியரும் விரிவுரையாளருமாக ரமணி என்பவர் 20 வருடத்திற்கு முன்னர் புத்தகம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அது ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர்களுக்கு பயிற்சிக்கென பொம்மைகளை செய்யும் முறைகள், அது பயன்படுத்தப்படும் முறைகள் பற்றியது. அதனூடாக பிள்ளைகளுக்கும் பொம்மைகளுக்குமான தொடர்பை ஏற்படுத்தி எவ்வாறு தன்மூலமாக கற்றலை மேற்கொள்ளலாம் என்பதை வெளிப் படுத்துவதற்கான ஒரு வழிகாட்டி நூல். அதைத் தவிர நான் அறிந்தவரையில் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

பொம்மைகள் அதிகம் சிறுவர்களோடு தொடர்புடையவை. இயல்பாகவே சிறுவர்களுக்கு அதில் நாட்டம் இருக்கிறது. அனைத்துப் பிரிவினரும் விரும்பும் ஒரு பொருளாக பொம்மையின் தன்மை காணப்படுகின்றது. அத்துடன் பொம்மையின் தொன்மை என்பது சீனாவிலேயே தோன்றியிருக்கிறது. தற்போதும் சில சடங்கு முறைகள் காணப்படுகின்றன. கொடும்பாவி கட்டி எரித்தல், ஒருவர் இறந்து 30 ஆம் நாள் செய்யப்படுகின்ற பிதிர்க்கடன் அன்று வைக்கோலில் பொம்மை உருவம் செய்து அதனை எரிக்கின்ற மரபு தற்போதும் காணப்படுகின்றது.







## 'பொம்மலாட்டத்தின் மூலமாக சமூகத்திற்கு தேவையான நல்ல கருத்துகள், சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைக்கும் செயற்பாடுகளில் அதிகம் ஈடுபட வேண்டும் என்பதே எமது அவா'

**கே: பொம்மலாட்ட கலையில் தற்போதைய நிலை எவ்வாறு காணப்படுகின்றது?**

பதில்: ஆரம்பம் என்ற ஒன்று இல்லாத போது அதனுடைய வளர்ச்சி என்று எதனையும் கூறி விட முடியாது. இப்போது பொம்மலாட்டத்தின் சிறு முயற்சியாக நாங்கள் இந்த பொம்மலாட்டத்தை சுமார் பத்து வருடமாக செய்து வருகின்றோம். எங்களுக்கு அடுத்ததாக செயற்றிறன் அரங்க இயக்கம் இதனை செய்து வருகிறது. பாரம்பரிய கதை அம்சங்களை வைத்து அவர்கள் நாற்பது, ஐம்பது நிமிட ஆற்றுகையாக இதனை செய்து வருகின்றனர். நாங்களும் தற்போது தொடர்ந்து செய்து வருகின்றோம்.

**கே: பொம்மலாட்ட கலை தொடர்பான நீங்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் எப்படி–யானவையாக இருக்கின்றன?**

பதில்: பொம்மலாட்டத்திற்குத் தேவையான பொம்மைகளை பெற்றுக் கொள்வதற்கான பொருளாதாரம் பெரும் சவாலாக காணப்படுகின்றது. தற்போது பொம்மைகளை நாங்களே தயாரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றோம். மேலும் தற்போதைய சமூக ஊடகங்கள் போன்றவற்றின் தாக்கம் பொம்மலாட்டக் கலை மீதான ஆர்வத்தை குறைத்து இருக்கின்றது. அத்துடன் சிறிய அரங்குகளுக்குள் ஆற்றுகை செய்வது இலகுவானதாக இருந்தாலும் ஒரு திறந்த வெளியில் பொம்மலாட்டத்தை நிகழ்த்துவதில் சில இடர்பாடுகள் இருக்கின்றன. அவற்றையும் நாங்கள் சரியாக நிவர்த்தி செய்து எதிர்வரும் காலங்களில் சிறந்த முறையில் இந்த பொம்மலாட்டத்தை மேற்கொள்வதற்கான திட்டமிடல்களையும் மேற்கொண்டு வருகின்றோம்.

**கே: பொம்மலாட்டக்கலை தொடர்–பாக உங்களுடைய எதிர்கால திட்டங்கள் எவை?**

பதில்: தற்போதுள்ள சூழ்நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு கலைப் படைப்பை உருவாக்கி அரங்கேற்றுவது என்பது மிகவும் கடினமான விடயமாக காணப்படுகின்றது. அதற்கு நிறைய பொருட் செலவுகள், நேரம், முதலீடு என்பதை தேவைப்படுகின்றன. ஆனால் இந்த பொம்மலாட்டத்தின் மூலமாக இலகுவாக சமூகத்தில் சில விடயங்களை மேற்கொள்ள முடியும். மூன்று நான்கு நபர்கள் போதும். ஒரு சிறிய ஒழுங்குபடுத்தலோடு நிகழ்த்த முடியும். குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் அவர்களின் கற்றல், கற்பித்தல் மற்றும் மகிழ்ச்சிகரமாக வாழ்விற்காக இந்த பொம்மலாட்ட அரங்கு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கமாக காணப்படுகின்றது. அதற்கான சிறிய முயற்சிகளையும் செய்து கொண்டு வருகின்றோம். குறைந்த தொழிநுட்ப வசதியுடன் இங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி எப்படி பொம்மைகளை உருவாக்கலாம் என்னும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றோம். அத்துடன் இங்கு எம்மால் இயன்றளவிற்கு பொம்மலாட்ட ஆற்றுகைகளையும் நிகழ்த்தி வருவதோடு பொம்மலாட்டக் கலை தொடர்பான பயிற்சி வகுப்புக்களையும் நடத்தி வருகின்றோம். சிங்கள மக்கள் மத்தியில் இவ்வாறான பொம்மலாட்டக்கலையை நிகழ்த்துபவர்களுடன் இணைந்து எங்களுடைய பிள்ளைகளுக்கு பயிற்சிப்பட்டறைகளையும் நடத்தி வருகின்றோம். எதிர்காலத்தில் பொம்மலாட்டக்கலையை மக்கள் மத்தியில் விரும்பத்தக்க ஒரு அம்சமாக உருவாக்குவதோடு, பொம்மலாட்டத்தின் மூலமாக சமூகத்திற்குத் தேவையான நல்ல கருத்துக்கள், சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைக்கும் செயற்பாடுகளில் அதிகம் ஈடுபட வேண்டும் என்பதே எமது அவா ஆகும்.

**சந்திரமதி...**

## ஒரு சிலரது தவறான...

தயாராகவில்லை. ஆகவே இது அரசியல் செய்யும் தருணமல்ல.

சிறந்த நோக்கத்துடன் ஜனாதிபதி நாட்டை நிர்வகித்தார். ஒரு சிலரது தவறான தீர்மானங்களினால் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். தீர்மானமிக்க சூழ்நிலையில் எம்மால் சுயநலமாக செயலாற்ற முடியாது. ஜனாதிபதிக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு எவ்விதத்திலும் வங்குரோத்து அடையவில்லை.தற்போதைய நிலையில் நாட்டை பலப்படுத்த வேண்டும். டொலர் வரும் வழிகளை உருவாக்க வேண்டும். செலுத்த வேண்டிய கடனை மீளச் செலுத்துவதை ஒத்திவைத்து அதற்காக கால அவகாசம் பெற்று நெருக்கடி நிலையை சீர் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்ட அவர், சர்வதேச நாணய நிதியத்திடம் 03 பில்லியன் டொலர்களை 03 வருட காலத்துக்கு பெற்றுக்கொள்ளலாமெனவும் அத்தோடு உலக வங்கி, ஜப்பான் போன்றநாடுகள் உதவலாமென்றும் தெரிவித்தார். தகுதியான எவரும் பொறுப்பேற்காத நிலையில் நிதி அமைச்சு பொறுப்பை மீள ஏற்றதாக தெரிவித்த அவர், எத்தகைய விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள், அவமதிப்புகள் வந்தாலும் நாட்டுக்காக முடிந்தளவு தனது பொறுப்பை நிறைவேற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நெருக்கடிக்கு யார் பொறுப்பு என விரல் நீட்டிக் கொண்டிருப்பதால் எமது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது. கடந்த 02 வருடத்தில் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிட்டது. 2016 இல் 2020 வரையான காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவில்லையென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. 2017/18 காலப்பகுதியில் கிடைத்த நிதி திட்டமிடலின்றி செலவிடப்பட்டுள்ளது தொடர்பில் சிக்கல் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது காலத்தில் சில விடயங்களை தொலைநோக்குடன் மேற்கொள்ளாதது தொடர்பில் பிரச்சினை உள்ளது. சில வரிச்சலுகைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. (பா)

## IMF உடன் அரசு...

நடைபெறவிருக்கும் சர்வதேச நாணய சபைக் கூட்டத்தில் உலக வங்கியும் சமுகமளிக்கவுள்ளதால் இலங்கை அரசு தகுதிவாய்ந்த அதிகாரிகளை கட்டாயமாக அனுப்பி வைக்க வேண்டும்.

இலங்கையில் ஏற்றுமதித்துறையில் ஈடுபட்டிருக்கும் 38 துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் சங்கங்கள் ஒன்றிணைந்து அரசுக்கு விரைவாக செயல்படுமாறு கோரிக்கை விடுத்துள்ளன. இன்றைய பொருளாதாரச் சூழலும் ஏற்றுமதித்துறை எதிர் கொண்டிருக்கும் சவால்களும் என்ற பொருளில் நேற்று கொழும்பில் இத்துறையினர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்ததோடு இம் மாத இறுதியில் இந்தியக் கடன் சலுகை முடிவுக்கு வந்துவிடும் என்றும் அவ்வாறு முடிவுக்கு வந்ததும் அடுத்து என்ன செய்வது என்ற கேள்வியை எழுப்பினர்.

கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கம், அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் இறக்குமதியாளர் மற்றும் வர்த்தகர் சங்கம், ஏற்றுமதியாளர் சங்கம், ஆடைத்தொழில் சம்மேளனம், இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் வர்த்தக சங்கம், சீனி இறக்குமதியாளர் சங்கம், தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் உட்பட முக்கியமான ஏற்றுமதியுடன் தொடர்புடைய சங்கங்கள் இச் சந்திப்பில் கலந்துகொண்டன.

சர்வதேச நாணய சபையுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் போது ஆலோசகர்கள்குழுவொன்றை நியமிக்க வேண்டுமென்றும் இலங்கையின் வெ ளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துதல் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருப்பதால் கடன் அளித்தவர்களுடன் பேச்சுவார்த்தைகளையும் அவர்களின் ஒத்துழைப்பையும் பெற வேண்டியது அவசியமென இச் சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கை எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள் எழுவதற்கான நடவடிக்கைகளை இன்றைய அரசியல் நெருக்கடிகள் பாதித்துவிடக்கூடாது. இதன் முக்கியத்துவத்தை குறைத்து விடக்கூடாது. ஏற்றுமதியாளர்கள், கைத்தொழில்துறை, வேலைவாய்ப்புகள் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது அவசியம். பட்டினி நிலையை எவ்வாறேனும் தடுத்துவிட வேண்டுமென கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத் தலைவர் ஜயந்தா கருணாரத்ன இங்கு பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கை ஏற்றுமதியாளர்கள் மொத்தமாக வருடாந்தம் 16.7 பில்லியன் டொலர்களை ஈட்டுவதாகவும் இலங்கையின் ஒட்டுமொத்த ஊழியர்களின் அரைவாசிப் பேரான 4.2 மில்லியன் சேவையாளர்களுக்கு இத்துறை வேலைவாய்ப்பளித்து வருவதாகவும் குறிப்பிட்ட சங்கப் பிரதிநிதிகள், இன்றைய சூழல் மேலும் மோசமடைவதற்கு முன்னர் அரசியல் பேதங்களுக்கு அப்பால் சென்று நிலைமைகளை கட்டுப்படுத்தி மாற்று நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென அரசுக்கு அழைப்பு விடுத்தனர்.

இலங்கை எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி பொருளாதார படுவீழ்ச்சியை சந்திக்குமுன் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இச் சங்கங்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்திருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

## இரு எம்.பிக்களை...

அபேவர்த்தனவின் உத்தரவின் பேரில் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெற்ற வேளை சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சமிந்த விஜேசிறி,

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் பாதுகாப்பிற்கு 15க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சில எம்.பிக்களின் பாதுகாப்புக்காக சிறப்பு அதிரடிப்படையினரைக் கூட நியமித்துள்ளனர்.

ஆனால் ஏன் இந்தளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதென புரியவில்லை. திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி.யின் வீட்டுக்கும் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு பொலிஸ் பாதுகாப்பை பெற்று மக்களிடமிருந்து அவர்களை பாதுகாத்துக் கொள்கின்றனர். இதற்கு இடமளிக்க வேண்டாமென சபையில் தெரிவித்தார்.

இதனையடுத்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய பொதுஜன பெரமுன எம்.பி. திஸ்ஸ குட்டியாராச்சி கடந்த சில தினங்களுக்கு முன்னர் பண்டாரவளை ஆர்ப்பாட்டத்தில் சமிந்த விஜேசிறியின் வீட்டிற்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. சகல எம்.பிக்களின் வீட்டுக்கும் அன்றைய தினம் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஆனால் அதன் பின்னர் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. எனது வீட்டுக்கு நான்கு பொலிஸாரே பாதுகாப்பு வழங்கினர்,

ஆனால் அவர்களை திரும்பி செல்லுமாறு நான் கூறி விட்டேன். இன்று வரை எனது வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு பெற்றுக்கொள்ளவில்லை. எனவே பொய் கூறக்கூடாது என்றார்.

அதனையடுத்து இரு உறுப்பினர்களுக் கிடையிலும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் சபைக்குதவாத மோசமான வார்த்தைகள் தாராளமாக பயன்படுத்தப்பட்டன.

அச்சந்தர்ப்பத்தில் இரு தரப்பிலிருந்தும் எம்.பிக்கள் இருவரையும் சமாதானப்படுத்த முயற்சி செய்த போதும் வாக்குவாதத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

இருவரும் சபைக்கு பொருத்தமற்ற வார்த்தைகளை பயன்படுத்தி கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். தமது கட்டுப்பாட்டை இழந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.சமிந்த விஜேசிறி அருகிலிருந்த "செனிடைசர்" போத்தலை எடுத்து திஸ்ஸ குட்டியாரச்சியை நோக்கி வீசினார்.

அதனால் சபை குழப்பமடைந்ததுடன் விவாதத்தை கொண்டு நடத்த முடியாத அளவுக்கு நிலைமை மோசமடைந்தது. அதனையடுத்து சபையில் அநாகரிகமாக நடந்து கொண்ட இரு எம்.பிக்களையும் சபையிலிருந்து வெளியேற்றுமாறு படைக்கல சேவிதருக்கு சபாநாயகர் உத்தரவிட்டார்.

அதனையடுத்து இரு எம்.பி.க்களும் சபையிலிருந்து வெளியேறிச் சென்றனர்.

## மிக வேகமாக பரவி வரும்...

அவர் கூறியிருப்பதாவது:

ஒமிக்ரோன் வைரஸ் பிரிவுகளின் BA1 மற்றும் BA2 ஆகிய 02 வைரஸ்களின் கலவையாக XE வைரஸ் உருவாகி இருக்கிறது. இது வேகமாக பரவும் என்பது உண்மைதான். ஆனால் அதற்காக அந்த வைரசை நினைத்து கவலைப்பட வேண்டியதில்லை.

கொரோனா வைரஸ் தொடக்கத்திலிருந்தே பல்வேறு உருமாற்றங்களை பெற்று வருகிறது. அதில் ஒரு சாதாரண உருமாற்றம் தான் XE வைரஸ்.

கொரோனா வைரஸ்களில் டெல்டா பிளஸ் வைரஸ் தான் மிக அதிக உயிரிழப்பை ஏற்படுத்தியது. ஆனால் XE வைரஸ் ரொம்ப சாதுவானது. அது எந்த ஆபத்தையும் ஏற்படுத்த போவதில்லை. எனவே எக்ஸ் வைரசால் மிகப் பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை. எனவே மக்கள் வழக்கம் போல இயல்பான நிலையில் இருக்கலாம்.

BA2 வைரஸ் தான் சற்று பாதிப்பை ஏற்படுத்தும் என்ற கவலை இருக்கிறது. அதில் இருந்து உருமாற்றம் பெற்றுள்ள XE பற்றி பயமில்லை.

மேலும் இந்தியாவில் கணிசமானவர்கள் தடுப்பூசி செலுத்துக் கொண்டுள்ளனர். எனவே எல்லோரையும் புதிய உருமாற்ற கொரோனா வைரஸ்கள் பாதிக்காது.

ஒமிக்ரோனை விட 10 மடங்கு அதிகமாக XE வைரஸ் பரவும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் தடுப்பூசி செலுத்தி இருப்பவர்கள் மத்தியில் அதன் பாதிப்பு இருக்காது. தடுப்பூசி செலுத்தாதவர்களை தான் இந்த வைரஸ் பாதிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## IMF உதவி பெற்றுக்...

அரசாங்கம் என்ற வகையில் நாட்டுக்கு பொருத்தமான பொருளாதார மறுசீரமைப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் மிகைப்படுத்தப்பட்ட வகையிலேயே ஊடகங்களில் விடயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அது எந்தளவு நன்மையானதாக அமையுமென தெரியாது.

அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதை காணமுடிகிறது. அதேவேளை மூலப்பொருட்களை பெறமுடியாத நிலையும் காணப்படுகிறது.

வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதுடன் பழைய வாகனங்களை திருத்துவதற்கும் முடியாத நிலை எதிர்காலத்தில் உருவாகலாம்.

எவ்வாறெனினும் நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டு நாட்டில் இயல்பு நிலையை உருவாக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராஜினாமா செய்துள்ள... (03ஆம் பக்கத் தொடர்)

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் அவர்கள் உரிய ஆசனங்களில் அமர்வர். அதுவரை அவர்கள் வேறு ஆசனங்களில் அமர்ந்துள்ளனர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எவ்வாறெனினும் பதவி விலகிய பின்னும் உத்தியோகபூர்வ வாசஸ்தலம், அமைச்சர்களுக்கான வாகனங்களை அவர்கள் உபயோகப்படுத்தினால் அது தொடர்பில் அவர்கள் பொறுப்புக்கூற வேண்டுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நெருக்கடி நிலைக்கு தீர்வு... (03ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கத்தின் எந்த நடவடிக்கைகளை எடுத்தாலும் அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிப்பதே எதிர்க்கட்சிகளின் வேலையாகிவிட்டது.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட்டு தீர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிறைவேற்று அதிகாரம்... (03ஆம் பக்கத் தொடர்)

தொடர்புடையவர்களை தவிர்த்து ஏதேனும் வேலைத்திட்டம் முன்வைக்கப்படுமானால் முன்செல்ல வேண்டிய பயணம் தொடர்பில் எம்மால் பரிசீலிக்க முடியும்.

## புத்தாண்டு தினங்களில்...

கொள்ளப்படுவதாக அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். அத்துடன், நீர் மின் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் நேற்று ஓரளவு மழை பெய்துள்ளது.

இதன் காரணமாக இந்த வாரத்தை விட எதிர்வரும் வாரத்தில் நாடளாவிய ரீதியில் மின்வெட்டு காலம் மேலும் குறைக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## IMF அறிக்கையை...

செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்காதென சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் கூறவில்லையென தெரிவித்த அவர், அரசாங்கத்திற்கு உதவுவது போன்று செயற்பட்டு சிலர் இவ்வாறான வதந்திகளையும் பரப்புவதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்க்கட்சி இணக்கம் தெரிவித்துள்ளமைக்காக நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழக முதல்வரின்...

நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்பொழுது எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார மந்தநிலையால் ஏற்பட்டிருக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கான பற்றாக்குறையின் காரணமாக பாதிக்கப்பட்டு அவதியுறும் இலங்கை மக்களுக்காக அத்தியாவசியப் பொருட்களை தூத்துக்குடி துறைமுகம் ஊடாக இலங்கைக்கு அனுப்புவதற்கு தான் விரும்புவதாகவும் அவ்வாறு அனுப்பப்படும் பொருட்களை இந்திய தூதரகத்தின் ஊடாக விநியோகிப்பதற்கான அனுமதியை இந்திய வெளியுறவு அமைச்சரிடம் தமிழ்நாடு முதலமைச்சர் எம். கே. ஸ்டாலின் கோரியிருக்கிறார் என்ற செய்தியை ஊடகங்கள் வாயிலாக அறியக் கிடைத்தது.

அதற்காக முதலமைச்சருக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம். எம். முஷாரப் தெரிவித்துள்ளார்.

## மூன்று மாதங்களுக்கு...

சமுகமளிக்காதிருக்க முடிவு செய்துள்ளேன். எனக்கு பிரதமராக தேவையில்லை. நாட்டை கட்டியெழுப்பவே அனைவரும் இங்கு வந்துள்ளனர். ஒரு எம்.பி பதவியுடன் முன்னாள் பிரதமர் கூட நாட்டை கட்டியெழுப்ப வந்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் பாராளுமன்றம் வந்தது ஏன்? அனைவருக்கும் நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்புள்ளது. 2015 தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்றார். ஒவ்வொரு நாளும் இலட்சக்கணக்கான மக்கள் அவரின் தங்கல்ல வீட்டுக்கு வந்தனர். வென்ற மைத்திரிபாலவின் பொலன்னறுவை வீட்டுக்கு யாரும் செல்லவில்லை.

அன்று மக்கள் ஒருவாறு நடந்ததோடு இன்று வேறு விதமாக நடக்கின்றனர். தமிழ், சிங்கள புத்தாண்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் மக்களின் செயற்பாடு குறித்து உணர வேண்டும். இன்று கால்டன் வீட்டை மக்கள் சுற்றிவளைக்கின்றனர்.

## கவனிக்கப்படாவிட்டால்ன்... (03ஆம் பக்கத் தொடர்)

எச்சரித்தார். சொந்த மக்கள் தங்கள் சொந்த அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தும் போது மிகுந்த வலியை உணர்கிறேன் என்று சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அமைதியாக போராட்டம் நடத்துங்கள், வன்முறையில் ஈடுபடாதீர்கள் என்று நான் கூற விரும்புகிறேன். உண்மையான மக்கள் வெளியில் வந்து தாங்கள் பாதிக்கப்படுவதாக அரசாங்கத்திடம் கூறும் போராட்டம் இது என்று அவர் கூறினார்.

## நிறைவேற்று அதிகாரத்தை... (03ஆம் பக்கத் தொடர்)

அவர்களுடன் தொடர்புடையோர் இந்த செயற்பாடுகளிலிருந்து விலகி இருப்பார்களாயின் நாம் பேச்சுவார்த்தைக்கு தயார்.

இந்த நாட்டு மக்கள் மோசமான வகையில் பாதிக்கப்பட்டிருக் கின்றனர்.

இந்த பாதிப்பிலிருந்து அவர்களை துரிதமாக மீட்டெடுக்க வேண்டும் என்றார்.

## மேலும் 04 இலங்கையர்...

இரண்டரை வயதான மகனுடன் படகொன்றில் புறப்பட்டு நேற்று (08) அதிகாலை சுமார் 02 மணி அளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனை கடற்கரையை சென்றடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அவர்களை தமது பொறுப்பில் எடுத்துள்ள இராமேஸ்வரம் கடலோர காவல்துறை, மண்டபம் கடலோர காவல்நிலையத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். விசாரணைக்கு பின்னர் நால்வரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்க படுவார்களென மண்டபம் கடலோர காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (விரிவான செய்தி 09 ஆம் பக்கம்)

# தவக்கால சிந்தனை



## பரிசுத்த வாரம் நாளை ஆரம்பம்

தவக்காலத்தை பல்வேறு ஒறுத்தல் முயற்சிகள் மூலம் அனுஷ்டித்து வந்த நாம் நாளை பரிசுத்த வாரத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம்.

இந்த வாரம் நாம் ஆண்டவர் இயேசுவின் பாடுகளை தியானிப்பதில் மிகவும் முக்கிய தினங்களை அனுஷ்டிக்கவுள்ளோம்.

விபூதிப் புதனோடு ஆரம்பித்த தவக்காலம் 40 நாட்கள் தொடர்வதுடன் பரிசுத்த வாரம் நம்மை மேலும் புடம் போடுவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

இந்த வாரத்தை நாம் தவக்காலத்தின் உண்மையான பொருள் உணர்ந்து நம் வாழ்க்கையை மீண்டும் திரும்பிப் பார்த்து நம்மில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள பயன்படுத்துவோம்.

"உனக்காக நான் மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்?" என இயேசு நம்மைப் பார்த்து கேட்டால்

அதற்கு பதில் கூறும் வகையில் உமக்காக நான் என்னை மாற்றிக் கொண்டேன். உமக்கு ஏற்ற வகையில் நான் எனது வாழ்க்கையை இனி தொடர்வேன் என பதில் கொடுப்பதற்கு நாம் தயாராக வேண்டும்.

இன்றைய வேதாகம வாசகங்களை நாம் பார்க்கும் போது.

ஒருவர் சமூகத்தில் பிரபலமடைந்து முன்னேறும் போது அவரை எவ்வாறு வீழ்த்தலாம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுபவர்களும் உண்டு.

இயேசு யூதர்கள் மத்தியில் புகழ் அடைவதைக் கண்டு பொறுக்க முடியாத தலைமைக் குருக்களும் பரிசேயரும் இயேசுவைக் கொன்று விடுவதற்கு திட்டம் தீட்டினர்.

இன்றைய நற்செய்தி வாசகத்தை நாம் கவனித்துப் பார்த்தால்,

"அக்காலத்தில் மரியாவிடம் வந்திருந்த யூதர் பலர் இயேசு செய்ததைக் கண்டு அவரை நம்பினர். ஆனால் அவர்களுள் சிலர் பரிசேயரிடம் சென்று இயேசு செய்ததை தெரிவித்தனர்.

தலைமைக் குருக்களும் பரிசேயரும் தலைமை சங்கத்தைக் கூட்டி இந்த ஆள் பல அரும் அடையாளங்களைச் செய்து கொண்டிருக்கிறான்.என்ன செய்யலாம்? இவனை இப்படியே விட்டுவிட்டால் அனைவரும் இவனிடம் நம்பிக்கை கொள்வர் அப்போது உரோமையர் வந்து நம் தூய இடத்தையும் நம் இனத்தையும் அழித்து விடுவார்களே என்றனர்.

அதேவேளை, இனம் முழுவதும் அழிந்து போவதை விட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என்று கயபா இறைவாக்காக சொல்வதையும் நாம் பரிசுத்த வேதாகமத்தில் காணக் கிடைக்கின்றது.

கிறிஸ்தவமானது இந்த உலகில் ஒற்றுமையை ஊக்குவித்து கிறிஸ்துவின் திருச்சபையில் அனைத்து மக்களையும் கூட்டிச் சேர்க்க அழைப்பு விடுக்கிறது. என்பதையே இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஒன்றாக நாம் பார்க்க முடிகிறது.

எல்.செல்வா...

## டொலரின் விற்பனை...

டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 310 ரூபா 88 சதமாக பதிவாகியுள்ளது. மேலும், ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 407 ரூபா 08 சதமாகவும், விற்பனை பெறுமதி 421 ரூபா 89 சதம் யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 340 ரூபா 83 சதம் விற்பனை பெறுமதி 352 ரூபா 42 சதமாகவும், சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 332 ரூபா 87 சதம். விற்பனை பெறுமதி 346 ரூபா 20 சதமாகவும், கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 246 ரூபா 80 சதம் விற்பனை பெறுமதி 257 ரூபா 29 சதமாகவும், அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 231 ரூபா 59 சதம் விற்பனை பெறுமதி 242 ரூபா 38 சதமாகவும்,

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 02 ரூபா 51 சதம் விற்பனை பெறுமதி 02 ரூபா 61 சதமாகவும் பதிவாகியுள்ளது.

## ஏப்ரல் 19ஆம் திகதியே...

பாராளுமன்றத்தில் கூடி அது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியுமென்றும் எனினும் பாராளுமன்றத்தை கூட்ட வேண்டிய அவசியம் கிடையாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய பாராளுமன்றம் எதிர்வரும் ஏப்ரல் 19ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மீள அதில் மாற்றம் ஏற்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றைய விவாதத்தில் உரையாற்றிய போது நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்றும் முடியுமானால் எதிர்வரும் திங்கட்கிழமை பாராளுமன்றத்தைக் கூட்டி அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் சபையில் கேட்டுக் கொண்டார்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி எம். பி இரான் விக்ரமரத்ன:

முன்னாள் பிரதமர் முன்வைத்த யோசனை தொடர்பில் சபை முதல்வர் பதில் வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். அதற்குப் பதிலளித்த போதே சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

## அடுத்த வாரம் புதிய...

குற்றச்சாட்டுகளை முன்வைத்ததால் கடும் சர்ச்சை ஏற்பட்டது. இதன் போது கருத்துத் தெரிவித்த அவர்,

தாம் இல்லாத நேரத்தில் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வந்ததாக எதிரணி எம்.பிக்கள் கூறினர். ஆனால் அவருக்கு முகம் கொடுக்க முடியாமல் எதிரணி எம்.பிக்கள் தலைமறைவாகினர். ஆளும் தரப்பு எம்.பிக்கள் அவருக்கு ஆதரவை தெரிவித்ததை முழுநாடும் கண்டது.2018 இல் வீதிக்கு இறங்கு அரசியலமைப்பை மீறி செயற்படாதீர்களென கோரியவர்கள் இன்று அரசியலமைப்புக் கமைய தெரிவான ஜனாதிபதியை வீட்டுக்கு செல்லுமாறு கேட்கிறீர்கள். எதிரணிக்கு பிரதமர் சந்தர்ப்பம் வழங்கியுள்ளார். விரும்பிய அமைச்சரவையை நியமிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் போதுமான எம்.பிக்களின் ஆதரவு அவர்களிடமில்லை. அரசாங்கம் செயற்படுகிறது. இராஜாங்க அமைச்சர்களாக நாங்கள் பணியாற்றி வருகிறோம். அமைச்சுக்களில் பணிகள் நடைபெறுகின்றன. அடுத்த வாரம் அமைச்சரவை நியமிக்கப்படும் என்றார். (பா)

## ஏப்ரல் இறுதி வரை மாத்திரமே...

ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று சபையில் அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்ட அவர்,

சுயாதீன குழுவாக செயற்படவும் அரசு பதவிகளை கைவிடவும் சு.க முடிவு செய்தது. பிரதி சபாநாயகர் பதவி அரச பொறுப்பன்றி எம்.பிக்களால் நியமிக்கப்பட்ட பதவி என்ற போதும் மக்களுக்காக பதவி விலகினேன். கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினேன். ஜனாதிபதியை சு.க சந்தித்த போது எனது இராஜினாமாவை அவர் நிராகரித்தார். தற்போதைய நெருக்கடி நிலையில் ஜனநாயகத்தை பாதுகாக்க ஒத்துழைக்குமாறும் பதவியில் தொடருமாறும் அவர் கோரினார். அதனால் ஏப்ரல் இறுதி வரை மாத்திரம் இந்தப் பதவியில் நீடிப்பேன். ஏப்ரல் 05 ஆம் திகதி நான் இராஜினாமா கடிதம் வழங்கிய நாள் முதல் பிரதி சபநாயகர் பதவிக்குரிய எந்த சலுகைகளையும் பெற மாட்டேன். அவ்வாறு பயன்படுத்தினால் அதற்கு பணம் அறவிடுமாறு கோருகிறேன். அன்றாட வாழ்வு குழம்பியுள்ள நிலையில் எமது அர்ப்பணிப்பை காண்பிக்க இந்த முடிவை எடுத்தேன்.

## மக்கள் போராட்டங்களில்...

இருவரும் (சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க) இன்று எனக்கு எதிரான போராட்டங்களை நடத்துகின்றனர். அவர்களின் கட்சிகளின் பிரதிநிதிகளும், ஆதரவாளர்களுமே எனக்கு எதிராக வீதிகளில் இறங்கி போராடுகின்றனர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## சதொசவிடமிருந்து புத்தாண்டு...

ஒரு கிலோ சிவப்பு சீனி மற்றும் 100 கிராம் தேயிலை என்பன இப்பொதியில் உள்ளடங்குகின்றன. இந்த நிவாரணப் பொதி 1,950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

சந்தை விலைகளுடன் ஒப்பிடுகையில், இந்த 05 பொருட்களின் கொள்முதல் விலையை விட நுகர்வோர் 700 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட நன்மைகளைப் பெறுவதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளர்து.

இந்தப் புத்தாண்டு நிவாரணப் பொதி இன்று (9) முதல் லங்கா சதொச விற்பனை நிலையங்களினூடாக விற்பனை செய்யப்படவுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

பெருந்தோட்ட அமைச்சு
**இலங்கைத் தேயிலைச் சபை**
தேயிலை ஆணையாளர் பிரிவு

## பச்சை தேயிலைக்கான நியாயமான விலையை செலுத்துதல்

## 2022 மார்ச் மாதம்

**1993 ஆம் ஆண்டின் இல 03 கீழ் திருத்தப்பட்ட சட்டம் 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 8 (2) ன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப 2022 மார்ச் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களால் கொள்முதல் செய்யப்பட்ட பச்சை தேயிலைக்கான நியாயமான விலை கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளவாறு அறிவிக்கப்படுகின்றது.**

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை மார்ச் |
|---|---|---|---|
| பதுளை மாவட்டம் | | | |
| 1 | MF0382 | திக்வெல்ல | 141.06 |
| 2 | MF0988 | சரினா குரூப் | 138.75 |
| 3 | MF0821 | க்ளெனோர் | 137.22 |
| 4 | MF0253 | வேவெஸ்ஸ | 135.72 |
| 5 | MF1203 | ஊவா ஹல்பேவத்த | 135.68 |
| 6 | MF0381 | சவுதம் | 131.67 |
| 7 | MF0041 | தேபெத்த | 131.01 |
| 8 | MF0637 | உடுவர | 129.06 |
| 9 | MF1590 | கோல்ட் பட்ஸ் ஊவா டீ | 127.72 |
| 10 | MF0667 | க்ளேன் எல்பின்ஸ் குரூப் | 126.47 |
| 11 | MF0974 | ஹப்புகஹவத்த | 126.27 |
| 12 | MF0677 | ஸ்பிரிங்வெலி குரூப் | 126.13 |
| 13 | MF0596 | அடாவத்த | 125.73 |
| 14 | MF0720 | கோனமோட்டாவ | 124.93 |
| 15 | MF0581 | அயிஸ்லெபி | 123.55 |
| 16 | MF0712 | ப்லேயார்ல்மன்ட் | 121.94 |
| 17 | MF0371 | பட்டவத்த | 121.50 |
| 18 | MF0678 | தெலெபெத | 120.67 |
| 19 | MF0488 | வெருளுபத்தன | 120.21 |
| 20 | MF1000 | ரோபெரி | 119.79 |
| 21 | MF0598 | ஷோலன்ட்ஸ் | 117.93 |
| 22 | MF0156 | ஊவா ஹைலண்ட்ஸ் | 116.53 |
| 23 | MF0214 | அம்பேதென்ன | 114.51 |
| 24 | MF1595 | இரநாயா | 113.46 |
| 25 | MF0572 | ஹோப்டன் | 110.87 |
| 26 | MF1534 | பஸ்ஸர தே சக்தி | 108.96 |
| 27 | MF1524 | எம்புரோய்ஸ்சா | 108.36 |
| 28 | MF0683 | கிரேக் | 108.15 |
| 29 | MF0269 | தம்பேதென்ன | 107.93 |
| 30 | MF0329 | ஊவா மொரகல்ல | 106.46 |
| 31 | MF0668 | ஹிந்தகல | 105.30 |
| 32 | MF0739 | கர்கிலிஸ் | 104.72 |
| 33 | MF0234 | கோனகெலே | 104.43 |
| 34 | MF0217 | எல்டெப் | 103.89 |
| 35 | MF1293 | லக்கி லேன்ட் | 103.79 |
| 36 | MF0302 | உளுகெதர | 103.47 |
| 37 | MF0983 | ஹப்புதளை | 103.11 |
| 38 | MF0494 | அம்பிட்டிகந்த | 102.77 |
| 39 | MF0986 | மஹதொவ | 102.01 |
| 40 | MF0243 | கினலன் | 101.30 |
| 41 | MF0235 | நயாபெத்த | 101.25 |
| 42 | MF0972 | கெப்பட்டிபொல தே சக்தி | 95.62 |
| 43 | MF0105 | கனவரெல்ல | 94.02 |
| 44 | MF0292 | பூணாகல | 92.73 |
| 45 | MF0522 | நிவ் ரோஸலன்ட் | 79.53 |
| 46 | MF0754 | ஊவா ஹப்புத்தளைவெலி | 77.78 |
| கொழும்பு மாவட்டம் | | | |
| 1 | MF1264 | அவிஸ்ஸாவெல்ல | 167.76 |
| காலி மாவட்டம் | | | |
| 1 | BF0035 | ஹில்சயிட் | 170.19 |
| 2 | MF1373 | மொரகெட்டிய | 166.80 |
| 3 | MF0184 | ரேகடஹேன | 162.72 |
| 4 | MF1195 | கோல்டன் லீ.ஃப் | 161.05 |
| 5 | MF1501 | சிஹாரா | 159.26 |
| 6 | MF1303 | நில் கந்துர | 156.46 |
| 7 | MF1367 | வத்துரவில | 156.36 |
| 8 | MF1540 | சேரன்யா | 155.76 |
| 9 | MF0862 | வீவருகொட | 155.39 |
| 10 | MF1353 | ஹில்கார்டன் | 155.38 |
| 11 | MF1411 | சுசந்த | 155.16 |
| 12 | MF1396 | ஹிமாரா | 154.49 |
| 13 | MF1398 | அத்துகோரளை | 153.85 |
| 14 | MF1389 | கராகொட | 153.62 |
| 15 | BF0187 | நிவ் சிங்ஹவெலி | 153.15 |
| 16 | MF1341 | துளிஎல்ல | 152.87 |
| 17 | MF0079 | சணச | 152.73 |
| 18 | MF1361 | உடுஎல்ல | 152.71 |
| 19 | MF1346 | மஹகெதர | 152.70 |
| 20 | MF0908 | கெப்டன் கார்டன் | 152.45 |
| 21 | BF0181 | இரத்ன | 152.30 |
| 22 | MF0954 | மொரகல்ல | 152.25 |
| 23 | MF1376 | சௌபாக்யா | 152.21 |
| 24 | MF1139 | ஜெஸ்மின்வெலி | 152.06 |
| 25 | MF1548 | சுவிஸ்க்கா | 150.77 |
| 26 | MF1338 | யக்கலமுல்ல | 150.22 |
| 27 | MF1475 | முஸ்வென்ன | 150.07 |
| 28 | MF0142 | சிரிமேவன | 149.84 |
| 29 | MF1342 | எவர்கிரின் | 149.83 |
| 30 | MF1452 | மஹலியத | 149.34 |
| 31 | MF1300 | இம்புல்கஹகொட | 149.28 |
| 32 | MF1401 | ஜனஹித்த | 149.16 |
| 33 | MF1371 | நயிந்தாவ | 149.05 |
| 34 | MF1543 | ஷம்ரின் | 148.68 |
| 35 | MF1319 | தல்கம்பளை | 147.90 |
| 36 | MF1370 | ருஹுணு | 146.80 |
| 37 | MF1400 | மிரிஸ்வத்த | 146.10 |
| 38 | MF0861 | வவுலுகல | 145.88 |
| 39 | MF1434 | லியோட்டா | 145.28 |
| 40 | BF0149 | காலு கங்கபட | 144.82 |
| 41 | MF1006 | இத்தேகல | 144.56 |
| 42 | MF1427 | மெனிக்கந்த | 144.49 |
| 43 | MF1186 | தேவகிரி | 143.86 |
| 44 | MF1439 | எக்வின் | 143.55 |
| 45 | MF1334 | மாரகந்த | 143.49 |
| 46 | MF1314 | நெலுவ மெதகம | 143.24 |
| 47 | MF1549 | இரன்மீர் | 142.88 |
| 48 | MF0321 | தலங்கஹ | 142.74 |
| 49 | MF1380 | கங்கசிரி | 142.51 |
| 50 | MF1437 | தெல்லேவ | 142.34 |
| 51 | MF1332 | குருப்பனாவ | 142.25 |
| 52 | MF1393 | நிவ் உடுமுல்லகொட | 141.93 |
| 53 | MF1333 | ஹிங்குல்கொட | 141.93 |
| 54 | MF1422 | இவிஹில்ஸ் | 141.55 |
| 55 | MF1375 | தனவல | 141.32 |
| 56 | MF1318 | சினென்சிஸ் | 140.25 |
| 57 | MF1271 | முஸ்ஸெந்தபொத்த | 140.08 |
| 58 | MF0815 | வலஹந்துவ தே சக்தி | 139.62 |
| 59 | MF1494 | பரகொடகந்த | 139.22 |
| 60 | MF1330 | ஹல்விட்டிகல | 139.00 |
| 61 | MF1328 | மஹாம்பான | 138.76 |
| 62 | MF1359 | திலக்க | 138.59 |
| 63 | MF1526 | ஹினிதும ஹில்ஸ் | 138.00 |
| 64 | MF1350 | பட்டுவங்கல | 137.77 |
| 65 | MF1497 | கன்னேலிய | 137.76 |
| 66 | BF0120 | கிரேஸ்லேன்ட் | 137.29 |
| 67 | MF1306 | சினேத் | 136.33 |
| 68 | MF0080 | வெஹிஹேன | 136.05 |
| 69 | MF1369 | மெண்டிஸ் | 136.03 |
| 70 | MF1311 | சில்வரி | 135.99 |
| 71 | BF0172 | விஜய | 134.81 |
| 72 | MF1529 | கிரின்வின் | 134.79 |
| 73 | MF1251 | எரமுல்ல | 134.70 |
| 74 | MF0128 | பிம்புராகல | 134.35 |
| 75 | MF1384 | நெகினிகல | 134.00 |
| 76 | MF0655 | பத்தேகம | 133.32 |
| 77 | MF1404 | தொட்டுபலவத்த | 132.56 |
| 78 | MF0751 | திசர | 132.34 |
| 79 | MF1511 | ஜெயசிங்ஹ | 131.24 |
| 80 | MF0907 | கெட்டந்தொல | 130.86 |
| 81 | MF1510 | எகில்மா | 128.81 |
| 82 | MF1253 | மஹேஸ்லன்ட் | 128.62 |
| 83 | MF1323 | டேவிட்சன் | 127.37 |
| 84 | MF1473 | கெல்லபத்த | 127.21 |
| 85 | BF0178 | நிவ் கொட்டாவ வெலி | 126.82 |
| 86 | MF1378 | வொன்வில் | 125.76 |
| 87 | MF1364 | இரத்கந்த | 125.67 |
| 88 | MF1504 | எல்பிட்டிய தே சக்தி | 125.44 |
| 89 | MF1438 | கோல் ரே | 123.16 |
| 90 | MF1170 | இவிவெலி | 122.17 |
| 91 | MF1307 | குருந்துவத்த | 120.46 |
| 92 | MF0124 | இரசோட்டா | 118.15 |
| 93 | MF1252 | வெளிஹேன | 112.59 |
| 94 | MF0259 | குடாமலான | 111.21 |
| 95 | MF0304 | தல்கஸ்வல | 107.26 |
| 96 | MF1421 | இலக்மலி | 103.44 |
| 97 | MF1315 | றுவன்தென்ன | 96.99 |
| 98 | MF0756 | தொடங்கஹ | 95.22 |
| 99 | MF1485 | குருதியபொத்த | 85.29 |
| ஹம்பாந்டோடம் மாவட்டம் | | | |
| 1 | MF1564 | நிவ் ஹதுகல | 140.12 |
| களுத்துறை மாவட்டம் | | | |
| 1 | MF1435 | கலத்தர | 147.84 |
| 2 | MF1557 | எச்.பீ.பீ. | 145.26 |
| 3 | MF1476 | நிவ் ஜே.எஸ்.பி | 143.78 |
| 4 | MF1455 | துன்தொல | 143.10 |
| 5 | MF1565 | லிஹினியாவ | 140.40 |
| 6 | MF1544 | ஹெடிகல்ல | 140.32 |
| 7 | MF1481 | ரைகம் கோரளே தே சக்தி | 139.81 |
| 8 | MF1563 | புலத்சிங்ஹல | 139.08 |
| 9 | BF0183 | பதுரளிய | 137.44 |
| 10 | MF1399 | நில்கஹஹேன | 136.42 |
| 11 | MF1593 | ஜே.எஸ்.பீ.நெலும்தல்ல | 133.39 |
| 12 | MF1530 | குமுது | 132.31 |
| 13 | MF1594 | இரத்மல்கொட | 131.21 |
| 14 | MF1280 | மிஹிரிகீகெலே | 128.91 |
| 15 | MF1472 | சுணில்ஸ் | 127.14 |
| 16 | MF1527 | கங்கானி | 126.10 |
| 17 | MF1503 | எல்ஹேவன | 124.01 |
| 18 | MF1492 | வின்வுட் | 122.01 |
| 19 | MF0365 | ஹாட்லி | 121.93 |
| 20 | MF1558 | அருண | 113.67 |
| 21 | MF1465 | புரோம்பிரில் | 112.81 |
| 22 | MF0147 | ரையிகம | 101.20 |
| 23 | MF1372 | பலின்தன் நுவர | 99.51 |
| 24 | MF1477 | மொரபிட்டிய | 97.73 |
| 25 | MF1310 | கல்லுமலே | 97.65 |
| 26 | MF1584 | கொலம்ப ஆரச்சி | 58.48 |
| கண்டி மாவட்டம் | | | |
| 1 | MF0608 | கிரேக்ஹெட் | 131.26 |
| 2 | MF0007 | கலமுதுன | 128.91 |
| 3 | MF0402 | எல்பிட்டிய | 123.83 |
| 4 | BF0043 | நிவ் வெலிகங்க | 121.31 |
| 5 | MF0561 | குருந்துவத்த | 118.58 |
| 6 | MF0616 | டாட்ர் | 118.37 |
| 7 | BF0028 | ஒரேன்ஜ் பீல்ட் | 117.65 |
| 8 | MF0697 | நயாபன | 117.48 |
| 9 | MF1181 | பல்லேகம | 116.83 |
| 10 | MF0416 | அப்பர் லென்டர்ன் ஹில் | 115.67 |
| 11 | BF0171 | நிவ் ∴பர்ல்லன்ட | 115.58 |
| 12 | MF0341 | இங்குருகல | 115.37 |
| 13 | MF0866 | வெஸ்ட் ஹோல் | 115.32 |
| 14 | BF0020 | வட்டதெனிய | 113.14 |
| 15 | MF0164 | இம்புல்பிட்டிய | 113.03 |
| 16 | MF1257 | அப்லன்ட்ஸ் | 112.91 |
| 17 | MF0800 | வெம்பிலி | 112.12 |
| 18 | MF1247 | ஸ்டோர்பீல்ட் | 111.31 |
| 19 | MF0836 | சன்குஹர் | 111.25 |
| 20 | MF1426 | பரகல்ல | 110.90 |
| 21 | BF0165 | தெஹிவத்த | 110.62 |
| 22 | MF1585 | மெணிக்திவெல | 109.98 |
| 23 | MF0127 | கிங்ஸ்வெலி | 108.97 |
| 24 | MF0817 | யஹலதென்ன | 108.47 |
| 25 | MF0093 | என்கொம்புர | 106.44 |
| 26 | BF0111 | பிலிமதலாவ | 105.62 |
| 27 | MF0967 | கெட்டகஹவல | 105.31 |
| 28 | MF1035 | சியோன் ஹில | 104.66 |
| 29 | MF1596 | லிவர்பூல் | 104.28 |
| 30 | MF0132 | எரின் | 103.90 |
| 31 | MF0148 | இராக்ஷாவ | 103.66 |
| 32 | MF0604 | லூல்கந்துர குரூப் | 103.32 |
| 33 | BF0123 | கல்பாய | 103.07 |
| 34 | MF0553 | மொஸ்விலே | 102.75 |
| 35 | MF1513 | நிவ் பத்தேகம | 102.37 |
| 36 | MF0077 | மல்கொல்ல | 101.70 |
| 37 | MF1521 | கிரிமெட்டிய | 101.41 |
| 38 | MF0150 | நிவ் ஒரியன் | 100.91 |
| 39 | MF0255 | நிவ் கெலிய குரூப் | 99.63 |
| 40 | MF0013 | நிவ் பீகொக் குரூப் | 99.14 |
| 41 | MF0707 | நிவ் தொரகல | 98.61 |
| 42 | MF0602 | டெல்டா | 97.87 |
| 43 | MF1461 | எம்பில்மீகம | 95.78 |
| 44 | MF1509 | தெஹிகம | 94.01 |
| 45 | MF0897 | டக்வாரி | 92.85 |
| 46 | MF0020 | குருகம | 92.51 |
| 47 | MF0538 | லீ வெலோன் | 91.36 |
| 48 | MF0823 | பட்டியகம | 90.02 |
| 49 | MF1044 | கிரின்வுட் | 89.94 |
| 50 | MF0340 | ஹோப் | 88.88 |
| 51 | MF1523 | உதயகந்த | 87.61 |
| 52 | MF0556 | மொன்டி கிரிஸ்டோ | 85.68 |
| 53 | MF1269 | இரங்கல்ல குரூப் | 83.09 |
| 54 | MF1235 | லென்டர்ன்ஹில் | 81.16 |
| 55 | BF0170 | நில்தலுகந்த | 80.28 |
| 56 | MF0024 | பலகல | 78.68 |
| 57 | MF1082 | ரின்க் வுட் | 77.54 |
| 58 | MF0268 | ரையின்லேன்ட் | 75.14 |
| 59 | MF0634 | அலகல்ல | 72.98 |
| 60 | MF0286 | கெலேபொக்க | 63.39 |
| கேகாலை மாவட்டம் | | | |
| 1 | MF0293 | களணி | 144.13 |
| 2 | MF0626 | ஹல்கொல்ல | 136.09 |
| 3 | MF1528 | மிசா | 131.82 |
| 4 | MF0236 | பம்பேகம | 129.47 |
| 5 | MF0574 | சப்புமல்கந்த | 128.00 |
| 6 | MF1304 | கெஹெல்வல | 127.45 |
| 7 | MF1580 | கித்துல்கல | 126.23 |
| 8 | MF0085 | நூரி | 125.92 |
| 9 | MF1297 | இலுக்தென்ன | 122.54 |
| 10 | MF1579 | தெரணியகல தே சக்தி | 122.53 |
| 11 | MF0353 | யட்டிதேரிய | 116.79 |
| 12 | MF0903 | மாலிபொட | 115.87 |
| 13 | MF0318 | ரோசித் | 115.33 |
| 14 | MF1057 | தேதுகல | 115.03 |
| 15 | MF0472 | என்டேரபொல | 114.53 |
| 16 | MF1316 | கொலொன்ன | 113.06 |
| 17 | MF0267 | நிவ் மவுன்ட் கர்மல் | 110.31 |
| 18 | MF0895 | தோத்தல் ஓய | 107.57 |
| 19 | MF1599 | கெனோரா | 87.18 |
| மாத்தளை மாவட்டம் | | | |
| 1 | MF0344 | மாத்தளை வெஸ்ட் | 112.35 |
| 2 | MF1413 | மவுன்ட் எலீசா | 108.20 |
| 3 | MF0722 | ஹாத்தளை | 107.52 |
| 4 | MF0370 | பண்டாரபொல | 104.08 |
| 5 | MF0724 | மிட்லேண்ட்ஸ் | 82.51 |
| 6 | MF0315 | பன்சலதென்ன | 69.66 |
| மாத்தறை மாவட்டம் | | | |
| 1 | MF1428 | ∴போகூன் | 189.24 |
| 2 | BF0138 | போத்தொட்டுவ | 186.12 |
| 3 | MF1337 | லும்பிணி | 175.88 |
| 4 | MF1507 | சன்ரைஸ் | 175.45 |
| 5 | MF1450 | ரொட்டும்ப | 174.09 |
| 6 | MF1468 | நில்ரிச் | 172.60 |
| 7 | BF0157 | ஆபர் வெலி | 170.38 |
| 8 | MF1410 | குணவர்தன | 170.09 |
| 9 | MF1443 | கீ டீ ஹில்ஸ் | 167.60 |
| 10 | MF1331 | தம்பஹல | 166.22 |
| 11 | MF1462 | லயன்ஸ் | 164.86 |
| 12 | MF0216 | இரசா | 163.66 |
| 13 | MF1033 | நில்திய வெலி | 162.91 |
| 14 | MF1502 | நில்கிரி | 162.79 |
| 15 | BF0173 | டெவோனியா | 162.69 |
| 16 | MF1414 | தெரங்கல ஹில்ஸ் | 162.20 |
| 17 | MF1329 | முலட்டியன | 161.65 |
| 18 | MF1500 | கிரீன் ஹவுஸ் | 160.57 |
| 19 | MF1578 | இலக்வின்கா | 160.00 |
| 20 | MF1274 | பெருபேபுல | 159.36 |
| 21 | MF0454 | கலகாவ | 158.16 |
| 22 | MF1533 | தலபலாகந்த | 157.81 |
| 23 | MF0440 | ஊறுவல | 157.75 |
| 24 | MF1464 | ∴பேரிமவுன்ட் | 157.35 |
| 25 | MF1275 | தெனியாய நிவ் | 157.20 |
| 26 | MF1198 | தெனியாய தே சக்தி | 157.19 |
| 27 | MF1506 | வலவ்வத்த | 156.94 |
| 28 | MF1270 | பியோல்ட்டா | 156.21 |
| 29 | MF1407 | போகொட | 156.15 |
| 30 | MF1287 | நந்தன | 155.19 |
| 31 | MF0802 | தெனியாய | 155.12 |
| 32 | MF0443 | கிங்ஸ்போ | 154.74 |
| 33 | MF1231 | எட்டம்பகஹவில | 154.50 |
| 34 | MF1490 | இரன்சேகொட | 154.12 |
| 35 | MF1278 | மத்தொட்ட | 154.01 |
| 36 | MF1320 | ரிச்லன்ட் | 153.68 |
| 37 | MF1547 | மாகந்துர | 153.47 |
| 38 | BF0161 | பேயரிலன்ட் | 153.30 |
| 39 | MF0977 | விலீ குரூப் | 153.26 |
| 40 | MF1561 | தெதியகல | 152.55 |
| 41 | MF1577 | லேனம ஹில்ஸ் | 152.45 |
| 42 | MF1041 | கலபொட | 152.10 |
| 43 | MF1482 | தெரங்கல | 151.48 |
| 44 | MF1498 | ஊருபொக்க | 150.82 |
| 45 | MF1322 | பஸ்கொட | 150.71 |
| 46 | MF1516 | கன்ரிச் | 150.31 |
| 47 | MF1360 | டிஷான் வெலி | 149.46 |
| 48 | MF0414 | கட்டன்வில | 148.90 |
| 49 | MF1339 | யாழ்டா | 148.58 |
| 50 | MF1514 | நிவ் அத்துரலிய | 148.30 |
| 51 | MF1107 | திப்பொல | 148.10 |
| 52 | BF0186 | நில்வலா | 147.93 |
| 53 | MF1362 | நிவ் காமிணி | 147.53 |
| 54 | MF1423 | கோ-ப் லங்கா | 147.28 |
| 55 | MF0426 | சவுத் கோ-ப் | 146.49 |
| 56 | MF1562 | சுதுகஹஹேன | 146.47 |
| 57 | MF1417 | கோப்வீன் | 146.22 |
| 58 | MF1518 | கோ-ப் கோலா | 146.05 |
| 59 | MF1406 | கிரின் லங்கா | 145.37 |
| 60 | MF1077 | மஹேந்ரா | 145.27 |
| 61 | MF1542 | அந்தரதெனிய | 144.84 |
| 62 | MF1486 | தம்மென்ன | 143.32 |
| 63 | MF1004 | தித்தெனிபொத்த | 142.12 |
| 64 | MF0016 | பெவர்லி | 141.90 |
| 65 | MF1484 | குடாபான | 139.64 |
| 66 | BF0044 | மொரவக்கோரலே | 139.43 |
| 67 | MF1402 | நிவ் சவுத் கோ-ப் | 139.33 |
| 68 | MF1545 | லியோன்ட்டா | 138.51 |
| 69 | MF0064 | அனின்கந்த | 138.19 |
| 70 | MF1340 | த்ரி டைம்ஸ் | 138.04 |
| 71 | MF1383 | நவ தியகல | 137.81 |
| 72 | MF1568 | வுட்லன்ட் | 136.62 |
| 73 | MF1024 | எலன்வெலி | 135.61 |
| 74 | MF0975 | செமிடெல் | 133.38 |
| 75 | MF1298 | நில்எல்ல | 133.13 |
| 76 | MF0009 | எனசல்வத்தை | 130.33 |
| 77 | MF1539 | எஸ்.எல்.எஸ | 127.99 |
| 78 | BF0188 | களுபோவிட்டியான | 127.54 |
| 79 | MF1574 | பலகல | 122.64 |
| 80 | MF0192 | கணுகெட்டிய | 104.00 |
| நுவரெலியா மாவட்டம் | | | |
| 1 | MF0459 | கோர்ட் லொஜ் | 143.34 |
| 2 | MF0713 | மில்லிங்டன் | 142.68 |
| 3 | MF0642 | புரோட்லேன்ட்ஸ் | 141.75 |
| 4 | MF0646 | டொரிங்ட்டன் | 139.21 |
| 5 | MF1254 | கொன்கோர்டியா | 138.57 |
| 6 | MF0457 | பெட்ரோ | 135.38 |
| 7 | MF0350 | சோகம | 134.93 |
| 8 | MF0004 | மட்டகெலே | 134.09 |
| 9 | MF1301 | நுவரெலியா | 132.10 |
| 10 | MF0489 | கிரேட் வெஸ்டர்ன் | 131.11 |
| 11 | MF0779 | சமர்செட் | 129.19 |
| 12 | MF0569 | டெஸ்போர்ட் | 128.58 |
| 13 | MF0568 | பம்பரகெலே குரூப் | 128.48 |
| 14 | MF0597 | கெட்டபுலா | 127.71 |
| 15 | MF0772 | ஹோலிரூட் | 125.96 |
| 16 | MF0767 | டிலரி | 125.76 |
| 17 | MF0033 | துரொப் | 125.73 |
| 18 | MF0071 | வத்தேகொட | 125.45 |
| 19 | MF0066 | கௌரவில | 125.21 |
| 20 | MF0396 | இன்ஜஸ்ட்ரி | 124.71 |
| 21 | MF0840 | வென்ச்சர் | 124.54 |
| 22 | MF0928 | டெல்மர் | 123.28 |
| 23 | MF0835 | ஹரங்கல்ல | 123.05 |
| 24 | MF0368 | பெல்மோரல் | 122.84 |
| 25 | MF0492 | க்வின்ஸ்பரி | 121.53 |
| 26 | MF0981 | என்பீல்ட் | 120.30 |
| 27 | MF0021 | கோர்டன் | 120.22 |
| 28 | MF0495 | ∴புரொடைய்ஸ் | 120.12 |
| 29 | MF0008 | கொரக்ஓய | 119.91 |
| 30 | MF0984 | கைப்புகல | 119.76 |
| 31 | MF0420 | கூல்போவ்ன் | 119.62 |
| 32 | MF0069 | கொட்டியாகல்ல | 119.50 |
| 33 | MF0159 | ஸ்டொக்ஹோம் | 118.10 |
| 34 | MF0692 | வோல்ட்ரிம் | 118.03 |
| 35 | MF0711 | பெயார்வெல் | 117.73 |
| 36 | MF0902 | வெதமுல்ல | 117.38 |
| 37 | MF0294 | ரொப்கில் குரூப் | 117.08 |
| 38 | MF0391 | கோனபிட்டிய குரூப் | 116.73 |
| 39 | MF0548 | கெனில்வர்த் | 116.38 |
| 40 | MF0552 | வனராஜா | 116.12 |
| 41 | MF0204 | லேதன்டி | 115.88 |
| 42 | MF0502 | கிலேன்டிட் வத்த | 115.61 |
| 43 | MF0663 | பொகவன்தலாவ | 115.39 |
| 44 | MF0251 | க்லேன்லொச் | 115.37 |
| 45 | MF0485 | போகவான | 114.82 |
| 46 | MF0308 | ∴பெட்டிரெசோ | 114.62 |
| 47 | MF0703 | கெம்பியன் | 114.60 |
| 48 | MF0595 | டிக்கோயா | 114.49 |
| 49 | MF0890 | சென்.தெரேசியா | 113.35 |
| 50 | MF0769 | எல்டன் | 112.95 |
| 51 | MF0188 | சென் கொம்ப்ஸ் | 112.57 |
| 52 | MF0366 | அக்ரா ஊவா | 112.33 |
| 53 | MF0221 | தலவாகெலே | 112.04 |
| 54 | MF0345 | நோர்த் மெதகும்புர | 111.59 |
| 55 | MF0486 | கிர்கஸ்வோல்ட் | 111.35 |
| 56 | MF0689 | லக்ஷபான | 111.22 |
| 57 | MF0557 | மாவுஸ்ஸாகெலே | 110.98 |
| 58 | MF0468 | கிவ் | 110.86 |
| 59 | MF0374 | பிரேஸ்விக் | 110.77 |
| 60 | MF0829 | எல்டன் ஹோல் | 110.69 |
| 61 | MF0043 | சென் க்ளேயார் | 110.24 |
| 62 | MF0670 | காட்ர்மோர் | 109.77 |
| 63 | MF0584 | ∴பெயார்லவன் | 109.71 |
| 64 | MF0011 | தியகம வெஸ்ட் | 108.88 |
| 65 | MF0387 | புரோட்டோ.∴ப் | 108.60 |
| 66 | MF0399 | மொரே | 108.53 |
| 67 | MF0012 | தியகம கிழக்கு | 108.41 |
| 68 | MF0770 | தங்கெல்லே | 108.20 |
| 69 | MF0034 | ஸ்ட்ரேதஸ்பீ | 107.58 |
| 70 | MF0351 | வெலிஓய | 106.71 |
| 71 | MF0645 | எல்பியன் | 106.45 |
| 72 | MF0220 | டன்சினன் | 105.62 |
| 73 | MF0141 | அல்மா | 105.50 |
| 74 | MF0206 | லொய்னோர்ன் | 105.47 |
| 75 | MF0501 | மோச்சா | 105.46 |
| 76 | MF0674 | மே.∴பில்ட் | 105.41 |
| 77 | MF0383 | டோர்ட்டன் | 105.34 |
| 78 | MF0705 | ஹவுத்தலே வெலி | 105.14 |
| 79 | MF0078 | புலு பீல்ட் | 104.83 |
| 80 | MF0503 | வூட்டன் | 104.83 |
| 81 | MF0276 | ஹேன்போர்ட் | 104.68 |
| 82 | MF0673 | முல்லோயா | 104.66 |
| 83 | MF0067 | லிடஸ்டெல் | 104.31 |
| 84 | MF0504 | சீன் | 104.21 |
| 85 | MF1003 | ஷெனன் | 103.95 |
| 86 | MF0926 | கிரேக் லீ | 103.87 |
| 87 | MF0343 | லபுகெலே | 103.81 |
| 88 | MF0392 | ஹைய் பொரஸ்ட் | 103.36 |
| 89 | MF0005 | ஸ்டோனி க்ளிப் குரூப் | 103.23 |
| 90 | MF0729 | இராகல குரூப் | 102.70 |
| 91 | MF0384 | டன்கல்ட் | 100.35 |
| 92 | MF0618 | யுலிபீல்ட் | 99.96 |
| 93 | MF0771 | வேவர்ரி | 98.89 |
| 94 | MF1039 | புருக்சைட் | 93.76 |
| 95 | MF0349 | ரோத்ஸ்சயில்ட் | 93.64 |
| 96 | MF0062 | கௌணிய எஸ்டேட் | 92.59 |
| 97 | MF0300 | அபுசைட் | 91.92 |
| 98 | MF0322 | மவுன்ட் வர்னன் | 87.51 |
| 99 | MF0242 | க்லேர்டன் | 87.26 |
| 100 | MF1512 | ரொசெல்ல | 85.40 |
| 101 | MF0656 | லோவர் டொன்சயிட் | 84.68 |
| 102 | MF0790 | ஸ்ட்ரேதடன | 84.50 |
| 103 | MF0878 | ஹேவன்வெவ | 78.33 |
| 104 | MF0462 | கெரோலினா | 76.51 |
| இரத்தினபுரி மாவட்டம் | | | |
| 1 | MF1416 | கோப்பகந்த | 166.52 |
| 2 | MF1387 | ஏ.சீ.யு. | 164.71 |
| 3 | MF1392 | ஹிதெல்லன | 163.36 |
| 4 | MF1172 | நிவ் வித்தானகந்த | 158.93 |
| 5 | MF1441 | ∴பெல்கொன் | 150.81 |
| 6 | MF0347 | மட்டுவாகல | 150.02 |
| 7 | MF1440 | நிவித்திகல | 149.12 |
| 8 | MF0103 | ஓபாத்த | 149.08 |
| 9 | MF0946 | இரஜ்ஜுருவத்த | 147.12 |
| 10 | MF0272 | பனில்கந்த | 144.87 |
| 11 | MF1487 | எடம்ஸ் வீவ் | 143.20 |
| 12 | MF1442 | வெத்தேகல | 143.08 |
| 13 | MF0905 | மில்லவிட்டிய | 142.86 |
| 14 | MF1552 | சன்ஹில் | 142.01 |
| 15 | MF1281 | சென்.ஜோக்ஹிம் | 141.98 |
| 16 | MF1537 | அயகம | 140.77 |
| 17 | MF1488 | குக்குலேகங்க | 140.01 |
| 18 | MF1292 | பைன் ஹில் | 139.52 |
| 19 | BF0163 | தெல்கொட | 139.04 |
| 20 | MF1591 | எத்ஓய வத்த | 138.44 |
| 21 | MF0295 | குட்டாபிட்டிய | 137.57 |
| 22 | MF0546 | ஸ்பிரிங் வுட் | 137.02 |
| 23 | MF1456 | டீர்வுட் | 136.94 |
| 24 | BF0155 | கங்கலகமுவ | 136.71 |
| 25 | MF1217 | கல்படிதென்ன | 136.55 |
| 26 | MF1463 | பீக்வீவ் | 136.03 |
| 27 | MF1551 | கலஹிட்டிய | 135.80 |
| 28 | MF1483 | கெலெக்சி | 135.54 |
| 29 | MF1354 | பீக் பெரடயிஸ் | 135.47 |
| 30 | MF1343 | கோண்காவத்தை | 135.08 |
| 31 | MF1553 | ஸ்பிரீங் வீவ் | 134.89 |
| 32 | MF1478 | செனோரா | 134.59 |
| 33 | MF1266 | கெந்தலந்த | 134.57 |
| 34 | MF1571 | காமரங்காபிட்டிய | 134.07 |
| 35 | MF1418 | தொரலவிட்டியஹேன | 133.13 |
| 36 | MF1317 | தேஷிக்கா | 132.85 |
| 37 | MF1515 | கீகியனஹேன | 132.78 |
| 38 | MF1459 | நிவ் லக்சகந்த | 132.55 |
| 39 | MF1365 | நவகமுவஹேன | 132.47 |
| 40 | MF1496 | கோ-ப்-டீ | 132.44 |
| 41 | MF0181 | சிசிலியன் | 132.33 |
| 42 | MF1368 | நிவ் டெம்பல் வீவ் | 132.09 |
| 43 | MF1572 | சம்பத் | 131.74 |
| 44 | MF0780 | ஹௌப்பே | 131.63 |
| 45 | MF0490 | ஹெதர்லீ | 131.52 |
| 46 | MF0168 | எந்தொன | 131.00 |
| 47 | MF1075 | கடிகல்ஹேன | 130.86 |
| 48 | MF0393 | ஹேயிஸ் | 130.83 |
| 49 | MF1491 | நிவ் தொரலவிட்டியஹேன | 130.65 |
| 50 | MF0594 | பொஸ்கொம்பி | 130.13 |
| 51 | MF0183 | நிவ் கந்தகஸ்தேன | 130.00 |
| 52 | MF0263 | வேவத்த | 129.94 |
| 53 | MF0911 | தும்பர | 129.83 |
| 54 | MF0104 | வெல்அந்துர | 129.26 |
| 55 | MF1467 | தண்டுவன்கலவத்த | 129.07 |
| 56 | MF1284 | நிவ் பனாவென்ன | 128.32 |
| 57 | MF1308 | நிவ் உடகந்த | 127.68 |
| 58 | MF1519 | பரகடுவ | 127.63 |
| 59 | MF0449 | எனன் | 127.49 |
| 60 | MF0285 | ஹுணுவெல்ல | 127.39 |
| 61 | MF1480 | நிவ் ஹோப்வெல | 126.13 |
| 62 | MF0909 | எலர்டன் | 126.05 |
| 63 | MF1601 | புலு ஹில்ஸ் | 126.01 |
| 64 | MF0083 | ரில்ஹேன | 125.71 |
| 65 | MF0659 | ரே | 125.29 |
| 66 | MF1397 | ∴பர்ன்டேல் | 124.99 |
| 67 | MF0906 | பார்ம் கார்டன் | 124.89 |
| 68 | MF1495 | நில்வின் வீவ் | 124.39 |
| 69 | MF0625 | நிவ் இராஸ்ஸகல | 124.21 |
| 70 | MF1531 | இஹல பனாபிட்டிய | 123.96 |
| 71 | MF0624 | விக்கிலிய | 123.76 |
| 72 | MF0367 | சிசில்டன் | 123.44 |
| 73 | MF1363 | நாவலகந்த | 123.44 |
| 74 | MF0108 | போரோனுவ | 123.38 |
| 75 | MF1453 | கலாவான | 121.70 |
| 76 | MF1436 | நிவ் வேவெலகந்துர | 121.39 |
| 77 | MF0369 | மாரதென்ன | 120.94 |
| 78 | MF0107 | நீலாகம | 119.37 |
| 79 | MF0200 | பெட்டியாகல | 119.26 |
| 80 | MF0481 | எக்பர்த் | 118.53 |
| 81 | MF0623 | மெந்தகந்த | 117.79 |
| 82 | MF0801 | ஹபுகஸ்தென்ன | 116.74 |
| 83 | MF0258 | பலாங்கொட தே சக்தி | 115.07 |
| 84 | MF0262 | ஹப்பர் பலாங்கொட | 115.05 |
| 85 | MF0619 | கலபொட | 113.98 |
| 86 | MF1458 | செரோன் | 113.78 |
| 87 | BF0150 | ஷர்வுட் | 103.57 |
| 88 | MF1466 | டீ லங்கா | 95.83 |

**பச்சை தேயிலை இலை வழங்குனர்கள் யாரேனும் தனது பச்சை தேயிலை இலை வழங்கியதற்கு உரிய பணம் கிடைக்கவில்லை எனில் தயவு செய்து உதவி தேயிலை ஆணையரிடம் அல்லது முடிந்தவரை என்னிடம் முறையீடு செய்யவும்.**

**கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-140, அம்பகமுவ வீதி, கம்பளை.
தொலைபேசி / தொலைநகல் - 081-2352279

**காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு தவிர)**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-34, கங்காராம குறுக்கு வீதி,
மாகல்லே, காலி.
தொலைபேசி / தொலைநகல் - 091-2232052

**இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-61/1, புதிய நகரம், இரத்தினபுரி.
தொலைபேசி / தொலைநகல் - 045-2222136

**களுத்துறை மற்றும் காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேசத்திற்கான செயலாளர் பிரிவு)**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், வதுரான வீதி, பதுரலிய.
தொலைபேசி / தொலைநகல் - 034-2247444

**பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், விசாகா மாவத்தை, புதிய பதுளை வீதி, பண்டாரவளை.
தொலைபேசி / தொலைநகல் - 057-2222812

**மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-23, அளுத் மாவத்தை, உயன்வத்த, மாத்தறை.
தொலைபேசி / தொலைநகல் - 041-2222636

**நுவரெலியா மாவட்டம்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-10, நானுஓயா வீதி, கெலேகால, நுவரெலியா.
தொலைபேசி - 052-2234695
தொலைநகல் - 052-2234686

**தேயிலை ஆணையாளர்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல. 574, காலி வீதி, கொழும்பு 03.**

- பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்கள் - தயவுசெய்து தேயிலை தயாரிக்க முதிர்ச்சியடையாத மற்றும் சேதமடையாத பச்சை தேயிலை இலைகளை கொள்வனவு செய்யவும்.
- தேயிலை வைத்திருப்பவர்கள், பச்சை இலை விற்பனையாளர்கள் - முதிர்ச்சியடையாத மற்றும் சேதமடையாத பச்சை தேயிலை இலைகளை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில் எச்சரிக்கையாக இருங்கள்.
- சிறியளவிலான தேயிலை உற்பத்தியாளர்கள் - பச்சை தேயிலை இலைகளை உடனடி பணத்திற்கு வழங்குவதைத் தவிர்க்கவும், அப்படியெனின் நீங்கள் ஒரு பாரிய இழப்பை சந்திக்க நேரிடும்.

தினகரனின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி

# உடப்பில் ஐம்பெரும் விழா

தினகரனின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நடத்தும் ஐம்பெரும் விழா தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமையில் இன்று 9ஆம் திகதி சனிக்கிழமை உடப்பு ஸ்ரீதிரௌபதி அம்மன் ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ் இதில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த ஐம்பெரும் விழாவில், ஆன்மீகம் மற்றும் கலைத்துறைகளில் அரும்பணியாற்றி வரும் ஆன்மீகவாதிகளும் கலைஞர்களும் சாதனையாளர்கள், இளம் சாதனையாளர்கள், வாழ் நாள் சாதனையாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இவ்விழாவில், க.தெட்சணாமூர்த்தி (தலைவர் ஆராய்ச்சிக்கட்டு பிரதேச சபை உடப்பு), வீ. சிவநாதன் (தலைவர் இந்து ஆலய பரிபாலன சபை உடப்பு) ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்வார்கள். எம். அம்பிகைராஜன் (உரிமையாளர் ஜோதி பிரவுண் பாம்), திருமதி எஸ். கீத்தாரஞ்சனி (பு/ஆண்டிமுனை தேசிய பாடசாலை), சமிந்த கெக்குலாவல (முகாமையாளர் ஹற்றன் நெஷனல் வங்கி உடப்பு), பீ.என். புஷ்பகுமார (முகாமையாளர் எலியான்ஸ் பினான்ஸ் லிமிடட் உடப்பு), கே. அரிவீரன் முகாமையாளர் சணச காப்புறுதி நிறுவனம் உடப்பு), சமத் பெர்ணாண்டோ (முகாமையாளர்செலான் வங்கி உடப்பு) ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்வார்கள். பிரம்ம ஸ்ரீ சிவனேஷ்வர சர்மாவின் (ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு) ஆசியுரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். தே. செந்தில்வேலவர் (தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர்) தலைமையுரை ஆற்ற, துரைராசா சுரேஷ்.

(சங்கவி பிலிம்ஸ் பணிப்பாளர்) பிரதம அதிதியின் உரையை ஆற்றுவார்.

இங்கு உடப்பு தமிழ் மகா வித்தியாலய 5ந்தர மாணவர்களின் சிவதாண்டவ நடனமும் உடப்பு தமிழ் மகா வித்தியாலய தரம்4 மாணவிகளின் கண்ணன் நடனமும் ஸ்ரீகிருஷ்ணா ஆரம்ப பாடசாலை தரம்5 மாணவிகளின் வேப்பிலை நடனமும் ஆண்டிமுனை தேசிய பாடசாலை மாணவிகளின் நடனமும் இடம்பெறும். தரம்5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். க.தெட்சணாமூர்த்தி (தலைவர்ஆராய்ச்சிக்கட்டு பிரதேச சபை) சிறப்புரையும் இங்கு இடம்பெறும். ஆண்டிமுனை தேசிய பாடசாலை மாணவிகளின் நடனம் மற்றும் ஸ்ரீ கிருணாஸ் மியூசிக் அக்கடமி மாணவர்களின் பாடல் அரங்கேற்ற நிகழ்வும் இடம்பெறும். சாதனையாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இங்கு இடம்பெறும்.

# இந்தியாவின் உதவிகளுக்கு இ.தொ.கா நன்றி

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிகள் அதிகரித்துள்ளன. இதனால், பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு, மலையக மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளை வழங்குவது தொடர்பில், இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வைத்தியர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ள தமிழக முதலமைச்சர், இது தொடர்பாகக் கலந்துரையாடி, உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.



இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தற்போது நிலவும் தீவிரப் பொருளாதார நெருக்கடியில் சிக்கி வேதனையில் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் குறித்து, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் தனது கவலையைத் தெரிவித்துக் கொண்டுள்ள முதலமைச்சர், இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் வசிக்கும் குறிப்பாக மலையகம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் வாழும் தமிழர்களின் நலன் கருதி, தமிழ்நாடு அரசினால் அத்தியாவசிப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளதாகவும், மனிதாபிமான நோக்கில் அனுப்பப்படும் இத்தகைய பொருட்களை தமிழர்களுக்கு, வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் தமிழக முதலமைச்சர் செய்துள்ள உதவிக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இத்தருணத்தில் செய்யப்படும் உதவி எம் மக்களுக்கு பாரிய பக்கபலமாக இருக்கும் என்பது உறுதி.

# லிற்றில் எயிட் திறன் விருத்தி மையம் நடத்தும் இருநாள் நிகழ்வுகள்

லிற்றில் எயிட் திறன் விருத்தி மையம் நடத்தும் இருநாள் நிகழ்வுகள் இன்று 9 ஆம் திகதியும் நாளை 10ஆம் திகதியும் நடைபெறும். இன்று 9 ஆம் திகதி காலை 9.15 மணிக்கு little Sci Kit அறிமுகவிழாவும் நாளை 10 ஆம் திகதி காலை 9.15 மணிக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் லிற்றில் பேர்ட் சஞ்சிகை வெளியீடும் நடைபெறும்.

இந்நிகழ்வுகள் கிளிநொச்சி திருநகரில் உள்ள லிற்றில் எய்ட் மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. மனித அமைப்பின் எஸ். சாவித்திரி வரவேற்புரை ஆற்ற, ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் சுவர்ணா நவரட்ணம் தலைமையுரையும் லிற்றில் எயிட் ஸ்தாபகர் த. ஜெயபாலன் தலைமையில் லிற்றில் பேர்ட் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்படும். லிற்றில் எயிட் ஸ்தாபகர் கலைநீதன் அறிமுகவுரையாற்றுவார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜா பிரதம அதிதியின் உரையை ஆற்றுவார். இங்கு செயலி வெளியிட்டு வைக்கப்படும்.

நாளை 10 ஆம் திகதி காலை 9.15 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகளில் லிற்றில் எயிட் மாணவன் ஆர். பேரினியன் வரவேற்புரையும் கிளிநொச்சி ஜெயந்திநகர் ஸ்ரீ முத்துமீனாட்சி அம்மன் ஆலயத்தின் பிரதம குரு முத்துகுமார குருக்கள் சிவஸ்ரீ மகேஷ்வர சர்மாவும் கிளிநொச்சி கருணா நிலையத்தின் பொறுப்பமைய குரு வண. எஸ். கே. டானியலும் ஆசியுரையும் லிற்றில் எயிட் ஸ்தாபகர் த. ஜெயபாலன் தலைமையுரையும் ஆற்றுவார்கள்.

நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## திருத்த அறிவித்தல்

### இரு (02) வருடங்களுக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனங்களின் பெறுகை

நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவர் டெயிலி நியுஸ் புதினப் பத்திரிகையில் 2022 மார்ச் 31 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரமானது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளதெனவும் ஏனையவற்றில் எந்தவொரு மாற்றமுமில்லையென இத்தால் அறிவிக்கின்றார்.

1. அனைத்து வாகனங்களுக்குமான உற்பத்தி வருடமானது 2016 அல்லது பின்னர் என திருத்தப்பட்டுள்ளது.
2. விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கும் திகதி மற்றும் கையேற்கும் திகதியானது 2022 ஏப்ரல் 21 ஆம் திகதியென திருத்தப்பட்டுள்ளது.
3. விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் நேரமானது 2022 ஏப்ரல் 22 ஆம் திகதியன்று மு.ப. 11 மணியென திருத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் வெளியேற்றம்**
**மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு,**
**17 ஆம் மாடி, 'சுஹுருபாய',**
**பத்தரமுல்ல.**

## EASTERN UNIVERSITY, SRI LANKA

### INVITATION FOR BIDS (IFB)

### Supply, Installation, and Commissioning of Extension of Network for Shifting and Upgrading Server Room, EUSL, Sri Lanka

**PROCUREMENT NO.: EUSL/CW1/21/5/3**

The Chairman / Department Procurement Committee on behalf of the Eastern University, Sri Lanka now invites sealed bids from interested eligible and qualified bidders for Supply, Installation, and Commissioning of Extension of Network for Shifting and Upgrading Server Room, in the Eastern University, Sri Lanka.

1. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.
2. The Bidders shall be registered with the Construction Industry Development Authority (CIDA) for Grade EM4 or above - Extra Low Voltage Installations (Data, Telecommunication and Security Systems, Public address systems, Pipe music systems (ELV)).
3. The bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka in terms of the Public Contracts Act No. 03 of 1987. The Original Certificate of Registration (PCA 03) shall be submitted with the bid. Contract shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate.
4. Interested bidders may obtain further information from the Senior Assistant Registrar/ Capital Works & Planning of EUSL & inspect the bidding documents up to 04.05.2022 from 09.00 hours to 14.00 hours on working days at Capital Works & Planning Division, EUSL, Vantharumoolai, Chenkalady. Telephone Number: 065-2240589, E-Mail ID: **dr_capitalworks@esn.ac.lk**.
5. Bidding documents shall be purchased from Senior Assistant Registrar (Capital Works & Planning) in person or by sending a request to **dr_capitalworks@esn.ac.lk** up to 3.00 p.m. on 04/05/2022. The non-refundable tender fee of Rs. 4,000.00 shall be credited to the Account No: 227100140000024 in the People's Bank in favour of "Bursar, Eastern University, Sri Lanka" or online at **http://pay.esn.ac.lk/**.
6. Bids in two copies indicating in original & duplicate, must be delivered to the address given below at or before 10.30 a.m. on 05.05.2022. Late bids will be rejected. Bids will be opened at the Capital Works and Planning Division of the Eastern University soon after the closing time and the date of the bids in the presence of the bidders or their representatives who choose to attend.
7. The title of the bid should be clearly mentioned on the top left corner of the bid submission envelope.
8. All bids shall be accompanied by a Bid Security in favour of Vice Chancellor / Eastern University, Sri Lanka for an amount of Rs. 80,000.00 obtained from a commercial bank operating in Sri Lanka, approved by the Central Bank of Sri Lanka. Bid Security shall be valid up to 18.08.2022.
9. A Pre-Bid meeting will be held on 27.04.2022 at 10.00 a.m. at Capital Works and Planning Division, Eastern University, Sri Lanka.

**Chairman,**
**Department Procurement Committee,**
**Eastern University, Sri Lanka**
**Vantharumoolai**
**Chenkalady**

09.04.2022

## முன் மொழிவுகளுக்கான அழைப்பு

கடற்றொழில் அமைச்சு

**Selection of Consultancy Firm for Feasibility Study, Detailed Engineering Design, Construction Supervision and Project Management for Design & Build of Technically Improved New Model Vessel**

**Contract No.: MF/SD/19/PROC/CPCM/2022/01**

2022 மார்ச் 24 ஆம் திகதியன்று தினமின, தினகரன் மற்றும் டெயிலி நியுஸ் ஆகிய தேசிய புதினப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான முன்மொழிவுகள் தொடர்பான அழைப்புக்கானது.

முன்மொழிவு முன்னோடிக் கூட்டத்தின்போது பெரும்பான்மையான உசாத்துணையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க, விலைமனு மூடும் இறுதித்தினமான 2022 ஏப்ரல் 22 ஆம் திகதியானது 2022 மே 06 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டதுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உசாத்துணைக்கான உசாத்துணையாளர்களுக்கான அழைப்பிற்கு பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. முன்மொழிவு கோரிக்கைக்கான ஆவணங்கள் காலப்பகுதியானது 2022 மே 05 ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
2. விலைமனுக்களை மூடும் திகதியானது 2022 மே 06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

அழைப்புக் கடிதத்தில் திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்ட ஏனைய தகவலில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**அமைச்சு உசாத்துணையாளர் பெறுகைக் குழு,**
**சமுதாய அபிவிருத்திப் பிரிவு,**
**கடற்றொழில் அமைச்சு.**
**தொலைபேசி: 0773410575/0112384639.**

**2022 ஏப்ரல் 08 ஆம் திகதியன்று.**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் - 460) 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இல - VSW/DS/LB/ACO/ROAD**
**காணி அமைச்சின் இல - 4-3/11/201/UD/387**

கீழ் க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கம் எடுத்துள்ளதால் இதற்குரிய ஆரம்ப நட்டஈட்டுப்பணம் கீழ்க்கண்டவாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கிலக்கங்களின் கீழ் வைப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2022ம் ஆண்டு மாசி மாதம் 11ம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2266/56ம் இலக்க இலங்கை ஜனநாயக, சோசலிஷக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையினை பார்க்கவும்.

**அட்டவணை**

| தொ. இல. | பிபியா 2903ம் இலக்க நில அளவை வரைபடத்திலுள்ள காணித்துண்டுகள் | வழக்கு இலக்கங்கள் | ஆரம்ப நட்டஈட்டுத் தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | 06 | எல்/925/2021 | 100.00 |
| 2 | 10 | எல்/926/2021 | 1000.00 |
| 3 | 11 | எல்/782/2020 | 1000.00 |
| 4 | 13 | எல்/783/2020 | 1000.00 |
| 5 | 14 | எல்/893/2021 | 1000.00 |
| 6 | 15 | எல்/784/2020 | 1000.00 |
| 7 | 18 | எல்/894/2021 | 1000.00 |
| 8 | 19 | எல்/785/2020 | 1000.00 |
| 9 | 21 | எல்/786/2020 | 1000.00 |
| 10 | 23 | எல்/895/2021 | 2250.00 |
| 11 | 24 | எல்/896/2021 | 1000.00 |
| 12 | 27 | எல்/897/2021 | 4500.00 |
| 13 | 28 | எல்/787/2020 | 1000.00 |
| 14 | 30 | எல்/788/2020 | 500.00 |
| 15 | 31 | எல்/789/2020 | 1000.00 |
| 16 | 32 | எல்/790/2020 | 1000.00 |
| 17 | 36 | எல்/791/2020 | 1000.00 |
| 18 | 38 | எல்/811/2021 | 1000.00 |
| 19 | 40 | எல்/812/2021 | 500.00 |
| 20 | 41 | எல்/813/2021 | 500.00 |
| ஆரம்ப நட்டஈட்டுத்தொகையின் மொத்தம் | | | ரூபா 22350.00 |

**பிரதேச செயலகம்,**
**வலிகாமம் தென்மேற்கு,**
**சண்டிலிப்பாய்.**
**2022.03.31**

**உ.யசோதா**
**பிரதேச செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு**
**சண்டிலிப்பாய்.**

## கசிப்பு சாராய உற்பத்தி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி வேவல்வத்தை மற்றும் சுற்று பிரதேச கிராமங்கள் மற்றும் தோட்டப்பகுதிளில் கசிப்பு சாராய கலாசாரம் தாண்டவமாடுவதால் பிரதேச மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.அத்துடன் இதன் பாதிப்பு சமூகத்தின் சகல மட்டங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர் .

கிராமப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் கசிப்பு தோட்டப்பகுதி தரகர்களின் உதவியால் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்படுவதாகவும் இதனால் இவற்றை அருந்துவோரால் வீடுகளிலும் அமைதி குன்றி வருவதாகவும் குடும்பப் பெண்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.பிள்ளைகளின் கல்வி சமய விழுமிய= கட்டமைப்பு இந்நிலைமையால் கேள்விக்குறியாகி உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து உரிய வழிமுறைகளைக் கையாள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## மஸ்கெலியா - நோட்டன் வீதியில் மண்சரிவு

**(கினிகத்தேனை தினகரன் நிருபர்)**

மஸ்கெலியா நோட்டன் வீதியில் ஹட்லிஸ் பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டதன் காரணமாக அப்பகுதிக்கான போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது. வீதி அகலப்படுத்தப்பட்டு காபட் இடும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் மலையகத்தில் தற்போது மாலை வேளையில் பலத்த காற்றுடன் மழையுடனான காலநிலையும் நிலவுகின்றது.

இதனால் இப்பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக வீதியோரத்தில் காணப்படும் மின்சார கம்பங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதோடு மின்சார கம்பங்களும் வீதியில் சரிந்து கிடப்பதையும் அவதானிக்க முடிந்தது.

### அற்றோணி தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசும் சகலரும் அறிந்து கொள்வதற்காக இவ்வாறு அறியத் தரப்படுகின்றது.

தோலங்கமுவ, தெல்கமுவ, இலக்கம் B/100/1 என்ற விலாசத்தில் வசிக்கும் **புலிஹிங்கலாகே ப்ரியந்தி ராஜபக்ஷ** ஆகிய என்னால் அங்குணுகொல பெலெஸ்ஸ, காரியமடித்த, பூவெலிஆர, ராஜாசெவன, இலக்கம் 162இல் வசிக்கும் **கோட்டே ஆரச்சிகே சிரோமி தில்ருக்ஷி** என்பவருக்கு பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் எழுத்துமூல அதிகாரம் மற்றும் அற்றோணி தத்துவப் பத்திர புத்தகத்தில் தொகுதி 03 இல் 26ஆம் பக்கத்தில் நாளேடு இலக்கம் 883இன் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு திருவாளர் புத்ததேவ குணரத்னவினால் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2070 இலக்கமுடைய அற்றோணி தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்து வலுவிலக்கச் செய்கின்றேன். இது முதற்கொண்டு குறித்த **கோட்டே ஆரச்சிகே சிரோமி தில்ருக்ஷி** என்பவர் என் சார்பாக மேற்கொள்ளும் எந்தச் செயலும் சம்பந்தமாகவோ அல்லது உடன்படிக்கை சம்பந்தமாகவோ நான் பொறுப்புக்கூற மாட்டேன் என இத்தால் அறியத் தருகின்றேன்.

**புலிஹிங்கலாகே ப்ரியந்தி ராஜபக்ஷ**

### அற்றோணி தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசும் சகலரும் அறிந்து கொள்வதற்காக இவ்வாறு அறியத் தரப்படுகின்றது.

இரத்தினபுரி. கொஸ்பெலவின்ன இலக்கம் 35/12C என்ற விலாசத்தில் வசிக்கும் **களுஆரச்சிகே எரிக் உதேந்திர** ஆகிய என்னால் பதுளை, நிக்கவத்த வீதி, இலக்கம் 278இல் வசிக்கும் **ஹதுருசிங்க முதியன்சேலாகே அநுர பண்டார** என்பவருக்கு பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் எழுத்துமூல அதிகாரம் மற்றும் அற்றோணி தத்துவப் பத்திர புத்தகத்தில் தொகுதி 23 இல் 268ஆம் பக்கத்தில் நாளேடு இலக்கம் 1968இன் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு **திருவாளர் ஹேமிந்த தயாவங்சவினால்** 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1154 இலக்கமுடைய அற்றோணி தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்து வலுவிலக்கச் செய்கின்றேன். இது முதற்கொண்டு குறித்த **ஹதுருசிங்க முதியன்சேலாகே அநுர பண்டார** என்பவர் என் சார்பாக மேற்கொள்ளும் எந்தச் செயலும் சம்பந்தமாகவோ அல்லது உடன்படிக்கை சம்பந்தமாகவோ நான் பொறுப்புக்கூற மாட்டேன் என இத்தால் அறியத் தருகின்றேன்.

**களுஆரச்சிகே எரிக் உதேந்திர**




# மன்னாரில் இருந்து மேலும் ஒரு குடும்பம் இடம்பெயர்வு

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னாரில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் நேற்று வெள்ளிக்கிழமை (8) அதிகாலை தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

அண்மையில் மன்னார் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த 3 குடும்பங்களை சேர்ந்த 12 பேர் கடல் வழியாக தனுஷ்கோடி சென்றடைந்தனர்.

தமிழகத்திற்கு அகதிகளாக சென்ற அவர்களை மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தனுஷ்கோடி இலங்கைக்கு அருகே உள்ளதால் இலங்கை தமிழர்கள் இறுதிக்கட்ட போரின் போது அகதிகளாக தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் இடம்பெயர்ந்தனர்.

இந்நிலையில் வியாழக்கிழமை (7) இரவு மன்னார் மாவட்டம் முத்தரிப்புத்துறை பகுதியை சேர்ந்த கிஷாந்தன் (34), ரஞ்சிதா (29), ஜெனீஸ்டிக்கா (10) மற்றும் இரண்டரை (2 1/2)வயது சிறுவன் ஆகாஷ் ஆகிய ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் படகு ஒன்றில் புறப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை (8) அதிகாலை சுமார் 2 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனை கடற்கரையில் வந்து இறங்கியுள்ளனர்.



தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் மெரைன் பொலிஸார், இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மெரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை விலை ஏற்றம் மற்றும் மண்ணெய், டீசல்,பெட்ரோல் உள்ளிட்ட பொருட்கள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால் தமிழகத்துக்கு அகதிகளாக வந்ததாக பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் நடாத்திய விசாரணையில் இலங்கை தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பின்னர் நான்கு இலங்கை தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படுவார்கள் என மெரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மன்னாரில் பொது மக்கள் போராட்டம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னாரில் அரசாங்கத்தை கண்டித்து சிவில் அமைப்பு மக்கள் இணைந்து மாபெரும் கண்டன போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கண்டனப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு பல மணிநேரம் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் வருகை தந்திருந்த பொது மக்கள் தங்கள் கைகளில் ஏந்தியிருந்த பதாகைகளில் அரசுக்கு எதிராகவும் மக்களுக்கு இழைத்து வரும் தீங்குகள் தொடர்பான விடயங்களை சுட்டிக்காட்டியிருந்ததுடன் இதன் குரலாகவும் இங்கு ஒலித்தன. அவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளில் 'வடக்கு கிழக்கு மீதான இராணுவ மயமாக்கலை நிறுத்து' 'மீனவர்கள் விவசாயிகளின் உரிமைகளை பறிக்காதே' 'குழந்தைகளின் பால்மா எங்கே?' பயங்கரவாத சட்டத்தை உடன் நிறுத்து' 'பாமர மக்களை பட்டினிச் சாவால் கொல்லாதே' 'அதிகரிக்கும் விலையேற்றத்தால் அல்லலுறும் எம் மக்கள்' 'தூய்மையான பொறுப்பு வாய்ந்த பாராளுமன்றம் எமக்குத் தேவை' போன்ற வாசகங்களே இங்கு காணப்பட்டன.

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் கவனயீர்ப்பு போராட்டம்



யாழ்.விசேட நிருபர்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்பகுதியில், நேற்றையதினம் வெள்ளிக்கிழமை காலை ஒன்று கூடிய வைத்தியர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தியாவசிய மருந்துகளின்மை, சுகாதார கட்டமைப்பு சீர்குலைப்பு, இலவச சுகாதாரம், மக்களின் அடிப்படை உரிமை, மக்களின் உயிருடன் விளையாட வேண்டாம், சுகாதார வசதிகளை இல்லாதொழிக்க வேண்டாம் போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் வைத்தியர்கள் ஏந்தியிருந்தனர். அரசின் மோசமான நிதி, நிர்வாகம் காரணமாக அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல் சுகாதார கட்டமைப்பு சீரழிந்து வருகின்றதோடு, மக்களின் உயிர்கள் ஆபத்தில் உள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் போராட்டத்தில் ஈடுபட்டது.

# சௌபாக்கிய நிலையத்தில் திருட்டு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா சாந்தசோலையில் அமைக்கப்பட்டு வரும் சௌபாக்கிய பால் உற்பத்தி நிலையத்தை உடைத்த திருடர்கள் அங்கிருந்து சீமெந்து பைகள் மற்றும் மின்விசிறிகள் மற்றும் அலுமினிய இரும்பு பார்கள் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா சாந்தசோலை பிரதான கண்டி வீதியில் அமைக்கப்பட்டு வரும் சௌபாக்கிய பால் உற்பத்தி நிலையம் இன்னும் மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்படவில்லை. இந்நிலையில் அதன் நிர்மாணப்பணிகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றது. ஊரடங்கு தினத்தன்று திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் நிலைய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

# படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் மீட்பு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டு , அவரது மோட்டார் சைக்கிளுடன் வீடொன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

பெண் அப்பகுதியில் உள்ளவர்கள் சிலருக்கு பணம் கொடுத்துள்ளார். இந்நிலையில், அவர் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி காணாமல் போயிருந்தார்.

காணாமல் போனமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர். அதற்கமைய பொலிஸாருக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அரியாலை மணியந்தோட்டம் 11ஆம் குறுக்கு தெருவை சேர்ந்த வீடொன்றினை சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தி இருந்தனர்.



அதன் போது , வீட்டு வளவினுள் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட இடத்தினை அகழ்ந்து சோதனை நடத்த நீதிமன்ற அனுமதியினை பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர். அத்துடன் வீட்டில் குடியிருந்த கணவன், மனைவி மற்றும் மனைவியின் சகோதரன் ஆகியோரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந் நி லை யி ல் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா, சட்ட வைத்திய அதிகாரி எஸ். பிரணவன் முன்னிலையில் அகழ்வு பணிகளை முன்னெடுத்த போது, ஒரு கிடங்கில் இருந்து கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலமும் மற்றுமொரு கிடங்கில் இருந்து அவரது மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்



யாழ் குடாநாட்டில் மிகவும் பின்தங்கிய 26 பாடசாலைகளில் கற்கும் 700 மாணவர்களுக்கு பலன் கிடைக்கும் வகையில் வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. பூமணியம்மா அறக்கட்டளையின் அமெரிக்காவை சேர்ந்த விஜி குடும்பத்தினர் வினாத்தாள் தயாரிப்புக்கான செலவுகளை பொறுப்பேற்றுள்ளனர். பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நிர்வாக உறுப்பினர்கள், 26 பாடசாலை அதிபர்களை அழைத்து வினாத்தாள்களை அவர்களுக்கு கையளித்த பின்னர் பிடிக்கப்பட்ட படம். (படம் – வேலணை குறூப் நிருபர்)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச சேவை நிறுவனங்களுக்கு புதிய நியமனங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்நோக்குஅபிவிருத்தி செயலணியினால் பல்வேறு அரச சேவை நிறுவனங்களில் வெற்றிடமாக உள்ள ஆரம்ப தரத்தின் பதவிகளுக்கு பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் பயிற்சியினை பூர்த்தி செய்த பயிற்சியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு மாவட்ட உதவிப் பணிப்பாளர் கப்டன் ஐ.சசிக்குமார் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம்(07) காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) எஸ்.குணபாலன் பிரதம அதிதியாக கலந்கொண்டு குறித்த நியமனக்கடிதங்களை வழங்கி வைத்தார்.

தேசிய தொழிற் தகமை மூன்றவது மட்டத்தினை (NVQ 3) பயிற்சிக்காலத்தில் பூர்த்தி செய்துள்ள இவர்கள் நிரந்தரமான வெற்றிடமாக உள்ள இடங்களிற்கே இவ்வாறு பயிற்சிக் கால கொடுப்பனவுகளுடன் நிரந்தர நியமனம் பெறும்வரை பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். நிரந்தர நியமன கடிதங்கள் வழங்கப்பட்டதன் பின்னரும் குறித்த அலுவலகங்களில் நிரந்தர உத்தியோகத்தர்களாக கடமையாற்றுவர். இதன்போது கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவில் 10 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 09 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 04 பேரும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 06 பேரும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 04 பேரும், வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 18 பேருமாக 51 பேர் பல்வேறு அரச திணைக்கள வெற்றிடங்களுக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.



இந் நிகழ்வில் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களில் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி கிளைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பயிற்சியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# ஏ9 வீதியினை மறித்து மக்கள் போராட்டம்



வவுனியா விசேட நிருபர்

வவுனியா, பூனாவ பகுதியில் அமைந்துள்ள எரிவாயு விநியோகத்தர் வளாகத்தில் சமையல் எரிவாயு வழங்குவதில் குழப்பநிலை ஏற்பட்டதையடுத்து மக்கள் ஏ 9 வீதியினை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சமையல் எரிவாயு விநியோக இடத்தில் நேற்று (08.04) காலையில் இருந்து வரிசையில் மக்கள் காத்திருந்த போதிலும் 9.30 மணியளவில் எரிவாயு நிறைவடைந்து விட்டதாக உரிமையாளர் தெரிவித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் ஏ 9 வீதியில் எரிவாயு சிலிண்டர்களை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ஏ 9 வீதியூடான போக்குவரத்து முழுமையாக பாதிப்படைந்தது.

இதனையடுத்து 20 நிமிடங்களின் பின்னர் ஏ 9 வீதியூடான போக்குவரத்து வழமைக்கு திரும்பியதுடன் அவ்விடத்தில் பொலிஸாரின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, கூமாங்குளம் பகுதியிலுள்ள தோட்டக் காணி ஒன்றில் வெங்காயத்திற்கு ஒருவர் நீர் இறைத்துக் கொண்டிருந்த போது, மற்றொருவர் மின்சார வயரின் உதவியுடன் வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, மின்சார வயரில் இருந்து மின் தாக்கியதில் இளைஞன் மரணமடைந்துள்ளார்.

# தங்கச் சங்கிலி திருட்டு

சாவகச்சேரி விசேட நிருபர்

எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் ஆசிரியை ஒருவரின் ஒன்றரைப் பவுண் சங்கிலி திருடப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற ஆசிரியையை பின்தொடர்ந்து ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் வைத்து சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## விரண்டிடு நீயும் வீர மங்கையாய்



கற்புக்கு விலங்கிட்டு
கால்களில் ஆணியிட்டு
பார்வைகளில் திரையிட்டு
பணிந்து நிற்கும்
விழிகளில் ஊசி தைக்க
உதிரம் கொதிக்குதடி

குறையில்லை குருடில்லை
ஊனமில்லை உடலெதிலும்
குறை கொண்டு குத்திடுவார்
மனங்களில் நிறையில்லை பெண்ணே...!
பறைசாற்று முன்னே

வஞ்சிப்பார் பேச்சொன்றிலே
நஞ்சென்பார் நல்லதையெல்லாம்
அஞ்சி நடந்தால் மிஞ்சி விமர்சிப்பார்
பஞ்சினும் மென்மையென்பார்
பிஞ்சிலே பிழிந்து நசுக்குவார்

அழுதிடும் வர்க்கமாய்
ஆண்டாண்டு காலம்
அடங்கி ஒடுங்கியது போதும்
ஆய்ச்சினைகள் செய்யும்
அரக்கர் கரங்களுக்கு
ஆணியடிக்க வேண்டும்

சப்தத்தையும் சாபமாய்
சாரீரத்தையும காமமாய்
கள்ளிச் செடிக்கு ஒப்பாய்
அள்ளி வைக்கும் வார்த்தைகள்
அத்தனையிலும்
கொல்லி வைக்க வேண்டும்

சாய் தலையனையாய்
கட்டிலுக்கு துணையாய்
காலங்காலமாய் சுமை தாங்கி
சுருண்டு கிடந்தது போதும்
விரண்டிடு நீயும் வீர மங்கையாய்
வரலாறு கொண்டு வாழ்ந்திடலாம் வா

ஏறூர் நிலாத்தோழி
(பாத்திமா அஸ்கியா முபாறக்)

## போதை

மது என்று பொதுப்
பெயர் பெற்று
எண்ணிலடங்கா
புதுப்பெயர் பெற்று

உடல் வருத்தி உழைத்த
வர்க்கம் அழுப்புத் தீர
கள்ளென்ற பானமருந்தி
மனையிலே மண்டியிட வைத்து

பலச்சாறு என்றும் வைன் என்றும்
பணக்கார வர்க்கம்
பல நாட்டில் பருகியதை
நம் நாட்டிற்கு வந்த போது
இரத்தமென்று ஓடின
வர்க்கம் எம் வர்க்கம்

சில தசாப்தம்தான் கடந்த
நிலையில் நகரம் முதல்
கிராமம் வரை மலிந்த
நிலையில் கைகளில்
தவழும் மதுக்கள் ஏராளம்

பள்ளி செல்லும் பச்சிலங்கள்
விளக்கொளியில்
தன்னை மாய்க்கும்
விட்டில் பூச்சாய்
மாய்க்கும் காட்சி
சமூகத்தின் செயற்பாடு
மங்கிப்போக போதை
வியாபாரம் தலைத்தோங்கிறதே

முற்றா எழும்பும்
வளரா சிந்தையும் உள்ள
வாலிபங்கள்
செய்து பார்க்கும்
சிந்தனையில்
செய்து பார்க்கத் தொடங்கி
தொட்டது தொடர்ந்து
மீள முடியாது
போதைக்கு அடிமையாகி
கற்றகல்வி இடைவிட்டு
போதை வாங்க பணத்திற்காய்
படும்பாடு சொல்ல
வார்த்தை இல்லை

வனப்பு மிகுந்த முகம்
வரண்டு கிடக்குது
உடல் மெலிந்து
உணவு விருப்பின்றி
தூக்கமின்றி
கால்நடை போன்று
அலைந்து திரியும்
அழகற்ற காட்சி கண்டும்
இரக்கப்படாத சமூகத்தில்
வாழ்வதை நினைத்து
என்ன சொல்வது

போதை ஒழிக்க
பொலிஸ் இருந்தும்
பயனில்லை
அவ்வவ் சமூகம்
பயனுள்ள திட்டம் தீட்டி
தீர்த்துக்கட்ட முன்வராத விடில்
போதையோடு வாழும்
எதிர்கால சமூகம்
சர்வ சாதாரணமாய் போகும்.

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர்
தோப்பூர் குறூப் நிருபர்

## சந்தோஷிப்போம் நாம்!!



அன்பே நீ வேண்டும்
தினந்தோறும் அருகில்
கிழக்கு வானில்
சூரிய ஒளிக்கீற்றாய்!!
நீண்டு செல்லட்டும்
உன் நினைவுகள்!
நீ இல்லாத பொழுதுகள்
சுருங்கிவிடட்டும் எளிதில்!!

உன் நினைவுகள் எனக்குள்
என்றும் ஓங்கி எழும்பட்டும்!
நீ இல்லா தருணங்கள்
தினம் எனக்கு மரணங்கள்!
பாலைவனத்தில் நீரையும்
கற்குகையில் ஒளியையும்
தேடுவதாய் அமைகிறது
நீ இல்லாத பொழுதுகள்!

வீடு நிறைய வசதிகள்
இருந்தும் இல்லை ஆனந்தம்
என்னருகே நீயில்லை என்பதால்!
நீ வேண்டும் எனக்கு!
இரவே சீக்கிரம் போ
விடியலே சீக்கிரம் வா
எந்தன் பொன்மணி முகம் பார்க்க!!
எந்தன் கண்மணி கரம் கோர்க்க!!

கடமைக்காகப் பிரிந்தாய்
நேர்மைக்காக வளர்ந்தாய்
ஆசிரியர்களுக்கு ஆசான் நீ
மற்றையவர் மடமையை அகற்றுவாய்
பேரானந்தம் உண்டு வாழ்வில்!
உலகில் கல்வித் தீபமேற்றி
அதன் ஒளியில்
சந்தோஷிப்போம் நாம்!!

கவியரசி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால

## எனது முதற் சிரிப்பு

முன்னொரு காலத்தில்
நான் சிந்திய முதற் சிரிப்பு
ஒரு துளியும் மாறாமல்
இப்போதும் அப்படியே
வரவேற்பு மண்டப அறைச் சுவற்றில்
புத்தம் புதிதாய் வழிகிறது

அது பெருக்கெடுத்து
அறை முழுவதும் பரவுகிறது ஒளி
வீட்டுக்கு வரும் அனேக விருந்தாளிகளின்
கவனத்தை ஈர்த்து
மனதை கொள்ளை கொள்கிறது

என் குழந்தை முகத்தை பார்த்து
பதிலுக்கு மெல்லிய புன்னகையை
சொரிந்த பின்னர்தான்
அவர்கள் அமர்ந்து கொள்கின்றனர்

தேநீர் அருந்துகையில்
எனது சிரிப்பு பற்றி சிலாகித்து
வியந்து பேசத் தவறுவதில்லை
அத்தனை வசீகரம் மிக்கது
எனது முதற் சிரிப்பு



திரும்பிச் செல்லும் போது
பறக்கும் முத்தமொன்றை
எனக்கு பரிசளித்துச் செல்கிறார்கள்

இத்தனைக்கும் நான் தற்போது
நதியில் நீந்திக் கொண்டிருக்கிறேன்

சிதறிய சில்லறை குற்றிகளென
வீடு முழுவதும்
ஒலிக்கிறதென் சிரிப்பு

ஆதியிலிருந்து புகைபபடங்கள் மட்டும்தான்
நினைவுகளின் வர்ணங்களை உதிர்க்கின்றன

ஜமீல்

## பெண்ணே அதோ பார் தோரணங்கள்


கருங்கற்ப் பாறையைப்
பெயர்த்தொரு நீர்ச் சுனையெனப்
பிரவாகமெடுக்கிறேன்..
எனைக் குவளைக்குள் குடியமர்த்திடக்
குறி வைக்கின்றதொரு கும்பல்...

தரிசு நிலமொன்றின் பிளவுகளில்க்
கருக் கொண்டு முளைத்தெழுகையில்...
முறித்துப் போட்டிட முன்னாயத்தங்கள்
முடிந்திருக்கின்றன......

தீப்பிழம்புகளில் வெந்து பொசுங்கிச்
சாம்பல்களை உதறி யொரு பீனிக்ஸ்
பறவையாய் உயிர்த்தெழுகையில்
எனைச் சிறைப்பிடிக்க கையில்
கூண்டுகளுடன்
கையர்களங்கே...

ஆழ்கடலில் மூழ்கி அல்லலுற்று
முத்தெடுத்துக் கரை சேர்கையில் ....
எனைக் காவு கொள்ள
விரைகின்றதொரு கழுகு....

அடர் வனமொன்றில் தனித்துத் தவித்த
பொழுதொன்றில் பாதை தேடிய
பரிதவிப்புக்களில் வேட்டையாடத்




துரத்துகின்ற தொரு ஓநாய்க் கூட்டம்....

வழியினில் பரவியிருக்கும்
முற்குவியல்களில் வலி யேற்கிறேன்...
விழுகிறேன் விழி யழுகிறேன்...
ஆனாலும் மீண்டெழுகிறேன்....

என் பாதங்களி னின்றும் வழிந்த குருதிச்
சொட்டுக்களில் பூத்துச் சிரிக்கின்ற திறந்த
ரோஜாத்தோட்டத்தில் ஒரு தோரணம்
கட்டிடக் காத்திருக் கின்றதென் எதிர்காலம்.

மக்கொனையூராள்

## மலைச்சாரல்



# நீரருந்த வரும் உயிரினங்கள் உயிரிழக்கும் ஆபத்து

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிட்டிய சூரியவெவ பெலி கல்லவெவ குளத்தில் நீரருந்த வரும் உயிரினங்கள் அதனைச்சுற்றிய நிலப்பரப்பிலுள்ள சேற்று நிலத்தில் சிக்கி உயிரிழப்பதாக பரவலாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் அனுமதி பெற்று வியாபாரிகள் இவ்விடத்தில் பாரியளவில் மண்ணை வெட்டி கிடங்குகள் குழிகளை வெட்டி பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றனர் என பிரதேச மக்களும் சுற்றாடல் சமூக ஆர்வலர்களும் தெரிவிக்கின்றனர்.

பல அபிவிருத்திப் பணிகளை பொறுப்பேற்றுள்ள பாரிய கம்பனிகள் அரசாங்கத்தின் அனுமதிப்பத்திரத்துடன் அவற்றுக்கான மண் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக குளத்தின் கரைகளை ஆழமாக வெட்டி மண்ணை வாகனங்களில் அள்ளிச் செல்வதால் இந்நிலைமை ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இயற்கையும் பசுமையும் நிறைந்த வனத்தின் மத்தியில் அமைந்துள்ள குளத்தினை சூழ மண்வெட்டுதல், ஆழமான குழிகள் கிடங்குகள் , குளத்தைச் சுற்றி நீர் நிரம்பியுள்ளமையினாலும் இதனை அருந்தாது நீரருந்த குளக்கறைக்கு வரும் மிருகங்கள் பிராணிகள் இவற்றில் விழுந்து உயிரிழப்பதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலைமை குறித்து அதிகாரிகள் மற்றும் பொறுப்பானவர்களுக்கு அறிவித்துள்ள போதிலும் உரியவர்கள் அலட்சியத்துடன் செயற்படுவதனால் குளமும் உயிரினங்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## இராகலை நகரில் பாரிய ஆர்ப்பாட்டம்

ஹற்றன் சுழற்சி நிருபர்)

நுவரெலியா, வலப்பனை கல்வி வலய பாடசாலைகளின் கல்வி சமூகத்தினர், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இராகலை பிரதேச பொது மக்கள் இணைந்து அரசுக்கு எதிராகவும், மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கை பிரச்சினை தொடர்பாகவும் இராகலை நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியை முன்னெடுத்தனர்.

இராகலை பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக கூடிய கல்வி சமூகத்தினர், மற்றும் பொதுமக்கள் தலையில்கறுப்பு பட்டி அணிந்து, அராஜகத்தை நிறுத்து, மக்கள் அதிகாரமே வெல்க, வக்கற்ற அரசே வாய் கிழிய பேசாதே, அரச அராஜகத்தை உடனே நிறுத்து, கொள்ளையடித்த பணத்தை மக்களுக்கே திருப்பி கொடு, தள்ளாதே தள்ளாதே பட்டினி சாவுக்கு தள்ளாதே, கள்ளனே வெளியேறு காயப்பட்டவர்களின் கூக்குரல் இது, மந்திகள் ஆட்சி மந்த ஆட்சி, என வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தி போராட்ட பேரணியை முன்னெடுத்தனர். இப் போராட்ட பேரணி இராகலை முருகன் ஆலயத்தை வந்தடைந்து அங்கு ஒன்று கூடி குரல் எழுப்பினர்.

**எம்பிலிப்பிட்டிய செவனகல பிரதேசத்தில்**

## கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிட்டிய செவனகல பிரதேசத்தில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். தனிப்பட்ட குரோதம் காரணமாக இருவருக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் கொலையில் முடிந்துள்ளதாக விசாரணைகளை நடத்திவரும் செவனகல பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். உயிரிழந்தவர் சூரியவெவ பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபர் என தெரியவருகின்றது. வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் இவர் உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.





நகர அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபா செலவில் உக்குவளை நகரில் நிர்மாணிக்கப்பட்ட நடைபாதையை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன திஸாநாயக்காவால் நாடா வெட்டி பாதையை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## ஹற்றனில் அரச ஊழியர்கள் போராட்டம்

ஹற்றன் விசேட நிருபர்



அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று பகல் உணவு ஒய்வு நேர வேளையில் ஹற்றன் பிரதேசத்திலுள்ள அரச ஊழியர்கள் ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்த்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கல்வி துறை சார்ந்த ஊழியர்கள், தபால் திணைக்கள ஊழியர்கள், டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் தாதியர்கள், வைத்தியர்கள் சிற்றூழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கல்வி மற்றும் ஏனைய அரச ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் ஹட்டன் டிக்கோயா நகர சபைக்கு முன்பாக ஆரம்பித்தது. ஆர்ப்பாட்டகாரர்கள் உலகத்தின் முன் தாய் நாட்டை கேவலமாக்காதே,பசிக்கு நிறம்,மதம் கிடையாது, விலை குறை அடுத்த தலைமுறை வாழ வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை காட்சிப்படுத்திய வண்ணம், ஊர்வலமாக வந்து மணிக்கூட்டு கோபுரத்தின் முன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள்,தாதியர்கள்,சிற்றூழியர்கள் உட்பட வைத்தியசாலையில் பணிபுரியம் ஊழியர்கள் டீசல் இல்லை, கவலைக்கிடமான நிலையில் இலவச சுகாதார சேவை, சுகாதார சேவையை பாதுகாப்போம்,பிள்ளைகளின் கல்வியினை பாதுகாப்போம். போன்ற வாசகங்களை எழுத்திய சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம், கோஷமிட்டனர்.

## கம்பளை ஆதார வைத்தியசாலையில் ஆர்ப்பாட்டம்

கம்பளை நிருபர்



கம்பளை ஆதார வைத்தியசாலையில் இன்று அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது,கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக கம்பளை நாவலப்பிட்டி பிரதான வீதியில் பேரணியாக சென்று வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு, பெற்றோல், டீசல் தட்டுப்பாடு போன்ற காரணங்களை முன்வைத்தனர்.

பதாதைகள் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டம் செய்தனர். கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனைத்து அரச ஊழியர்களும் கலந்து கொண்டு இருந்தனர்.

இதில் வைத்தியர்களும் கலந்து கொண்டு இருந்தமை குறிப்பிடத் தக்கது .

# கிழக்கின் குரல்



பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளை

## மீறியமைக்காக நடவடிக்கை எடுக்கக் கோரி சபாநாயகருக்கு கடிதம்

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*



பாராளுமன்றத்துக்கு தலைமை தாங்குகின்ற தகுதி, அருகதை ஆகியவற்றை பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் இழந்துவிட்டார் என்று குற்றம் சாட்டி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எஸ். எம். எம். முஷாரப் வியாழக்கிழமை எழுத்து மூல முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளவை,..

சாணக்கியன் இராசமாணிக்கம் பாராளுமன்ற உறுப்பினராகவும், பாராளுமன்றத்துக்கு தலைமை தாங்குகின்ற ஒரு உறுப்பினராகவும் இருந்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறிமுறைகளை மீறி நடந்துள்ளார்.

இவரின் நடவடிக்கை ஒழுக்க விழுமியங்களுக்கு புறம்பானது மாத்திரம் அல்ல பாராளுமன்றத்தின் சம்பிரதாயத்துக்கும் மாறானது ஆகும். சக பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறி உள்ளது. கடந்த 05 ஆம் திகதி நான் பாராளுமன்றத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தபோது அவர் குறுக்கிட்டு இடையூறுகள் ஏற்படுத்தினார்.

மாத்திரம் அல்ல 5000 ரூபாய் பணத்தை எனக்கு அன்பளிப்பு செய்ய முயன்று நான் பணத்துக்கு விலை போகின்றவன் என்று காண்பித்து எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துகின்ற வகையில் நடந்தார்.

இவரின் முறைகேடான நடத்தை எனது நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி இருப்பதுடன் எனக்கும், எனது பதவி மற்றும் அந்தஸ்து ஆகியவற்றுக்கும் அவமானத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதை தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டு வருகின்றேன். இதனால் இவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றேன்.

## புதுமண்டபத்தடியில் அஞ்சலகம் இன்மையினால் பொதுமக்கள் அவதி

*மண்டூர் குறூப் நிருபர்*

வவுணதீவு செயலகத்திற்குட்பட்ட புதுமண்டபத்தடி கிராமத்தில் அஞ்சல் அலுவலகம் இன்மையினால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரிய அவதி நிலைக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுணதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 24 கிராம சேவையாளர் பிரிவுகளில் 13 கிராம நிலதாரிப் பிரிவுகளை உள்ளடக்கிய புதுமண்டபத்தடி பிரதேசத்தில் தபால் கந்தோர் இன்மையினால் பொதுமக்கள் அதிக தொலைவிலுள்ள கன்னன்குடா கிராமத்திற்கு சென்றே அஞ்சல் அலுவலக கருமங்களை செய்வதாக தெரியவருகிறது.

குறிஞ்சாமுனை, கன்னன்குடா, கரையாக்கான்தீவு, மண்டபத்தடி, கிளிவையடி, காயன்மடு, பருத்திச்சேனை, களிமடு, இருட்டுச்சோலைமடு, நடராஜானந்தபுரம், பிள்ளையாரடி, மூண்டாளமடு, களையடிக்குளம், பொன்னாங்கன்னித்தோட்டம் ஆகிய பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த முதியோர்கள் மற்றும் பொதுமக்கள் மாதாந்த கொடுப்பனவு உட்பட பல்வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்ள அதிக பணம் கொடுத்து முச்சக்கர வண்டியிலும் வறுமைக்குட்பட்டவர்கள் கால்நடையாக நடந்து சென்று வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராம மக்களின் அத்தியாவசிய அஞ்சல் அலுவலக தேவை கருதி சகல வசதிகளுடன் கூடிய அஞ்சலகத்தினை அமைத்துத் தருவதற்கு அஞ்சல் அத்தியட்சகர், அரச அதிபர் உட்பட மக்கள் பிரதிநிதிகள் உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மட்டு. குருக்கள் மடத்தில் விபத்து; இளைஞன் மரணம்

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் குருக்கள் மடம் முருகன் கோயிலுக்கு முன்பாக புதன்கிழமை மாலை தான் செலுத்திய மோட்டார் சைக்கிளின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருக்கள் மடத்தைச் சேர்ந்த 22 வயதான எம்.ரதீசன் என்ற இளைஞரே மின்கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருக்கள் மடத்திலேயே இச் சோக சம்பவம் இடம் பெற்றுள்ளது.

விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஸ்மார்ட் தடுப்பூசி அட்டை

*அக்கரைப்பற்று வடக்கு நிருபர்*

அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து வெளிநாடு செல்வதற்கு தேவையுடையவர்கள் தங்களுக்குரிய ஸ்மார்ட் தடுப்பூசி அட்டையை வார நாட்களில் மாலை 3 மணியிலிருந்து 4 மணிக்குள் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.ஏ.காதர் தெரிவித்துள்ளார்.

இந்த அட்டையை பெற வருபவர்கள் தடுப்பூசி அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு பிரதி ஆகிய ஆவணங்களுடன் வருகை தந்து இதனை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொறிக்கப்பட்ட விலையை விட கூடுதலாக விற்பனை; பொது மக்கள் முறைப்பாடு

*ஒலுவில் விசேட நிருபர்*

அம்பாறை மாவட்டத்தில் சில வர்த்தக நிலையங்களில் அத்தியவசியப் பொருட்களில் பொறிக்கப்பட்ட விலையினை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக, அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை சாதகமாக பயன்படுத்தி அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு அத்தியவசியப் பொருட்களை விற்பனை செய்வதாகவும் முறையிட்டுள்ளனர்.

பொருட்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை விற்பனை செய்தல், காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல் தொடர்பாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்





*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் வெள்ளிக்கிழமை (8) நண்பகல் வேளையில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், மற்றும் ஏனைய ஊழியர்கள் அடங்கலாக பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பதாகைகளை ஏந்தியவாறு களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் முன்னால் பேரணியாக வந்து கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, மருந்துகளைத் தடையின்றி வழங்கு, ஆரோக்கியத்தை அழிக்காதே, எரிபொருளை தடையின்றி வழங்கு, பொருளாதார நெருக்கடியைச் சீர்செய், விலை அதிகரிப்பை உடனடியாகக் குறை, நாட்டை படுகுழிக்குள் தள்ளாதே, மக்களின் அசௌகரியங்களைப் போக்கு, வன்முறையைத் தூண்டாதே, பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாழாக்காதே உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## ஆனைபந்தி ஸ்ரீ சித்தி விக்கினேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த கொடியேற்றம்

*மட்டக்களப்பு விசேட நிருபர்*



மட்டக்களப்பு புளியந்தீவு ஆனைபந்தி ஸ்ரீ சித்தி விக்கினேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ திருவிழா நேற்று முன்தினம் (07) நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ குமார பிரபாகரக குருக்கள் தலைமையில் விசேட கிரியைகள் வழிபாடுகள் இடம் பெற்றதை தொடர்ந்து வருடாந்த மகோற்சவ கொடியேற்றம் இடம்பெற்றது.

10 நாட்கள் திருவிழாவில் 8ம் திருவிழாவான திருவேட்டை திருவிழா, 9ம் திருவிழாவான தேர்த்திருவிழா இறுதி திருவிழாவான தீர்த்தோற்சவம் 16.04.2022 அன்று நண்பகல் அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தகேணியில் இடம் பெறவுள்ளது.

தினசரி காலை, மாலை அபிசேகத்துடன் திருவிழாக்கள் இடம் பெறவுள்ளதுடன் நண்பகல் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம் பெறவுள்ளதுடன் இரவு திருவிழாவின் போது சுவாமி வெளிவீதி வலம் வருதல் இடம்பெறவுள்ளது.

## கிழக்கு மாகாண அமைச்சர் சுபைருக்கு சமாதானத் தூதுவர் விருது



*பாலமுனை விசேட நிருபர்*

இலங்கை சமாதான கற்கைகளுக்கான நிலையம் ஒழுங்கு செய்திருந்த சர்வதேச கல்வி, சுற்றுலா தொடர்பான ஆராய்ச்சி மாநாடு அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சமாதான கற்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பலர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலையான அபிவிருத்திக்கு, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பங்காற்றிய கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், ஏறாவூர் நகர சபை உறுப்பினருமான எம்.எஸ்.சுபையிர் இம்மாநாட்டின் போது சமாதான தூதுவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ரோஹித போகொல்லாகம, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், முன்னாள் அமைச்சர் அலிசாஹிர் மௌலானா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு கல்வியலாளர்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் அதிபர் க.செல்வராஜா தலைமையில் மாணவர்களுக்கான பச்சை வர்ண பதக்கம் சூட்டும் நிகழ்வு நடைபெற்றது. இதில் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் நிசாந்தன் அட்ஸனா, பிரதி அதிபர்களான பி.இராதகிருஸ்ணன், பி.சண்முகநாதன், சுற்றாடல் முன்னோடிக்கழக பொறுப்பாசிரியை எஸ்.சாந்தலிங்கம் உட்பட பகுதித்தலைவர்களும் கலந்து கொண்டனர்.
(படம்: பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

## அம்பாறை வைத்தியர் சங்கத்தின் ஆர்ப்பாட்டம்

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*



அம்பாறை வைத்தியர் சங்கம் ஒழுங்கு செய்திருந்த பிரமாண்டமான கவனயீர்ப்பு போராட்டம் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்குரிய மருந்துகள் இல்லாமை, நோயாளி காவு வண்டிக்கு (அம்பியூலன்ஸ்) எரிபொருள் இல்லாமை, நினைவு மயக்கும் மருந்து இல்லாமை போன்ற போன்ற பல்வேறு காரணங்களை முன் வைத்து இந்த கவனயீர்ப்பு போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



பேருவளை மஸ்சல சமட் மாவத்தை பிரைட் சிறுவர் பாடசாலையின் 'பிரைட் சிறுவர் சந்தை' அண்மையில் பிரைட் சிறுவர் பாடசாலையில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

# பூண்டுலோயா பி. சிநேகா விளையாட்டு துறைகளில் சாதனை



*மாவத்தகம தினகரன் நிருபர்*

பூண்டுலோயா பி. சிநேகா என்ற மாணவி பல்வேறு விளையாட்டுத் துறைகளில் சாதனைகளை நிலை நாட்டிவரும் ஒருவர். இவர் ஆரம்ப கல்வி முதல் க. பொ. த. சாதரண தரம் வரை பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார்.

இவர் 2021 ஆண்டு தெற்காசியா விளையாட்டுப் போட்டி நேபாளம் காத்மண்டுவில் நடைபெற்றது " இதில் அட்டையா பட்டையா " என்கின்ற விளையாட்டுப் போட்டியில் இலங்கை அணிசார்பாக விளையாடி நாட்டுக்கு பெருமை தேடித் தந்த ஒருவர்.

அட்டையா பட்டையா என்னும் விளையாட்டு இலங்கையில் விளையாடும் கிளித்தட்டு விளையாட்டைப் போன்றதாகும். இலங்கை சார்பாக கலந்து கொண்ட மலையக அணி ஏனைய நாடுகளுடன் விளையாடி இறுதியாக இந்திய அணிக்கு எதிராக விளையாடிய போது இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் கபடி விளையாட்டு அணியில் விளையாடிய ஒருவர். அந்த அணியினரே இந்த அட்டையா பட்டையா என்கின்ற விளையாட்டில் கலந்து கொண்டனர்.

இரு பக்கமும் எட்டுப் பெட்டிகள் போட்டு இருப்பார்கள். கிளித் தட்டுவிளையாட்டு பயிற்றுவிப்பாளர் அந்தோனி செபஸ்தியன்ராஜ் தான் இதற்கான பயிற்றுவிப்பாளராக கடமையாற்றினார்.

# ரக்பி சங்க தடைக்கு எதிராக நீதிமன்றம் செல்லும் ரிஸ்லி இல்யாஸ்

சர்வதேச ரக்பி சம்மேளனம் மற்றும் ஆசிய ரக்பி யூனியனில் செயலில் அங்கம் வகிக்கும் இலங்கை ரக்பி சம்மேளனத்தின் தற்காலிக இடைநிறுத்தம் தன்னிச்சையான மற்றும் சட்டவிரோதமான செயல் என்றும், இது வேண்டுமென்றே எடுக்கப்பட்ட செயல் என்றும் இலங்கை ரக்பி ஸ்ரீலங்காவின் முன்னாள் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் உரிய கவனம் செலுத்தாமல் நீதி மன்றத்திற்கு செல்ல நிர்வாக குழு தயாராகி வருகிறது.

இருப்பதாக தினகரனுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ரக்பி செயற்குழு ஏற்கனவே சட்ட ஆலோசனைகளை பெற்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

ரக்பி விளையாட்டுத்துறைக்கு தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரியவிற்கு சட்ட உரிமை மீறல் தொடர்பில் விளக்கமளித்து ரக்பி தலைவரின் கையொப்பத்துடன் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆதாரமற்ற உண்மைகளின் அடிப்படையில் ரக்பி நிறுவனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை ரக்பி நிறுவனத்தின் நிர்வா



கத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையோ, கருத்தோ பரிந்துரைக்கப்படவில்லை எனவும், ரக்பி நிறுவனத்தின் செயற்பாடுகளை சீர்குலைக்கும் நோக்கில் இந்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச பதவி விலகியதன் பின்னர் விளையாட்டு அமைச்சு செயற்படவில்லை எனவும், ஒலிம்பிக் கமிட்டியின் உறுப்பினர் என்ற வகையில் ரக்பி விளையாட்டு ஒலிம்பிக் சாசனத்திற்கு கட்டுப்பட்டிருப்பதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, நிறுவனத்தின் செயற்குழுவின் அனுமதியின்றி ரக்பி நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்த முயற்சித்தால், அத்தகைய கடுமையான நிதிப் பயன்பாட்டிற்கு எதிராக உரிய அதிகாரிக்கு எதிராக நிதிக் குற்றவியல் குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

உலக ரக்பி சம்மேளனத்தின் தலைவர், உலக ரக்பி ஆசிய பிராந்தியத்தின் ஒருங்கிணைப்பு முகாமையாளர், ஆசிய ரக்பி ஒன்றியத்தின் தலைவர் மற்றும் தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் ஆகியோருக்கு கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ........................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ........................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ........................
வாக்களித்தவர் பெயர் : ........................
முகவரி : ........................
மொபைல் இல. : ........................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 09-04-2022 இல. 02




# இலங்கை கிரிக்கெட் பயிற்சிக் கல்விப் பிரிவு ஐ.சி.சி.யின் ஆதரவுடன் இருமொழிப் பாடத்திட்டம் ஆரம்பிப்பு

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) இலங்கை கிரிக்கெட் பயிற்சியாளர்களுக்கான உலகளாவிய பயிற்சி மற்றும் கல்வித் திட்டங்களின் மற்றொரு கட்டத்தை அண்மையில் தொடங்கியது. இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்படும் இந்தப் பயிற்சி மற்றும் கல்வித் திட்டம், பயிற்சியாளர்களாக வருவதற்குத் தேவையான அடிப்படை அறிவின் தொகுப்பாகும்.

இலங்கை கிரிக்கெட் பயிற்சிக் கல்விப் பிரிவின் ஊடாக நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டம், தொழில்நுட்பத்தினூடாக தமது அறிவை மேம்படுத்தும் நம்பிக்கையுடன் தற்போது பயிற்சியில் ஈடுபட்டுள்ள பயிற்றுவிப்பாளர்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும்.

*ICC Foundation Course*, முழுமையாக இணையத்தில் விநியோகிக்கப்படுகிறது, இது கிரிக்கெட்டின் அடிப்படையான வீரர்களின் பாதுகாப்பு, வீரர்களை ஒன்றாக வைத்திருப்பது, வீரர்களின் திறமைகளை அங்கீகரிப்பது மற்றும் பயிற்சியாளரின் பங்கு போன்றவற்றில் கவனம் செலுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வாழ்க்கை முறைக்கு நேரத்தை ஒதுக்குவது கடினம் என்றாலும், இந்த சமீபத்திய முறையானது பயிற்சியாளர்களுக்கு எந்த நேரத்திலும் அவர்களின் கல்வி அறிவை மேம்படுத்துவதற்கான




வாய்ப்பை வழங்குகிறது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டம் குறித்து இலங்கை கிரிக்கெட்டின் உயர் செயல்திறன் மையத்தின் தலைவர் டிம் மெக்கஸ்கில் கருத்துத் தெரிவிக்கையில், "இது உயர் செயல்திறன் மையத்தின் கீழ் உள்ள பயிற்சிக் கல்விப் பிரிவின் தலைசிறந்த படைப்பாகும்.

பயிற்சியாளர்களின் தேவைகளை அவர்கள் சரியாகக் கண்டறிந்து, நாட்டில் உள்ள அனைத்து ஆர்வமுள்ள பயிற்சியாளர்களும் தங்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய ஒரு தளத்தை உருவாக்கியுள்ளனர். இதில் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், பயிற்சியாளர்கள் தங்கள் கல்வியை அவர்கள் விரும்பும் மொழியில் கற்கும் திறனைக் கொண்டுள்ளனர்.

ஆங்கில மொழிக்கு மேலதிகமாக, பயிற்சியாளர்களுக்கு சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிலும் இந்த பாடநெறியை கற்க வாய்ப்பு உள்ளது. திறமையான பயிற்சி மற்றும் வேடிக்கையான விளையாட்டு சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பதை பயிற்சியாளர்கள் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இங்குள்ள மற்றொரு சிறப்பு.

"ஐசிசியின் டிஜிட்டல் வளப் பயன்பாடு (கல்வி மென்பொருள்) புதிய பயிற்சி முறைகள் மற்றும் அவற்றின் உள்ளடக்கத்தை வெளியிடுவதில் எங்களுக்கு ஒரு சிறந்த அனுபவமாக உள்ளது. உண்மையில், இதன் மூலம், எமது வெளியூர்களில் உள்ள பயிற்சியாளர்கள் இணையத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பயிற்றுவித்தல் பற்றிய பெரும் அறிவையும் பலத்தையும் பெற முடியும், "என்று இலங்கை கிரிக்கெட்டின் அபிவிருத்தித் தலைவர் தாரக சமரதுங்க தெரிவித்தார்.





அக்கரைப்பற்றில் இயங்கி வரும் வோக்கஸ் யூனியனின் வருடாந்த விளையாட்டு போட்டிகள் நீர் பூங்காவில் நடைபெற்றது. யூனியனின் தலைவர் ஜெயினுத்தீன் தலைமையில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் நடைபெற்ற இப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அஹமட் சக்கி கலந்து கொண்டார். அமைப்பின் அங்கத்தவர்களுகிடையில் சிநேகபூர்வமாக நடைபெற்ற இப்போட்டியில் வயது வித்தியாசமின்றி ஆண், பெண் இரு பாலரும் கலந்து கொண்டனர். படங்கள் :பாலமுனை தினகரன் நிருபர்

# பாடசாலை மட்ட உதைபந்தாட்ட தர வரிசையில் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி முன்னிலையில்

*பேருவளை விசேட நிருபர்*

கொழும்பு குதிரை பந்தய திடல் சர்வதேச மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி ஒக்ஸ்போட் கிண்ண கால்பந்தாட்ட இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) போட்டித் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. தொடரின் சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் அஹமட் நிபால் பெற்றுக்கொண்டார். இந்த சர்வதேச மைதானத்தில் அஹமட் நிபால் தனதாக்கிக் கொண்ட இரண்டாவது சிறந்த கோல் காப்பாளருக்கான விருது இது என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கை பாடசாலை மட்ட கால்பந்தாட்ட வரலாற்றில் தனக்கென தனியிடம் பிடித்துள்ள களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியை (தேசிய பாடசாலை) கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உட்பட கல்லூரியின் ஆசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர்.



இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 9ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.